
மேலும் பல புத்தகங்களை இலவசமாக பெற்றுக்கொள்ள, விலைக்கழிவுடன் புத்தகங்களை வாங்க இணையுங்கள் - பேசும் புத்தகம் வாடஸ்அப் குழு



கொரோனாவின் கொடூரமும் கிறிஸ்து தரும் நம்பிக்கையும்

பாடுகளில் ஆறுதல், பாவத்தில் எச்சரிக்கை, பயத்தில் நம்பிக்கை



எம். மார்க் அல்ரோய்

ஆசிரியர் முனைவர் எம் மார்க் அல்ரோய் பற்றி




+94777572414

markalroy@gmail.com

பன்னாட்டு இறையியல் கல்லூரிகளில் கல்வி கற்பிக்கும் முனைவர் எம். மார்க் அல்ரோய் (Mark Alroy Mascrenghe) PGD, MIT (CSU), MBA (USJ), MA, PhD (UCT), அவர்கள், University of Cape Townஇல் Honorary Research Associate ஆக உள்ளார். இவர் "கிறிஸ்துவை நோக்கி-மாற்கு விளக்கவுரை", "கீழ்ப்படிதலை நோக்கி-யோனா விளக்கவுரை" ஆகிய நூல்களின் ஆசிரியரும் ஆவார். இவர் எழுதிய 10ற்கும் மேற்பட்ட நூல்கள் பல நாடுகளில் பயன்படுத்தப்படுவதுடன், இவரது ஆங்கில எழுத்துக்கள் De Gruyter, Langham, SBL, Springer, Routledge, Abc-Clio, போன்ற பதிப்பகங்களால் மேற்குலகில் வெளியிடப்பட்டுள்ளன. இவரது ஆங்கில நூல்களில் சில: Samson as God's Adulterous Wife (Peter Lang, 2019), Rhetoric Reconsidered (Palgrave Macmillan, 2026). அமெரிக்காவின் Biblica ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் செய்யப்பட்ட இலகு தமிழ் மொழிபெயர்ப்பின் மொழிபெயர்ப்புக் குழுவிலும் இவர் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார்.

எம். மார்க் அல்ரோயின் பிற நூல்கள்
























தெய்வத்தில் தெய்வமானவர்: நிசேயப் பற்றுறுதியின் விளக்கவுரை

இன்றைக்கு 1700 ஆண்டுகளுக்கு முன், கி.பி. 325 இல் உருவானதே இந்த நிசேயப் பற்றுறுதி - நைசிய விசுவாச அறிக்கை. கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படைச் சத்தியங்களை தொகுத்து வெளிப்படுத்தும் இந்தப் பற்றுறுதி - விசுவாச அறிக்கை - கிறிஸ்துவின் தெய்வீக இயல்பை வெளிப்படுத்திய திருச்சபையின் வரலாற்றுச் சாட்சியாகும். இவ்வறிக்கை மட்டும் உருவாகாமல் இருந்திருந்தால், திருச்சபையின் சரித்திரத்தில் இயேசுவின் இறைத்தன்மை கேள்விக்குறியாகவே போயிருக்கும்.

இயேசு கிறிஸ்து இறைவனா? இறைக்குமாரனா? இறைக்குமாரன் என்றால், அவர் இறைவனை விட தகுதியில் குறைந்தவரா? போன்ற பல கேள்விகளுக்கு விடையளித்த இந்தப் பற்றுறுதி இன்றும் பொருத்தமானதாகவே உள்ளது. இந்நூல், அந்த அறிக்கையின் ஒவ்வொரு பகுதியையும் ஆழமாக ஆராய்ந்து, அவர் "தெய்வத்தில் தெய்வமானவர்" என்ற கருத்தை மையப்படுத்தி, வரலாற்று, இறையியல், வேதாகம மற்றும் சமகால கோணங்களில் இருந்து விளக்குகிறது. இது வெறும் கோட்பாட்டு நூல் மட்டும் அல்ல; திருச்சபையின் வாழ்விலும், சாட்சியத்திலும் கிறிஸ்துவின் பங்கைக் குறித்து ஆழமான புரிதலை அளிக்கும் ஓர் உயிரோட்டமிக்க விளக்கமாகும்.

ஏழு நாடுகளில் வாழும் 21 தமிழ் இறையியலாளர்கள்-வேத அறிஞர்கள் இணைந்து எழுதியுள்ள இந்நூல், நைசிய இறையியலின் நம்பிக்கையின் அடிப்படையில், பல்வேறு கண்ணோட்டங்களைக் கொண்ட குரல்களை ஒருங்கிணைக்கிறது. தமிழ் கூறும் கிறிஸ்தவ நல்லுலகில் உள்ள சிறந்த வேத அறிஞர்கள் பலரையும் இறையியலாளர்கள் பலரையும் ஒன்றாக இணைக்கும் ஒரு கன்னி முயற்சி. பல நாடுகளையும் பின்னணிகளையும் சேர்ந்தவர்கள் நிசேயப் (நைசிய) பற்றுறுதியின் விசுவாசத்தின் அடிப்படையில் ஒன்றாக இணைந்திருக்கிறார்கள்!




மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி?

இச்சிறு நூல் சந்தோஷமாக வாழ்வது எப்படி என்பதை நமக்கு கற்றுத் தருகிறது. இது தற்காலத்திற்கு தேவையான ஒன்று. இன்றைக்கு நமது சமூகத்தில் மன அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. மனிதர்கள் கவலைகளை மறப்பதற்காக போதை வஸ்துக்களை நாடுகிறார்கள். நாம் சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் பல விஷயங்களைப் பற்றி நமது சிந்தனைகளை மாற்ற வேண்டியிருக்கிறது.

முதலில் நாம் நம்மைப் பற்றி சரியாக சிந்திக்க வேண்டும். இன்று நமது சமூகத்தில் இருக்கும் பல பிரச்சனைகளுக்கு மூல காரணம் மனிதர்களுக்கு இருக்கும் தாழ்வு மனப்பான்மை தான். மேலும் சந்தோஷத்திற்கு மிகப்பெரிய முட்டுக்கட்டை கவலையே. இந்தக் கவலையின் சாராம்சம் என்ன தெரியுமா? பிரச்சனைகள் யார் கையில், நமது கையிலா அல்லது கடவுளின் கையிலா என்பதுதான். கவலை என்பது பிரச்சனைகளை நமது கையில் எடுத்துக் கொள்ளும் முயற்சி. ஜெபம் என்பது காரியங்களை கடவுள் கையில் கொடுக்கும் பயிற்சி. ஜெபம் சரித்திரத்தை மாற்றுவது மட்டுமல்ல, ஜெபிக்கின்றவர்களையும் மாற்றுகிறது.

நமது வாழ்வில் நாம் என்னத்தை மதிக்கிறோம்? எதற்காக வாழுகிறோம்? வெட்கப்பட வேண்டிய விஷயங்களுக்காக பெருமைப்படுகிறோமா?

நமக்கு சந்தோஷம் இல்லாததிற்கு முக்கியமான காரணம் அன்பு இல்லாதது தான். சுயநல நோக்கங்களைக் கொண்டு நாம் செயல்படுகிறோமா அல்லது தாழ்மையோடு மற்றவர்களை நினைத்து செயல்படுகிறோமா? கடந்த காலத்தின் கசப்புகளை சுமந்து கொண்டு நாம் வாழக்கூடாது. கசப்புகளோடு வாழ்வது பிரேக்கை அழுத்திக் கொண்டு கார் ஓட்டுவதைப் போன்றது. அது காருக்கும் ஆபத்தானது, நமக்கும் ஆபத்தானது. பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி நமது வாழ்க்கை போகவேண்டும்.இன்னும் பல விஷயங்கள் உள்ளே!




"கீழ்ப்படிதலை நோக்கி - யோனா விளக்கவுரை" என்ற இந்த நூல், இந்தியாவில் 'வேர்ட் ஆ்ஃப் கிரைஸ்ட்' (Word of Christ) நிறுவனத்தாலும் இலங்கையிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்ட ஒரு தனித்துவமான விவிலிய ஆய்வு நூலாகும். முற்றிலும் உறுதியான சுவிசேஷ (Solidly Evangelical) இறையியல் கோட்பாடுகளின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ள இந்நூல், யோனா தீர்க்கதரிசன புஸ்தகத்தை ஆழமாகப் படிக்க விரும்பும் எவருக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைகிறது. இந்த விளக்கவுரையின் மிக முக்கியமான சிறப்பம்சம் என்னவென்றால், இதில் மூல மொழியான எபிரேய உரையையும் தமிழையும் ஒப்பிட்டுப் படிக்கும்படியான 'எபிரேய-தமிழ் இன்டர்லீனியர்' (Hebrew-Tamil Interlinear) முறை கையாளப்பட்டுள்ளது. இதன் மூலம் வாசகர்கள் மூல மொழியின் ஆழமான அர்த்தங்களை மிக எளிதாகத் தமிழ் மொழியிலேயே நேரடியாகப் புரிந்து கொள்ள முடிகிறது.


மிகவும் தெளிவான, முறையானதொரு ஆய்வு அணுகுமுறையைப் (Rigorous Methodology) பின்பற்றி இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. யோனா புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் (Every word has been considered) தனித்தனியாகக் கவனத்தில் கொள்ளப்பட்டு, அதற்கான ஆழமான விளக்கங்கள் நுணுக்கமாக வழங்கப்பட்டுள்ளன. வாசகர்களின் மனதில் எழக்கூடிய அனைத்து விதமான கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் வேதபூர்வமான பதில்கள் இதில் அளிக்கப்பட்டுள்ளன (All questions have been answered). மேலும், இக்கதையோடு தொடர்புடைய வரலாற்றுப் பின்னணிகளை உறுதிப்படுத்தும் வகையில், சமீபத்திய தொல்பொருள் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளும் (Archaeological findings) வரலாற்றுப் படங்களும் இதில் இணைக்கப்பட்டு விளக்கப்பட்டிருப்பது இந்நூலின் நம்பகத் தன்மையையும் வாசிப்பு அனுபவத்தையும் பல மடங்கு உயர்த்துகிறது.


இத்தகைய சிறப்புகள் வாய்ந்த இந்த விளக்கவுரை, தனிநபர் வேத ஆராய்ச்சிக்கு ஒரு சிறந்த துணையாக அமைவதோடு மட்டுமல்லாமல், போதகர்கள் (Pastors), இறையியல் மாணவர்கள் (Theology Students) மற்றும் வேத ஆசிரியர்கள் ஆகியோரின் மேசைப் படிப்பிற்கு இன்றியமையாத ஒரு நூலாகும். குறிப்பாக, ஞாயிறு பள்ளிப் பாடங்களை ஆயத்தம் செய்வதற்கும் (Sunday School Prep), திருச்சபை பிரசங்கங்களை ஆழமாகத் தயாரிப்பதற்கும் (Sermon Prep) தேவையான அரிய வரலாற்று, இறையியல் தகவல்களையும், நடைமுறை வாழ்க்கை பிரயோகங்களையும் இது மிக எளிய வடிவில் வழங்குகிறது.

கிறிஸ்துவை நோக்கி - மாற்கு விளக்கவுரை









பல பிரதிகள், இலங்கையிலும் இந்தியாவிலும் பல பிரதிகள்!


20க்கு மேற்பட்ட நாடுகளில்! 40 நாற்களில் 1000 பிரதிகள் விற்பனை

மாற்கு சுவிசேஷம் ஒரு கதை (Narratives) வடிவில் எழுதப்பட்டிருக்கிறது (உண்மைக்கதை). ஆனால் அதிலே பல சம்பவங்கள் வருகின்றன. உதாரணத்திற்கு இயேசு புயலை அடக்கிய சம்பவம் வருகிறது, ஐயாயிரம் பேரை போஷித்த சம்பவம் வருகிறது. ஆகவே நாம் பார்க்கும் ஒவ்வொரு சம்பவமும் எப்படி முழு கதையோடும் பொருந்திப்போகிறது என்பதோடு குறிப்பிட்ட வேத பகுதிக்கான விளக்கங்களும் வாழ்க்கை பிரயோகங்களும் இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. "ஏன்" என்ற கேள்விக்கு இங்கே பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. முடிந்தவரை ஒவ் வொரு வசனத்தையும் விளக்கி இருக்கிறோம். கூடுதல் குறிப்புகள் என்ற பகுதியில் இறையியல் மாணவர்களுக்கு தேவையான ஆராய்ச்சி தகவல்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. முன் கதைச்சுருக்கம் பகுதியும் கூடுதல் குறிப்புகள் பகுதியும் மாணவர்களை குறிவைத்தே எழுதப்பட்டிருக்கின்றபடியால் அவை சற்று சிறிய எழுத்துக்களில் தரப்பட்டிருக்கின்றன. கட்டமைப்பும் கருப்பொருளும் என்ற பகுதியில் சுவிசேஷத்தின் கட்டமைப்பைப்பற்றிய கருத்துக்களை கொடுத்திருக்கிறோம். இத்துடன் படங்கள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட பல தகவல்களையும் மாற்கு சுவிசேஷத்தோடு சம்பந்தப்பட்ட பல இடங்களையும் படங்களாக தந்திருக்கிறோம்.

இந்த விளக்கவுரையை அனைவரும் படித்து பயன் பெறக்கூடிய முறையில் எழுதியிருக்கி றோம். நீங்கள் முழுநேர ஊழியராக இருந்தாலும் சரி, வேதாகம மாணவராக இருந்தாலும் சரி, சாதாரண விசுவாசியாக இருந்தாலும் சரி இதை வாசிப்பதினால் பயன் பெறுவீர்கள். தேவனைப் பற்றிய அறிவில் வளர்ந்து அவரை இன்னும் ஆழமாக அறிந்து அவரோடு ஒரு நல்லுறவை கட்டியெழுப்ப இந்நூல் உங்களுக்கு உதவி செய்யும் என்பதே எங்களுடைய ஜெபமும் நம்பிக்கையுமாகும்!

கொரோனாவின் கொடூரமும் கிறிஸ்து தரும் நம்பிக்கையும்

பாடுகளில் ஆறுதல், பாவத்தில் எச்சரிக்கை, பயத்தில் நம்பிக்கை



எம். மார்க் அல்ரோய் MIT, MBA, MA, PhD (c)

Thomas Milton Ministries

தகவல்களுக்கு: thomasmiltonlk@gmail.com
முதலாம் அச்சுப் பதிப்பு 1000 பிரதிகள் - ஜூன் 2021

நூலக தகவல்கள்:

எம். மார்க் அல்ரோய் (Mark Alroy Mascrenghe)

கொரோனாவின் கொடூரமும் கிறிஸ்து தரும் நம்பிக்கையும்

ISBN 978-624-97869-0-5 Paperback

1. நோய்கள் 2. கிறிஸ்தவம் 3. கொரோனா

I *எம். மார்க் அல்ரோய்* II *தலைப்பு*

362.1'969792 dc20

வேதாகம மேற்கோள்கள் அனைத்தும் இந்திய வேதாகம சங்கத்தினால் வெளியிடப்பட்ட பரிசுத்த வேதாகமத்திலிருந்தே (பழைய மொழிபெயர்ப்பு) எடுக்கப்பட்டிருக்கின்றன.

எம். மார்க் அல்ரோய் ஆங்கில நூல்கள்- கட்டுரைகள்

1. *Rhetoric Reconsidered: Paul's Rhetorical Invention in Early Christian Discourse*, Palgrave Macmillan, forthcoming July 2026
2. Power And Leadership In The NT And Asia, in *Exploring The New Testament In Asia: Evangelical Perspectives*, edited By Samson L Uytanlet And Bennet Lawrence, Carlisle: Langham Publishing, 2024
3. *Babylonian Carpet – Breaking the Power of Branded Sin*. Colombo: Thomas Milton Publishers, 2018
4. *Samson as God's Adulterous Wife*, New York: Peter Lang 2019
5. An essay in Reading Ecclesiastes From Asia and Pasifika, Ed. Peter Lau and Jione Havea, Atlanta: SBL, 2020
6. Bible and Psychology, *Encyclopedia of Religion and Psychology*, Ed David Leeming, Cham: Springer, 2020
7. A K Ramanujan, *Routledge Encyclopedia of Indian Writing in English*, Ed Manju Jaidka and Tej N. Dhar, London: Routledge 2023

https://uct.academia.edu/AlroyMascrenghe

பொருளடக்கம்

முன்னுரை

2020 மார்ச் மாதம் கொரோனாவைப்பற்றிய புத்தகம் எழுத வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் உதித்தது. ஆனாலும் சந்தர்ப்பங்கள் வாய்க்கவில்லை. நான் எனது முனைவர் படிப்பை முடிக்கவேண்டும் என்றும் முழு மூச்சாக உழைத்துக் கொண்டிருந்த படியினாலும் அப்போது தொடர்ந்து அதை செய்யமுடியவில்லை. கடைசியில் 2021 ஜீன் மாதமே இச்சிறுநூலை எழுதி முடிக்க முடிந்தது.

உலகில் தீமை ஏன் இருக்கிறது என்ற கேள்விக்கு இறையியல் ரீதியான விளக்கத்தை நூலாக எழுத வேண்டும் என்று எனக்கு ஒர் ஆசை இருக்கிறது. ஆனால் இது அந்த நூல் அல்ல. கொரோனா காலத்தில் நம்மாலான ஆறுதலையும் தேறுதலையும் நடைமுறை ஆலோசனைகளையும் வழங்குகிறது இச்சிறுநூல். ஒரு சில பக்கங்களில் மட்டுமே இறையியல் விளக்கத்தை கொடுத்துள்ளேன். இதை யாரும் வாசிக்கும் படியாக எழுதியுள்ளேன்.

இந்நூல் உலகம் பூராவும் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தினால் இதை மின் புத்தகமாக வெளியிடுகிறோம். கர்த்தர் தாமே எங்கள் முயற்சியை அநேகருக்கு பயனுள்ளதாக ஆசீர்வதிப்பாராக.

நன்றிகள்

சுவிட்சலாந்து டிசிஎப்வ் (TCF) சேர்ந்த போதகர் அன்டன் யோசப் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். அவர் ஒரு அருமையான அணிந்துரையையும் தந்துதவினார். நண்பர் நெப்போலியன் பத்மநாதன் தன்னால் இயலுமானவரை கருத்துக்களை தெரிவித்து சரி பிழை பார்த்தார். போதகர் எஸ். ஜி. யோகநாதன் இந்நூலுக்கு எடிட்டராக பணியாற்றினார். தமிழ் சொற்களை திருமதி எஸ்தர் துரையப்பா அவர்கள் சரி பிழை பார்த்தார்கள். இங்கிலாந்தை சேர்ந்த பாஸ்டர் திரு தாசன், பாஸ்டர் திருமதி பாலேஸ்வரி தாசன் இருவரும் பல மணித்தியாலங்களை செலவழித்து நல்ல பல கருத்துக்களை சொன்னார்கள். சப்ரகமுவ பல்கலைகழகத்தின் மொழித்துறையை சேர்ந்த செல்வி நாகரத்னம் சுதர்ஷினி மிகவும் கவனமாக தமிழ் நடையை சரிபிழை பார்த்தார். திரு சாள்ஸ் அசாரியா அவர்களும் நூலைப்பற்றிய தமது கருத்துக்களை தெரிவித்தார். அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அணிந்துரை

கொரோனாவின் கொடூரமும் கிறிஸ்து தரும் நம்பிக்கையும் என்ற இந்த நூலுக்கு அணிந்துரை எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இன்று கொரோனா என்ற கொள்ளை நோயினால் அனேகர் பொதுவான மரணத்தை தழுவியது உண்மையாயினும், உலகளாவ அனேக கிறிஸ்தவர்கள் இக்கால கட்டத்தில் விசுவாசமிழந்து ஆவிக்குரிய ரீதியில் பலமற்றவர்களாக போயிருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இறைபணியாளர் மார்க் அல்ரோய் அவர்கள் இப்புத்தகத்தில் கொள்ளை நோய்களின் சரித்திரத்தை கோடிட்டுக்காட்டியுள்ளது மட்டுமல்லாமல், கிறிஸ்துவை அறிந்தவர்கள் எப்படி சிந்திக்க வேண்டும் என்பதற்கான பல நடைமுறை ஆலோசனைகளைக் குறிப்பிட்டிருக்கின்றார். மனந்திரும்புதலும், கர்த்தர் மீது எக்காலத்திலும் நம்பிக்கையாயி ருப்பதற்குமான பல விளக்கங்களினூடாக விசுவாச வாழ்க்கையை ஊக்குவிக்கின்றார்.

கிறிஸ்தவ வாழ்வு என்பது எமது ஓட்டத்தின் இறுதிவரை ஒரு ஆவிக்குரிய பாடசாலையாகவே இருக்கிறது. இந்த ஆவிக்குரிய பாடசாலையின் நூலகத்தில் இப்புத்தகம் தவறாமல் இருக்க வேண்டும்.

நிச்சயமாக இந்த நூல் எமக்கு நடைமுறை ரீதியிலான பல விவரணங்களைக் கற்றுத் தந்து உதவிடும் என்பதால் அனைத்து தேவபிள்ளைகளும் இதனைப் படித்துப் பயன்பெற வேண்டும் என சிபாரிசு செய்கிறேன். கர்த்தர் தாமே மார்க் அல்றோய் அவர்களின் இலக்கியப்பணியை தொடர்ந்தும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்

Pastor Anton Joseph,
TCF International Ministries,
Zurich, Switzerland

நமது கேள்விகளுக்கு
பதில்களை தேடுவதைவிட,
நம்மைப் படைத்து, நமக்காக
மரித்த கர்த்தரைக்
கண்டுகொள்வதே

நம் வாழ்வின்
நோக்கமாயிருக்க வேண்டும்!

1 கொரோனா – ஒரு அறிமுகம்

இன்று நம் வாழ்க்கையை தலைகீழாக மாற்றிப்போட்ட கொரோனா ஒரு கொள்ளை நோய். கொள்ளை கொள்ளையாக மக்களை கொன்று குவிக்கிறது. இந்நூலை எழுதிக்கொண்டிருக்கும்போது இந்தியாவில் நிலைமை படுமோசமாகியிருந்தது. ஒரேநாளில் 4 லட்சத்திற்கும் அதிகமானவர்களுக்கு கொரோனா தொற்றியதும், 4000 பேருக்கு மேல் ஒரே நாளில் இறந்ததும் நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. வைத்திய சாலைகளில் இடம் இல்லாததாலும், ஆக்சிஜன் சிலிண்டர்கள் போதாமல் போவதாலும் கூட மக்கள் மரிக்கிறார்கள். இறந்தவர்களை புதைக்கக்கூட இடம் இல்லாமல் மக்கள் படும் கஷ்டத்தைப்பார்க்க என் மனம் அழுகிறது.

கொள்ளை நோய்கள் மிகப் பழமையானவை. நாகரீகம் வளர வளர கொள்ளை நோய்கள் மிக கொடூரமாக பரவத்துவங்கின. தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் பயணம் செய்வது இலகுவானது. ஒரு நகரில் அல்லது நாட்டில் பரவிய நோய் மற்ற நாடுகளுக்கு இலகுவாக பரவியது. இன்று சின்னம்மை, பெரியம்மை என்று நாம் பெரிதாக பயப்படாத நோய்கள் ஒரு காலத்தி ல் உயிர் கொல்லிநோய்கள். அவற்றிற்கு இப்போது தடுப்பூசிகள் கூட உள்ளன. சிறுவயதிலேயே அவற்றை போட்டுக் கொள்வதினால் நாம் அவற்றிலிருந்து இலகுவாக தப்பிவிடலாம்.

கொரோனா மனிதர்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக கடவுள் அனுமதித்த ஒரு அலாரம்

கொரோனா வெறும் உயிர்கொல்லி நோய் மட்டுமல்ல. அது பல்வேறு விதமான சமுதாய, கலாச்சார, பொருளாதார தாக்கங்களையும் உருவாக்கியுள்ளது. கொரோனாவின் நிமித்தம் பலர் வேலைகளை இழந்துள்ளனர். வேலையை இழக்காவிட்டாலும் பலர் சம்பளத்தில் ஒரு பாகத்தை இழந்துள்ளனர் (pay cuts). மாதக்கணக்காக வீட்டுக்குள்ளேயே அடைபட்டு கிடந்த படியினால் பலர் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். தினமும் வேலைக்கு செல்லும் கணவன் வீட்டிலேயே அடைபட்டவுடன் குடும்பத்தில் சண்டைகள் ஏற்பட்டு, சில நேரங்களில் அது விவாகரத்து வரை செல்லவும் வாய்ப்புண்டு.

வேலையையும் வருமானத்தையும் இழந்ததினால் களவுகளும் கொள்ளைச் சம்பவங்களும் அதிகரிக்க வாய்ப்புகளும் உள்ளன.

ஏன் உலகில் இத்தனை நோய்கள்? ஏன் இத்தனை துன்பங்கள்? ஏன் இத்தனை கொலைகள்? சிறுவர் துஷபிரயோகங்கள், பாலியல் வன்முறைகள்? மாற்றுத்திறனாளிகளின் கதை என்ன? மனவளர்ச்சி குன்றியவர்கள்? சூறாவளி, புயல், சுனாமி? இப்படி பட்டியல் மிக நீளமானது.

உலகளவில் நடக்கும் கொடூரங்களையும் அட்டூழியங்களையும் நினைத்தால் எனக்கு பயமாக இருக்கிறது. உலகம் வரவர மோசமாக போய்க் கொண்டிருக்கிறது. தொழில்நுட்பம் வளர்ந்து மருத்துவத்தின் உதவியினால் உயிர்கள் காக்கப்படுகின்ற அதே வேளை, ஒரு பட்டனை அழுத்தினால் கோடிக் கணக்கில் உயிர்களை கொல்லக் கூடிய ஆயுதங்களும் உருவாகியு ள்ளன. முன்னைய நூற்றாண்டுகளில் மருத்துவ வசதி போதாமையால் பல அழிவுகள் ஏற்பட்டன, சிசு மரணம் அதிகமாக ஏற்பட்டது. ஆனால் இப்போது தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் (போரில்) பல அழிவுகள் ஏற்படுகின்றன. அல்பர்ட் ஐன்ஸ்டைன் சொன்னதைப்போல 3வது உலகப் போரில் எவ்வகையான ஆயதங்களை பாவிப்பார்கள் என்று தெரியாது. ஆனால் 4வது உலகப்போரில் தடிகளும் கோல்களுமே ஆயுதமாக பாவிக்கப்படும். ஏனென்றால் 3வது உலகப்போர் அத்தனை அழிவுகளை ஏற்படுத்தி உலகை பின்தள்ளிய நிலமைக்கு கொண்டு போய் விட்டு விடும். கவிஞன் சொன்னதைப்போல நம் தொழில்நுட்பம் விண் வெளிக்கு போய்கொண்டிருக்க நம் மானிடமோ பாதாளத்துக்கு போய்க் கொண்டிருக்கிறது. உலகில் இருக்கும் பாவம் சபைக்குள்ளும் வந்து ஆக்கிரமிக்க ஆரம்பித்துவிட்டது. பெண், பணம், சிறுபிள்ளைகள் என துஷ் பிரயோகம் செய்யும் மதகுருக்கள். சபைக்குள்ளே நடக்கும் அட்டூழியங்களை தட்டிக்கேட்டவர்களையும், சுட்டிக் காட்டியவர்களையும் சபை தண்டிக்கிறது.

மனிதர்கள் ஓடும் வேகம் நம்மை தலைசுற்ற வைக்கிறது. பட்டணங்களில் வாழும் பலர், ஒன்றுக்கும் மேற்பட்ட தொழில்களைச் செய்கின்றார்கள். தொழிலோடு சேர்ந்து படிக்கிறார்கள். இவற்றோடு குடும்பம், பொழுதுபோக்கு அம்சங்கள் வேறு. இப்படி பம்பரம் போல் சுற்றிக்கொண்டிருந்த மனிதனை, கொள்ளை நோய் மனிதனை வீட்டிற்குள் அடைத்தவுடன் அவன் சிந்திக்க ஆரம்பிக்கிறான்.

வாழ்வின் அர்த்தம் என்ன? மரணத்தோடு முடிந்துவிடுவதா வாழ்க்கை? ஏன் மனிதர்கள் மரணிக்க வேண்டும் என பல கேள்விகளை கேட்கிறான். இந்த கேள்விகள் அவனைப் படைத்த கடவுளை நோக்கி அவனை தள்ளுகின்றன. கொரோனா மனித இனத்தை மனம் திரும்ப அழைக்கும் கர்த்தரின் குரல்.

கொரோனா குழப்பங்களின் மத்தியிலும் கர்த்தர் தன்னுடைய ஜனங்களை போஷித்து பராமரித்து பாதுகாத்த பல அற்புத கதைகளை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உணவுக்கு கூட வழியில்லாமல் வறுமையில் வாடிய ஒரு போதகரை கொரோனா காலத்தில் தனிமைப்படுத்தி வைத்திருந்தபோது அரசாங்கமே அவருக்கு உணவு கொடுத்து பராமரித்தது. கர்த்தர் தன்னுடைய பலத்த கரத்தால் பல கிறிஸ்தவர்களை காத்துக்கொண்டார். சுற்று வட்டாரத்தில் கொரோனா வந்த போதும் எத்தனையோ கிறிஸ்தவர்கள் அற்புத விதமாக காப்பாற்றப் பட்டிருக்கிறார்கள்.

ஆனால் அதே நேரம் பல விசுவாசிகள் மட்டுமல்ல தேவ ஊழியர்கள் கூட கொரோனா தொற்றால் உயிர் இழந்திருக்கிறார்கள்.

அப்படியானால் நாம் என்ன சொல்லுவோம்? கர்த்தர் தம்முடைய மக்களை பாதுகாக்காமல் போனது ஏன்? அவர்களுடைய விசுவாசக் குறைவினாலா? அப்படி சொல்லவும் முடியவில்லை. ஏனென்றால் இறந்ததில் பலர் விசுவாச வீரர்கள். அதுமட்டுமல்ல. ஏற்கனவே தம்முடைய உறவினர்களை பறிகொடுத்துவிட்டு துன்பத்தில் இருப்பவர்களுக்கு, அவர்கள் விசுவாசக்குறைவினால் தான் மரித்தார்கள் என்று கூறுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப்போன்றது. நாம் இரக்கமில்லாமல் அப்படி சொல்லக்கூடாது.

சிலநேரங்களில் கர்த்தர் ஒரு சமுதாயத்தின் அல்லது ஒரு நாட்டின் அல்லது உலகத்தின் பாவங்களை தண்டிக்கும்போது அதில் நல்லவர்களும் மாட்டிக்கொள்வதுண்டு. உதாரணமாக, தன்னை விட்டு விலகிய இஸ்ரவேல் மக்களை தண்டிப்பதற்காக கர்த்தர் பாபிலோன் நாட்டிலே அவர்களை அடிமைகளாக ஒப்புக்கொடுத்தார். ஆனால் அதிலே தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போன்ற நல்லவர்களும், கர்த்தருக்கு மட்டுமே விசுவாசமாய், அவரை மட்டுமே தொழுது கொள்ளுகின்றவர்களும் இருந்தார்கள். சிறையிருப்பு யூத சமுதாயத்தின் மீது கர்த்தருடைய தண்டனையாக வந்தாலும் அதிலே

பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் பாவிகள் அல்ல, நல்லவர்களும் பாதிக்கப்பட்டார்கள். அதேபோலவே கொரோனா மனித இனத்தை மனம் திரும்ப அழைக்கும் கர்த்தரின் சத்தமாய் இருந்தாலும் கூட, அதிலே நல்லவர்களும் பாதிக்கப்படலாம், கிறிஸ்தவர்களும் மரிக்கலாம். ஆகவே கொரோனாவினால் மரித்த எல்லாரும் கொடும் பாவிகள் என்ற கொடூரமான முடிவிற்கு வந்து விடாதீர்கள்.

உங்கள் வாழ்விலும் இவ்வாறான இழப்புகள் இருந்தால், அந்த பிரச்சனைகள் உங்களை கீழே தள்ள விடாதீர்கள். இனிமேல் வாழ்வதற்கு என்ன இருக்கிறது என்று சோர்ந்து போய்விடாதீர்கள். உயிரோடிருக்கிற வர்களுக்காக மட்டுமல்ல மரித்தவர்களுக்காகவும் வாழுங்கள். மரித்தவர்களை நினைத்து, நாம் நமது வாழ்க்கையை எத்தனை காலந்தான் நிறுத்தி வைப்பது? மரித்தவர்களுக்கு நாம் செய்யக்கூடிய மிகக்கூடிய மரியாதையும், அவர்களை நினைவில் வைத்துக் கொள்வதற்கான அதி சிறந்த வழியும் அவர்கள் இழந்த வாழ்க்கைக்கும் சேர்த்து நாம் வாழ்வது தான். கர்த்தரை நினைப்போம். அவர் நல்லவர் என்பதை ருசிபார்ப்போம். எழுந்து நடப்போம். துன்பங்களை மறந்து இன்பங்களை நினைப்போம். இறந்தவர்களுக்காக அழாமல் இருப்பவர்களுக்காக வாழுவோம். பிரச்சனைகள் நம்மை மேற்கொள்ள விடாமல் பிரச்சனைகளை நாம் மேற்கொள்ளுவோம். கண்ணீர் மல்கி, கவலையில் மூழ்கி, கசப்பின் பாத்திரத்தை நீங்கள் அனுதினம் பருகிக்கொண்டிருக்கத் தேவையில்லை. எழுந்து நடங்கள். கடந்த காலத்தை நினைத்து ஒரே இடத்தில் முடங்கிப்போய் விடாதீர்கள். இறக்கை விரித்து பறக்கவேண்டுமானால் நம்மை கட்டியிருக்கும் கடந்த கால கயிறுகளை நாம் அறுத்தெறியவேண்டும். உங்கள் வாழ்க்கை வளம்பெற வேண்டுமானால் நீங்கள் எழுந்து நடக்க வேண்டும்!

கொரோனாவைப்பற்றி பலரும் பலவிதமான கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். சிலர் கொரோனா கர்த்தருடைய தண்டனை என்றும் வேறு சிலர், அது கர்த்தருடைய தண்டனை அல்ல என்றும் கருதுகின்றனர். இந்த கேள்விகளுக்கெல்லாம் நமக்கு பதில் தெரியாவிட்டாலும் நம்மை அன்பு செய்கின்ற கர்த்தர் அனைத்தையும் தனது கட்டுப் பாட்டில் வைத்திருப்பது நமக்கு ஆறுதல் அளிக்கின்றது. மலைகளில் ஆபத்தான பாதைகளில் போய்க்கொண்டிருந்த பஸ்ஸில், (பேரூந்தில்) தனியாக வந்த சிறுமி தன் தகப்பன் அதை ஓட்டுவதினால்

சிரித்துக்கொண்டே பயமில்லாமல் வந்த கதை நாம் அறிந்ததே. பயணத்தில் சில குலுங்கங்கள் கலங்கங்கள் வந்தாலும், நம் அருமைத் தகப்பன் உலகத்தை நடத்திக் கொண்டிருப்பதால் நாம் கலங்காமல் இருக்க வேண்டும். நமது கேள்விகளுக்கு பதில்களை கண்டு பிடிப்பதைவிட, நம்மைப் படைத்து, நமக்காக மரித்த கர்த்தரைக் கண்டு, அவரை அறிந்து கொள்வதே நம் நோக்கமாக இருக்கவேண்டும். இதுவே நம் வாழ்வின் நோக்கம். அவர் அனைத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். அவரை மீறி நமக்கு எதுவும் நடக்காது. கொரோனாவிலிருந்து பாதுகாக்க கர்த்தர் வல்லவர் அவரை நம்புவோம். அதேநேரம் நாம் மனந்திரும்பாமல் இருந்தால் கர்த்தருடைய தண்டனைக்கு ஆளாவோம். இதுவே இந்நூலில் சொல்லப்பட்டிருக்கும் செய்தி.

கொரோனாவைப்பற்றி வேதாகம ரீதியாக சிந்திக்கவும் இக்கால ங்களில் துன்பப்படுபவர்களுக்கு ஆலோசனை வழங்கவும் இச்சிறு நூல் முயற்சிக்கிறது. இதில் எச்சரிக்கையும் இருக்கிறது நம்பிக்கையும் இருக்கிறது.

கர்த்தர், தன்னை விட்டு வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் இந்த உலகத்தை இந்த கொரோனா நோயுக்கூடாக தன்னை நோக்கி அழைக்கிறார். கொரோனா மனிதர்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக கடவுள் அனுமதித்த ஓர் அலாரம்.

கிறிஸ்துவுக்குள் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. கிறிஸ்துவை உயிரோடு எழுப்பிய கர்த்தர் அதே வல்லமையை நமக்காக பயன்படுத்த தயாராயிருக்கிறார் (எபேசி 1:19). அண்ட சராசரங்களைப்படைத்த கர்த்தருக்கு நோய்களை குணமாக்குவது மிக இலகுவானது. உங்களையும் என்னையும் அவருடைய செட்டையின் மறைவிலே வைத்து பாதுகாக்கும் வல்லமை அவருக்கு இருக்கிறது. அவரை விசுவாசிப்போம், அவரே நமக்கு அடைக்கலம், ஆபத்து காலத்தில் அரணான கோட்டை, நம்மை சுற்றிலும் இருக்கும் அக்கினிச்சுவர்.

தகவல்களால் வரும் தகராறு

மே 6ஆம் திகதி 2021ல் இந்தியாவில் என்றுமில்லாதவாறு கிட்டத்தட்ட 4,15,000 நோயாளிகளும், ஜீன் 9ஆம் திகதி 6,138 மரணங்களும் ஒரேநாளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவில் மட்டும் கிட்டத்தட்ட 4,000 பேர் தினமும் மரிக்கிறார்கள். உலகளவில் 8,00,000 பேருக்கு தினமும் கொரோனா நோய் தொற்றுகிறது. உலகில் தினமும் கிட்டத்தட்ட 14,000 பேர் இந்நோயினால் மரிக்கிறார்கள்.

2020ல் மட்டும் கொரோனாவால் 18லட்சத்து 50,000 பேர் இறந்திருக்கிறார்கள். இதனால் கொரோனாவிற்கு 'கொள்ளை நோய்' என்று பட்டம் சூட்டி அனைவரும் பயப்படுகின்றனர். ஆனால் கொரோனாவை விட எண்ணிக்கையில் அதிகமானவர்களை கொன்று குவிக்கும் கொடிய நோய்கள் உள்ளன. உதாரணமாக, 2017 இல் ஜீரண நோய்களால் இறந்தவர்களின் எண்ணிக்கை 23 லட்சத்து 80,000. புற்று நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை 95 லட்சத்து 60,000. இருதய நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை 1 கோடியே 77 லட்சத்து 90,000பேர்.[1] *எனவே, கொரோனாவைப் பார்த்துப் பயப்படாதிருங்கள்.*

கொள்ளை நோயா, கொல்லும் ஆயுதமா?

*மற்ற நாடுகளின் பொருளாதாரத்தை கெடுத்து அவற்றின் வளர்ச்சியை தடுப்பதற்காக சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு உயிரியல் ஆயுதமே (*biological weapon*) இந்த கொரோனா நோய் என்று சிலர் கருதுகின்றனர். அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் நடக்கும் வர்த்தக போரில் அமெரிக்காவை வெற்றி கொள்ளவே சீனா இப்படி செய்வதாக இவர்கள் கருதுகின்றனர். சீனாவுடன் நட்புறவில் இல்லாத அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளே கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாமல், நோய் பரவ ஆரம்பித்த சில வாரங்களிலேயே சீனாவில் அது கட்டுப்பாட்டுக்கு வந்ததும், சீனாவில் மொத்தமாகவே 90,000 பேருக்கு மட்டுமே இந்நோய் வந்ததும், சீனாவின் மிக முக்கியமான நகரங்களை (உ-ம்: ஷங்காய்) இந்நோய் தாக்காததும் பலரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. மேலும் உலகில் அதிகளவில் மருத்துவ தற்காப்பு பொருட்களை தயார் செய்யும் சீனா இந்த கொரோனா நோயால் பெருமளவு லாபம் அடைந்ததுள்ளது என்றும் சிலர் கருதுகின்றனர்.*

*வூகான் (*Wuhan*) இறைச்சி சந்தையில் உள்ள வௌவால்களை மனிதர்கள் உட்கொண்டதால், அவற்றிடமிருந்தே இந்த கிருமி மனிதர்களுக்கு வந்ததாகவே ஆரம்பத்தில் அனைவரும் கருதினாலும், அந்த நகருக்கு அண்மையில் உள்ள ஒரு விஞ்ஞான கூடத்திலிருந்தே (*Wuhan Institute of Virology*) இந்த கிருமி செயற்கையாக உருவாக்கப்பட்டதாக*

[1] https://ourworldindata.org/causes-of-death

வேறு சிலர் கருதுகின்றனர். சீன அரசாங்கம் அந்த ஆய்வு கூடத்திற்கு பல மாதங்கள் கழித்தே உட்செல்ல அனுமதி வழங்கியதும் இந்த சந்தேகத்தை அதிகரித்துள்ளது. அண்மையில் (24 மே 2021) அமெரிக்க உளவுத்துறை, வூகான் ஆய்வுகூட விஞ்ஞானிகள் 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக கண்டறிந்துள்ளது.[2] ஆனால் இந்த சுகவீனம் கொரோனா வைரசுடன் தொடர்புடையதா என்பது நிச்சயமில்லை. அவர்களுக்கு வந்தது கொரோனா நோய் தான் என்பது உறுதிசெய்யப்பட்டால், கொரோனா சீனாவின் இறைச்சி சந்தையில் அல்ல, சீனாவின் ஆய்வுகூடத்தில் ஆரம்பித்த ஒன்று என்பது தெளிவாகும். அமெரிக்காவில் அடைக்கலம் புகுந்த சீனாவை சேர்ந்த Dr Li-Meng Yan என்ற வைரஸ் நிபுணர் அவ்வாறான கருத்துக்களை 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் Zenodo என்ற இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளார். ஆனால் அவருடைய ஆராய்ச்சியில் உள்ள ஆதாரங்கள் சரியானவை அல்ல என்று அமெரிக்காவை சேர்ந்த மற்ற விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.[3] அதுமட்டு மில்லமால் இத்தாலியை சேர்ந்த விஞ்ஞானிகள் நடத்திய (Dallavilla et al, 2020) ஆய்விலும் இது இயற்கையான வைரஸ் என்பதற்கான ஆதாரங்களே அதிகமாக உள்ளதாக கூறியுள்ளார்கள்.

மேலும் கொள்ளை நோய் மனித வரலாற்றில் வந்தது இது முதல் தடவையல்ல. சீனர்கள் இந்நோயின் தீவிரத்தைக் கண்டு பல கட்டுப்பாடுகளை கடுமையாக செயற்படுத்தினார்கள். அனைவரும் உடனடியாக முகக்கவசம் அணிந்தார்கள், வீட்டில் அடங்கியிருக்கும் படியான உத்தரவை கடுமையாக செயற்படுத்தினார்கள், பல வைத்தியசாலைகளை அமைத்தார்கள். மேற்கத்திய நாடுகளிலும் இந்தியாவிலும் இந்த கட்டுப் பாடுகளை செயற்படுத்துவது மிகக்கடினமாக இருந்தது, அதிக நாட்கள் எடுத்தது - மக்கள் முழுவதுமாக ஒத்துழைக்கவில்லை. அதனால் கொரோனா காட்டுத்தீ போல் எங்கும் பரவியது.

தற்போதுள்ள ஆதாரங்களை வைத்து உறுதியான எந்த முடிவுக்கும் வர முடியாமல் இருக்கிறது. எதிர்காலத்தில் வூகான் ஆய்வு கூடத்திற்கும் கொரோனா நோய்க்கும் உள்ள தொடர்பு நிறுபிக்கப்படலாம்.

[2] https://edition.cnn.com/2021/05/23/politics/us-intelligence-report-wuhan-lab-researchers-coronavirus-origin/index.html
[3] https://www.washingtonpost.com/technology/2021/02/12/china-covid-misinformation-li-meng-yan/

2 வேதத்தில் கொள்ளை நோய்கள்

வேதத்தில் வந்த கொள்ளை நோய்களை இப்பகுதியில் பார்க்க இருக்கிறோம்.

ஆபிரகாமின் மனைவி சாராளை பார்வோன் தனக்காக எடுத்துக்கொள்கிறான் (ஆதி 12:17). அவள் நிமித்தம் கர்த்தர் பார்வோன் குடும்பத்தாருக்கு "மகா வாதைகளை" அனுப்பினார். தனக்குரியதல்லாத ஒன்றை, இன்னொருவனுடைய மனைவியை இச்சித்து அவளை தனக்குரியவளாக்கிக் கொள்ள நினைத்தபடியினால் பார்வோனுக்கு வாதைகள் வந்தன. சமுதாயத்திலும் ஏன் சபைகளிலும் இன்று அதிகமாக இருக்கும் பாவம் இது.

இஸ்ரவேல் மக்களை அடிமைகளாக நடத்திய எகிப்தியரின் மீது பல வாதைகளை கர்த்தர் அனுப்பினார் (யாத்தி 8:2). கர்த்தருடைய மக்களை அடிமைகளாக நடத்தி, அவர்கள் அவரை ஆராதிக்க அனுப்பாததினால் அந்த வாதைகள் எகிப்தியரை பாதித்தது.

ஆனால் அதே இஸ்ரவேல் மக்கள் தங்கத்தில் கன்று குட்டியை செய்து வணங்கியபோது அவர்களுக்கும் கர்த்தர் வாதையை அனுப்பினார். தம்முடைய மக்கள் என்று அவர்களுக்கு வாதையை கர்த்தர் அனுப்பாமல் விடவில்லை (யாத்தி 32:35). கடவுளை வணங்காமல் அவருடைய இடத்தை படைப்புக்கு கொடுத்தபடியினாலும், அவருடைய மக்கள் அவரை விட்டு விலகியபடியினாலும் வாதைகள் அங்கே வந்தன.

எகிப்திலிருந்து வெளியேறிய இஸ்ரவேல் மக்கள், பாலைவனத்தில் இறைச்சி இல்லை என்று முறுமுறுத்து ஆண்டவரை பழித்தார்கள். அவர்களுக்கு போதுமானளவு காடைகளை கொடுத்த கர்த்தர் அதை அவர்கள் புசித்துக்கொண்டிருக்கும்போதே அவர்களை தண்டித்தார். (எண்ணா 11:33). கர்த்தரை விசுவாசிக்காமல் எப்போதும் முறு முறுக்கின்றபடியால் வாதைகள் இங்கே வந்தது.

வாக்குத்தத்தம் பண்ணிய நாட்டை வேவு பார்க்க ப்போனவர்களில் 10 பேர் சொன்ன தவறான செய்தியால் மக்கள் மனமுடைந்து போனார்கள் (எண்ணா 14:37). தங்களால் போரில் வென்று கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணிய நாட்டை அடைய முடியாது, எதிரிகள் கண்ணில் நாங்கள் வெட்டுக்கிளிகளைப்போல இருக்கிறோம் என்று இஸ்ரவேல் மக்களை நம்பவைத்தார்கள். அவர்களையும் தேவன்

வாதைகளால் தண்டித்தார். கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நம்பாமல் அவருடைய மக்களை அவரை விட்டு திருப்பியதற்கு தண்டனையாக இங்கே வாதைகள் வந்தன.

பழைய ஏற்பாட்டில் இன்னும் பல இடங்களில் கொள்ளை நோய்கள் கர்த்தருடைய தண்டனையாகவே வந்திருக்கின்றன (எண்ணா 16:46-50, 25:8, 31:16 யோசு 22:17, 1 சாமு 4:8, 2 சாமு 24:21-25). முதலில் தன்னுடைய மக்களுக்கு விரோதமாக செயற்பட்டவர்களையே வாதைகளால் தண்டித்த கர்த்தர், பின்பு, லேவியராகமம் 26:21ல் சொல்லியிருந்தபடியே, அதே மக்கள் தமக்கு விரோதமாக செயற்பட்டபோது அவர்களையும் வாதைகளால் தண்டித்தார். இதுவும் நமக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவர்களுடைய மக்கள் எப்படி வாழ்ந்தாலும் கர்த்தர் எதுவும் செய்யாமல் இருந்துவிடுவார் என்று நாம் பிழையாக நினைக்கக் கூடாது.

ஆனால் வேதத்தில் வந்த கொள்ளைநோய்கள் தவறு செய்தவர்களை குறிவைத்து பெரும்பாலும் அவர்களுக்கு மட்டுமே வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பழைய ஏற்பாட்டில் (லேவி 13,14,15) நோயுற்றவர்களை தனிமைப்படுத்தல், நோயுற்றவர்கள் அல்லது நோய் அறிகுறிகளை உடையவர்களோடு தொடர்புபட்டவற்றை அகற்றுதல், அவர்களை குறிப்பிட்ட காலம் வரைக்கும் தனித்து வைத்திருத்தல், கைகால்களை கழுவுதல் போன்ற பல காரியங்கள் ஏற்கனவே இருப்பது ஆச்சரியமானது.

லூக் 21:11ல் (மத் 24:7) கொள்ளை நோய்கள் கடைசி காலங்களின் அறிகுறிகளாக சொல்லப்பட்டுள்ளன. இது இயேசுவின் வருகையை நமக்கு நினைவுபடுத்தவேண்டும். பாரியளவில் நடக்கும் கொள்ளை நோய்களும் அழிவுகளும் இயேசுவின் இரண்டாம் வருகை சமீபமாய் வருவதை காட்டுகிறது (Piper,2020*). இது நம்மை மனந்திரும்பவும், அக்கறையோடு அதிகம்பேருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும் நம்மைத் தூண்ட வேண்டும்.*

3 கொள்ளை நோய்களின் சரித்திரம்

நமது புதிய தலைமுறையினர் கொரோனா வந்ததும், இதுதான் உலகிலே அல்லது இலங்கையிலே வந்த முதலாவது கொள்ளை நோய் என்று தவறாக நினைத்து பயப்படுகிறார்கள். அதற்காக இப்பகுதியில் கொள்ளை நோய்களின் சுயசரிதையை சுருக்கமாக தந்திருக்கிறேன்.

இலங்கையில்[4] கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கும் கொள்ளை நோய்களுக்கும் கூட பலத்த தொடர்பு உள்ளது. இலங்கைக்கு வந்த ஐரோப்பியர் அல்லாத முதலாவது மிஷனரி, இந்தியாவை சேர்ந்த ஜோசப் வாஸ் அடிகளாவார். அவர்களுடைய காலத்திலே **1697**ல் கண்டியில் பெரியம்மை நோய் வரவே, கண்டி மன்னன் உட்பட அனைவரும் அந்நகரத்தை விட்டு ஓடினார்கள். ஆனாலும் ஜோசப் வாஸ் அடிகள் (இன்னொரு அடிகளாரின் உதவியுடன்) கண்டியில் தங்கியிருந்து நோயாளர்களை கவனிப்பதன் மூலம் கிறிஸ்துவின் அன்பை மக்களுக்கு வெளிப்படுத்தினார். தினமும் நோயாளர்களுக்கு உணவையும் மருந்தையும் கொடுத்து அவர்கள் காயங்களை கழுவினார். மரித்தவர்களையும் அவரே அடக்கம் செய்தார். அதைத்தொடர்ந்து அநேகர் கிறிஸ்தவர்களாக வந்தார்கள். அப்படி கிறிஸ்தவர்களாக மாறாதவர்கள் கூட கிறிஸ்தவத்தை மதிக்க ஆரம்பித்தார்கள். இது நம் அனைவருக்கும் நல்ல பாடம். இன்று சமுதாயம், கிறிஸ்தவர்களை ஒருவர் இன்னொருவருடன் சண்டை பிடிக்கின்றவர்களாக, பணத்தையும், சிறுவர்களையும், பெண்களையும் துஷ்பிரயோகம் செய்கின்றவர்களாக பார்ப்பதற்கு நாமே காரணம். இதைக்குறித்து நாம் வெட்கப்படவேண்டும். முதலில் கிறிஸ்தவர்களாகிய நாம் மனந்திரும்பவேண்டும்.

வேதத்திற்கு அப்பால் முதல் கொள்ளைநோய் அத்தேனே பட்டணத்தில் (Plague of Athens) வந்திருக்கவேண்டும். கி.மு. **430** அளவில் இடம்பெற்ற பெலேபோனேசியன் யுத்தத்தில், ஸ்பார்ட்டா (Sparta) பட்டணத்தினர் அத்தேனே (Athens) பட்டணத்தை முற்றுகையிட்டிருந்த போது, ஒரு கொடிய கொள்ளை அத்தேனே பட்டணத்தை தாக்கியது. அத்தேனே பட்டணத்திற்குள்ளே எரிகின்ற பிணங்களின் எண்ணிக்கையைப் பார்த்த ஸ்பார்ட்டா போர்வீரர்கள், தமக்கும் அந்நோய் வந்து விடுமோ

[4] ஜோசப் வாஸ் அடிகள் ஒரு கத்லோலிக்கராய் இருப்பதினால் கத்தோலிக்க மார்க்கத்தை நான் பிரஸ்தாபம் செய்வதாக யாரும் முடிவுக்கு வந்துவிடக்கூடாது.

என்று பயந்து, முற்றுகையை கைவிட்டுவிட்டு ஓடிவிட்டார்கள்.[5] இந்நோய் அத்தேனே பட்டணத்திலிருந்து லிபியா, எத்தியோப்பியா, எகிப்து போன்ற நாடுகளுக்கு பரவியது. அன்றிருந்த நோய் அறிகுறிகளை வைத்துப் பார்க்கும் போது அநேகமாக அது டைபாய்ட் காய்ச்சலாகத்தான் இருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

இந்த கொள்ளை நோய் தொற்றியவர்கள், அத்தேனே பட்டணத்திலிருந்த புற மத கோயில்களில் அடைக்கலம் புகுந்தும் அவர்கள் மரித்ததினால், அந்த தெய்வங்களை வழிபடுவதினால் என்ன பயன் என்று மக்கள் சிந்திக்க ஆரம்பித்ததாக நாம் அறிகிறோம்.

கி.பி. 165ல் தோன்றிய அந்தோனின் கொள்ளைநோய் (Antonine Plague) கி.பி. 180 வரை ரோம சாம்ராஜ்யத்தில் பரவி, ரோம சாம்ராஜ்யத்தில் மூன்றில் ஒன்று அல்லது நான்கில் ஒரு மக்களை கொன்றிருக்க வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர் (McNeil,1976).[6] ரோமாபுரியில் மட்டும் ஒரு நாளைக்கு 2000 பேருக்கு மேல் மரித்தாக குறிப்புகள் உள்ளன.[7]

செலுசியா என்று அழைக்கப்பட்ட தற்கால பாக்தாத் நகரிலே தோன்றிய இக்கொள்ளைநோய், பார்த்திய (Parthians) படைகளோடு போரிடப்போன ரோம போர் வீரர்கள் அவர்களை வெற்றிக்கொண்டு ரோம் நகருக்கு திரும்பி வந்ததும் அவர்கள் மூலம் ரோம சாம் ராஜயத்தில் பரவியிருக்கவேண்டும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.[8] எகிப்து வரை பரவிய இக்கொள்ளை நோய், அப்பட்டணத்தில் பலரையும் கொன்றதால், ஒவ்வொரு குடிமகனும் அல்லது குடும்பமும் ரோமர்களுக்கு செலுத்தவேண்டிய வரிப்பணம் வெகுவாக குறைந்தது.[9]

இக்கொள்ளை நோயிலிருந்து ரோமாபுரியை காப்பாற்று வதற்காக ரோம சக்கரவர்த்தியான மார்க்கஸ் ஆரிலியஸ், ரோம தெய்வங்களுக்கு அர்ப்பணமாக பல கோயில்களையும் கட்டிடங்க ளையும் கட்டினாலும், இறுதியில் அவனும் இந்நோயினால் மரித்தான்.[10] இது பெரியம்மையாக (smallpox) இருக்கவேண்டும் என் மருத்துவ அறிஞர்கள் சந்தேகிக்கின்றனர். இந்த கொள்ளைநோயின் போது

---

5 Thuc. 2.53

6 வேறு சிலருடைய கணக்கின்படி ரோம சாம்ராஜ்யத்தில் பத்தில் ஒரு சதவீதமானவர்களே மரித்தார்கள். https://www.baslibrary.org/biblical-archaeology-review/46/4/13

7 Dio Cassius 73.14.3–4, https://penelope.uchicago.edu/Thayer/e/roman/texts/cassius_dio/73*.html

8 https://www.baslibrary.org/biblical-archaeology-review/43/2/18

9 ibid

10 ibid

கிறிஸ்தவர்கள் நோயுற்றவர்களை கவனிப்பதன் மூலம் கிறிஸ்துவின் அன்பை மற்றவர்களுக்கு காட்டினார்கள். இதன் மூலம் கிறிஸ்தவம் வெகுவாக வளர்ச்சியடைந்தது. இக்காலகட்டங்களில் தான் மரிக்கும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பழக்கம் முதன் முதல் ஏற்பட்டது – அது இந்த கொள்ளை நோயினால் மரித்த குழந்தைகளுக்கே வழங்கப்பட்டது என்று சிலர் கருதுகின்றனர்.[11]

சைப்பிரியன் கொள்ளைநோய் கி.பி. **249**முதல் **262** வரை வாந்தி காய்ச்சல் வயிற்றோட்டத்துடன் வந்தது. இக்கொள்ளை நோய்க்கு கார்த்தேஜ் என்ற இடத்தின் ஆயரான சைப்பிரியன் என்பவரும் பலியானபடியினால் இந்நோயை அவருடைய பெயரை வைத்தே சைப்பிரியன் கொள்ளைநோய் (Cyprian Plague) என்று அழைத்தார்கள். இக்கொள்ளைநோயின் உச்சக்கட்டத்தில் ஒரு நாளைக்கு **5000** பேர் வரை இறந்ததாக குறிப்புகள் உள்ளன.[12] இந்நோயின் மூலமும் கிறிஸ்தவம் வெகுவாக வளர்ச்சியடைந்தது. இதுவும் ரோம சாம்ராஜ்யத்தின் பல இடங்களுக்கும் பரவியது. பிரித்தானியாவில் பரவிய இந்நோய் பல அரசியல் மாற்றங்களுக்கு காரணமானது. Zinsser அறிஞர் சுட்டிக்காட்டியதைப்போல ரோம சாம்ராஜ்யத்தின் வளர்ச்சியை கொள்ளை நோய்கள் பல இடங்களிலும் தடுத்திருக்கின்றன (Zinsser, 1960). இக்கொள்ளைநோய் உட்பட ஏற்பட்ட பல்வேறு விதமான சிக்கல்களால், கி.பி. **268**இல் ரோம சாம்ராஜ்யம் தற்காலிகமாக மூன்றாக உடைந்தது.

நோவாவுக்கு கொடுத்த வாக்குத்தத்தின்படியே முழு மனித இனத்தையும் கர்த்தர் ஒருபோதும் அழித்ததில்லை.

கி.பி. **541**இல் வந்த இந்த ஜஸ்டினியன் கொள்ளை நோய் (Justinian Plague) பல மில்லியன் கணக்கானவர்களை கொன்றதாகவும் அதன் மூலம் கிறிஸ்தவம் பரவியதாகவும் சொல்லப்படுகிறது.[13]

கி.பி. **1347** முதல் **1351** வரை எலிகளால் பரவிய கறுப்பு கொள்ளை நோய் (Black Plague) உலக ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கை அழித்ததாக வரலாறு சொல்லுகிறது.[14] அதுவரை நடந்த

[11] https://www.baslibrary.org/biblical-archaeology-review/47/1/24
[12] Historia Augusta: Gallieni Duo 5.5
[13] https://www.history.com/topics/middle-ages/pandemics-timeline
[14] இந்த கொள்ளை நோயும் சீனாவிலிருந்தே ஆரம்பித்ததாக சொல்லப்படுகிறது. https://www.britannica.com/event/Black-Death

யுத்ததங்களினாலோ, வந்த கொள்ளை நோய்களினாலோ மரித்தவர்களை விட, அதிகமானவர்கள் இக்கொள்ளை நோயினால் மரித்தார்கள்.

இக்கொள்ளைநோயின் போது வெனிஸ் நாட்டின் ரகுசா என்ற துறைமுக பட்டணத்திற்கு வந்த கப்பல் மாலுமிகளை 40 நாட்கள் தனிமைப்படுத்திய பின்னரே பட்டணத்திற்குள் அனுமதித்தார்கள். இதிலிருந்தே தனிமைப் படுத்தலுக்கான quarantine *என்ற ஆங்கில சொல் உபயோகத்திற்கு வந்தது* (quarantine *என்பது 40ற்கான வெனிஸ் மொழிச்சொல்).*

கி.பி. 14 முதல் 17ம் நூற்றாண்டு வரை தொடர்ச்சியாய் ஐரோப்பா கண்டத்தை மீண்டும் மீண்டும் தாக்கிய இக்கொள்ளை நோயை கடவுளுடைய தண்டனை என்று கருதிய ஒரு கூட்டத்தினர், பாவத்திலிருந்து மனந்திரும்பவதற்காக பல சுய ஒடுக்க செயல்களில் ஈடுபட்டனர். தாங்கள் படும் கஷ்டத்தை பார்த்தாவது கடவுள் இந்த பாழும் நோயை நிறுத்த மாட்டாரா என்று நினைத்த இவர்கள் (Flagellants*), ஊர் ஊராக சென்று தங்களை சாட்டைகளால் அடித்துக்கொண்டனர். இவ்வாறு பாவத்திற்கு பரிகாரமாக, பாவத்திற்கு தண்டனையாக தங்களை தாங்களே தண்டித்துக் கொள்வதின் மூலம் கடவுள் இந்த பாழும் நோயை நிறுத்தக்கூடும் என இவர்கள் கருதினார்கள்* (Froissart's Chronicle)*. கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்கு தண்டிக்கப்பட்டது போல இவர்கள் ஊர் மக்களின் பாவங்களுக்காக தண்டிக்கப்படுவதாக நினைத்துக் கொண்டார்கள்* (Hays, 2005)*.*

ஆனால் இது முற்றிலும் தவறான ஒரு கருத்து. நம்முடைய பாவங்களை வைத்துக்கொண்டே நாம் மற்றவர்களின் பாவங்களையும் சுமக்கமுடியாது. மற்றவர்களின் பாவங்களை ஒருவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் அவர் குற்றமற்றவராக இருக்கவேண்டும். நமது பாவத்திற்கு உலகில் பாவமற்றவராகப் பிறந்த இயேசு கிறிஸ்து தண்டனையை அனுபவித்து விட்டார். இப்போது நாம் செய்ய வேண்டியதெல்லாம் அவரை விசுவாசித்து நம்மை அவருக்கு ஒப்புக் கொடுக்கவேண்டியது தான். கடவுளிடம் செல்லுவதற்கு, அவரே ஏற்படுத்திய ஒரே வழி இதுதான்.

தங்களை சாட்டையால் அடித்துக்கொள்ளும் இவர்களுடைய செயல் பிழையானதாக இருந்தாலும், பச்சிளங் குழந்தையை கொன்று விட்டும் கண்ணீரே வடிக்காத கல்நெஞ்சக்காரர்கள் இருக்கின்ற நமது

சந்ததியில், இப்படியும் மனிதர்கள் இருந்தார்கள் என்பது நம்மை சிந்திக்கவைக்க வேண்டும். நமது பாவத்திற்கு நாம் மனம் வருந்த வேண்டும். ஒரே பாவத்தை நாம் மீண்டும் மீண்டும் செய்வதற்கு முக்கியமான காரணம் நாம் நமது பாவத்திற்கு சற்றும் மனம்வருந்தாததே.

*17*ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்காவில் புதிதாக குடியேறிய ஐரோப்பியர்களுக்கும், அந்நாட்டின் பூர்வீக குடிமக்களாகிய செவ்விந்தியர்களுக்கும் இடையில் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. ஐரோப்பாவை அடிக்கடி வதம் செய்து கொண்டிருந்த பெரியம்மை (Smallpox) நோயை, இப்போரில் ஐரோப்பியர்கள் ஒரு போர் ஆயுதமாக பயன்படுத்தினார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. பெரியம்மை நோய் வந்தவர்கள் பாவித்த கம்பளங்களை ஐரோப்பியர்கள் செவ்விந்தி யர்களுக்கு வேண்டுமென்றே பரிசாக கொடுத்தார்கள்.[15] தொற்று நோய்களைப்பற்றி ஒன்றும் அறிந்திராத செவ்விந்தியர்கள் அதை பாவி த்தபோது அவர்களுக்கு இந்நோய் சரமாறியாக பரவத்துவங்கியது. இதுவரை பெரியம்மை போன்ற தொற்று நோயை சந்தித்திராத செவ்விந்தியர்கள் நோய் எதிர்ப்பு சக்தி அற்றவர்களாய் இருந்ததினால் கொத்துக்கொத்தாக மரித்தார்கள். இவர்களுடைய ஜனத்தொகையில் கிட்டத்தட்ட *90-95* சதவீதமானவர்கள் அழிந்து போனார்கள். மனிதன் தனது சுயநலத்திற்காக எதையும் செய்வான் என்பதற்கும், மனிதன் எத்தனை மோசமானவன் என்பதற்கும் இது நல்ல எடுத்துக்காட்டு. கொள்ளை நோய்கள் கடவுளின் கோபத்தால் வந்ததாக வேதத்தில் வாசிக்கிறோம். இங்கேயோ மனிதனின் கோபத்தாலும் வஞ்சகத்தாலும் கொள்ளை நோய்கள் பரவியிருக்கின்றன!

*18*ம் நூற்றாண்டில் பிரித்தானியாவை சேர்ந்த மருத்துவரான எட்வர்ட் ஜென்னர் பெரியம்மை நோய்க்கான தடுப்பூசியை கண்டுபிடித்ததினால் இந்நோய் ஒரு கட்டுப்பாட்டுக்கு வந்தது. தடுப்பூசியினால் முற்றாக அழிக்கப்பட்ட முதல் நோயும் இதுவேயாகும். *1980*ல் உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) பெரியம்மை நோய் உலகை விட்டு போய் விட்டதாக அறிவித்தது.

*16*ம் நூற்றாண்டில் bubonic plague என்ற கொடிய கொள்ளை நோய் ஜெர்மனியில் வந்த போது புரட்டஸ்தாந்து இயக்கத்தின்

---

[15] Mayor, Adrienne, 1995. The Nessus Shirt in the New World: Smallpox Blankets in History and Legend, *Journals of Americal Folklore*, 108.427

ஆரம்பகர்த்தவான மார்ட்டின் லூத்தர் தான் வாழ்ந்து வந்த விட்டன்பர்க் என்ற நகரத்தை விட்டு வேறு இடம் செல்லவில்லை. அங்கேயே தொடர்ந்தும் தங்கியிருந்து சேவை செய்தார். லூத்தருடைய மகள் எலிசபெத் இந்த நோயினால் மரித்தபோதும் கூட அவர் மனம் மாறவில்லை. அதுமட்டுமில்லாமல் "கிறிஸ்தவர்கள் கொள்ளைநோயுள்ள இடங்களை விட்டு ஓடவேண்டுமா?" என்று ஒரு நீண்ட துண்டுபிரசுரத்தையும் எழுதி வெளியிட்டார். அதில் அவர் சொன்ன கருத்து: "கொள்ளை நோய் வந்தாலும் நாம் இருக்குமிடங்களிலேயே நாம் சாக வேண்டும். கிறிஸ்தவ மருத்துவர்கள் மருத்துவமனையை விட்டு ஓடக்கூடாது, ஆளுனர்கள் தங்கள் நகரங்களை விட்டு போகக்கூடாது. கொள்ளை நோய்கள் எங்கள் கடமைகளை இல்லாமற் செய்யவில்லை – அதை நாங்கள் மரிக்கத்தயாராக இருக்கும் சிலுவைகளாக மாற்றுகின்றது."[16] மார்ட்டின் லூத்தர் கொள்ளை நோய்களை தேவனுடைய தண்டனையாகவே பார்த்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.[17]

கி.பி. 1601-1602 அம்ஸ்டர்டாம் (Amsterdam) நகரத்தில் ஜோன் கல்வினுடைய கொள்கைகளில் நன்றாக பயிற்றுவிக்கப்பட்டு அவற்றை பின்பற்றும் ஒரு போதகர் இருந்தார். கொள்ளை நோய் வந்து மக்கள் மரிப்பதை பார்த்த அவர் - 'முன்பு நிர்ணயிக்கப்பட்டது தான் இப்போது நடக்கிறது (முன்குறித்தல்)' என்ற கல்வினுடைய கொள்கை மக்களுக்கு மனக்கவலையை கொடுக்கக்கூடியது என்ற முடிவுக்கு வந்தார் (Leeuwen et al. 2009, XII).[18] பின்பு லைடன் பல்கலைகழகத்தில் இரண்டு பேராசிரியர்கள் அந்த கொள்ளை நோயினால் மரிக்கவே, இவருக்கு அந்த பதவி கிடைத்தது. அந்த பல்கலைகழகத்தில் இவர் சந்தித்த இன்னொரு பேராசிரியருடன் இவருக்கு ஏற்பட்ட இறையியல் கருத்து வேறுபாடு, நாளடைவில், நாடளாவிய ரீதியில்

---

[16] https://foreignpolicy.com/2020/03/13/christianity-epidemics-2000-years-should-i-still-go-to-church-coronavirus/

[17] https://www.christianitytoday.com/ct/2020/may-web-only/martin-luther-plague-pandemic-coronavirus-covid-flee-letter.html

[18] இறைவன் சிலரை நரகத்திற்காகவே முன்குறித்து அதற்காகவே அவர்களை படைத்திருக்கிறார் என்ற ஜோன் கல்வினுடைய கருத்தை எதிர்த்து ஆர்மினியஸ் கேள்வி கேட்டார். ஜோன் கல்வினுடைய கருத்து ஆங்கிலத்தில் இதோ:

"The predestination by which God adopts some to the hope of life, and adjudges others to eternal death, no man who would be thought pious ventures simply to deny; but it is greatly caviled at, especially by those who make prescience its cause. We, indeed, ascribe both prescience and predestination to God; but we say, that it is absurd to make the latter subordinate to the former. When we attribute prescience to God, we mean that all things always were, and ever continue, under his eye; that to his knowledge there is no past or future, but all things are present, and indeed so present, that it is not merely the idea of them that is before him (as those objects are which we retain in our memory), but that he truly sees and contemplates them as actually under his immediate inspection. This prescience extends to the whole circuit of the world, and to all creatures. By predestination we mean the eternal decree of God, by which he determined with himself whatever he wished to happen with regard to every man. All are not created on equal terms, but some are preordained to eternal life, others to eternal damnation; and, accordingly, as each has been created for one or other of these ends, we say that he has been predestinated to life or to death."
Inst. 3:21:5, https://www.ccel.org/ccel/calvin/institutes/institutes.v.xxii.html

விமர்சிக்கப்பட்டு, பின்பு பல நாடுகளை சேர்ந்தவர்களால் விவாதிக்கப்பட்டது. இந்த கருத்து வேறுபாடு உலகெங்கும் கிறிஸ்தவர்கள் மத்தியில் பரவி, இன்றும் இருவேறு இறையியல் பிரிவுகளாக இருக்கிறது. அந்த போதகருடைய பெயர் ஜெகோபஸ் ஆர்மினியஸ்.

1917ல், இன்றைக்கு கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன்னால் ஐரோப்பாவில் இருந்து பரவத்துவங்கிய ஸ்பானிய காய்ச்சல் உலகம் பூராவும் 5 கோடி (50 மில்லியன்) உயிர்களை கொள்ளை கொண்டது. கடந்த சில நூற்றாண்டுகளாக ஒவ்வொரு நூறு வருடங்களுக்கொருமுறை கொள்ளை நோய் பாரியளவில் மனித இனத்தை தாக்கியிருக்கறிது. மேலும் 21ம் நூற்றாண்டிலும் கூட சார்ஸ் (SARS) போன்ற பல கொள்ளை நோய்கள் வந்திருக்கின்றன.

மனித இனம் இவ்வாறான அத்தனை கொள்ளை நோய்களையும் தாண்டி முன்னோக்கி போய்க்கொண்டு தான் இருக்கிறது. அது மட்டுமல்ல எந்த ஒரு கொள்ளை நோய் வரும்போதும் உலக ஜனத்தொகையில் பெரும் பான்மையானோர் காப்பாற்றப் பட்டிருக்கிறார்கள். இனிமேலும் அப்படித்தான் நடக்கும் என்று நான் நம்புகிறேன். இதுவரை வந்த எந்தவொரு கொள்ளைநோயும் முழு மனித இனத்தையுமோ அல்லது அதன் பெரும்பான்மையையுமோ அழித்ததில்லை. கர்த்தர் நம்மீது கிருபையா யிருக்கிறார். நோவாவுக்கு கொடுத்த வாக்குத்தத்தின்படியே கர்த்தர் முழு மனித இனத்தையும் எப்போதும் அழித்ததில்லை. நோவாவுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் ஜலத்தினால் அழிப்பதில்லை என்றிருந்தாலும், கர்த்தர் தம்முடைய மிகுந்த கிருபையினால் எந்த கொள்ளை நோயும் முழு உலகத்தையுமோ அல்லது முக்கால் வாசி உலகத்தையுமோ அழிக்க இதுவரை அனுமதிக்கவில்லை. இனியும் அப்படியே இருக்கவேண்டும் என நாம் ஜெபிக்கவேண்டும்.

4 கொள்ளை நோய் என்னத்தை சாதித்தது?

கடந்த அத்தியாயத்தில் நாம் பார்த்த கொள்ளைநோய்கள் கோடிகோடியாய் மக்களை கொன்று குவித்திருந்தாலும் அவற்றின் மூலம் சில நன்மைகளும் வாய்த்திருக்கின்றன. அவற்றை இப்பகுதியில் பார்க்கவுள்ளோம்.

கொள்ளை நோய்களும் கிறிஸ்தவத்தின் வளர்ச்சியும்

சரித்திரத்தில் கொள்ளைநோய்கள் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு மூன்று விதங்களில் உதவியதாக வேத அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள் (Stark,1996)

1. கிறிஸ்தவம் மறு வாழ்வின் நம்பிக்கையை கொடுப்பதினால், கிறிஸ்தவர்கள் சரித்திரத்தில் வந்த கொள்ளை நோய்களை சந்திக்க ஓரளவு தயார் நிலையில் இருந்தார்கள். கி.பி. 3ம் நூற்றாண்டில் கார்த்தேஜ் என்ற இடத்தின் ஆயரான சைப்பிரியன் என்பவர் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி இதோ:

"நம்மில் அநேகர் இந்த நோயினால் மரித்துக் கொண்டிருக்கிறோம். இவ்வுலகில் இருந்து விடுவிக்கப் படுகிறோம். கிறிஸ்துவின் எதிரிகளான யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் இது கவலைக்குரிய விஷயம். ஆனால் கடவுளின் சேவகர்களுக்கோ இது ஒரு மரியாதையுடனான பிரியாவிடை. நல்லவர்களும் கெட்டவர்களும் எந்த வித வித்தியாசமும் இல்லாமல் மரிக்கிறார்களே என்று நாம் எண்ணக்கூடாது. நீதிமான்கள் இளைப்பாறி ஆறுதல் அடைவதற்காக அழைக்கப்படுகிறார்கள். நீதியற்றவர்களோ சித்திரவதைக்காக அழைத்துக் கொள்ளப்படுகிறார்கள்...இந்த நோயின் போது மரணத்தை பார்த்து நாங்கள் பயப்படாமல் கிறிஸ்துவுக்காக மரிப்பதையே நாடுகிறோம். மரணத்தை பார்த்து பயப்படாமல் இருப்பதினால் ஜீவ கிரீடத்திற்காக அது நம்மை தயார்ப்படுத்துகிறது. ஆண்டவருடைய அழைப்பினால் இவ்வுலகில் இருந்து விடுதலை செய்யப்பட்ட நம்முடைய சகோதரர்களுக்காக நாம் துக்கங்கொண்டாடக்கூடாது, ஏனென்றால் அவர்கள் தொலைந்து போகவில்லை, நமக்கு முன்பாக சென்றிருக்கிறார்கள். நம்மை விட்டு பிரிவதினூடாக அவர்கள் நமக்கு வழி காட்டுகிறார்கள். பயணிகளைப்போல அவர்களை பார்க்கவேண்டுமே தவிர அவர்களுக்காக நாம்

துயரப்பட்டு புலம்பக்கூடாது. அப்படிசெய்தால் புறஜாதி மக்கள் 'இவர்கள் மரித்தவர்கள் உயிரோடிக்கிறார்களென்று சொல்லியும் அவர்களுக்காக அழுகிறார்களே என்று நம்மைப்பார்த்து நகைப்பார்கள்' " (Cyprian, De Mortalitate).

2. *கொள்ளை நோய் கொடூரமாக இருக்கும் காலங்களிலும் கூட, கிறிஸ்தவர்கள் நோயாளிகளை கவனிப்பதை தம்முடைய கடமையாகவே நினைத்தார்கள். புறஜாதி மதகுருக்களும், ஆட்சியாளர்களும் கொள்ளை நோய் பரவும் நகரத்தை விட்டு ஓடிய போதும், கிறிஸ்தவர்கள் அந்நகரங்களில் தங்கியிருந்து நோயுற்றவர்களுக்கு சிகிச்சை அளித்தார்கள்* (Stark,1996).

சைப்பிரியன் காலத்தில் வாழ்ந்தவரும், அலெக்சாண்டரியா பட்டணத்தின் ஆயருமான டயோனிஷியஸ் என்பவர் தனது உயிர்த்த ஞாயிறு கடிதத்தில் (easter message) *இதை சுட்டிக்காட்டுகிறார்:*

"நம்முடைய சகோதரர்களில் அநேகர் மற்றவர்களைப்பற்றி மட்டுமே சிந்தித்து அளவில்லாத அன்பையும் விசுவாசத்தையும் காட்டியுள்ளார்கள். ஆபத்தைப் பார்த்து பயப்படாமல் நோயாளர்களின் எல்லா தேவைகளையும் கிறிஸ்துவுக்குள் கவனித்துக் கொண்டார்கள். மற்றவர்களைப் போலவே இவர்களுக்கும் நோய் தொற்றிய படியினால் அவர்கள் சந்தோஷத்தோடே உலகை விட்டுப் பிரிந்தார்கள். ஆனாலும் அவர்கள் தங்கள் அயலவர்களின் நோயை ஏற்றுக்கொண்டு தங்கள் வலியையும் ஏற்றுக் கொண்டார்கள். மற்றவர்களை கவனித்துக் கொள்வதினூடாக அவர்கள் மரிக்க வேண்டிய இடத்தில் தாங்கள் மரித்தார்கள். நம்முடைய சகோதரர்களில் சிறந்த குருமாரும், சாதாரண விசுவாசிகளும் இவ்வாறு மரித்து மிகுந்த பாராட்டுதலைப் பெற்றுக்கொண்டார்கள். இவ்வாறு பலத்த விசுவாசத்துடனும் மிகுந்த பக்தியுடனும் மரிப்பது கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரிப்பதற்கு சமம்."

கிறிஸ்தவர்களைப்பற்றி ஜீலியஸ் ராயனும் அவர்கள் ஏழைகளை கவனிக்கிறார்கள் என்றும் மரித்தோரின் கல்லறைகளை கவனிக்கிறார்கள் என்றும் கூறியுள்ளான் (Stark, 1996). *இதனால் கொள்ளை நோய்களின் முடிவில் விகிதாசார அடிப்படையில் அதிகளவிலான கிறிஸ்தவர்கள் உயிரோடிருந்தார்கள். புறஜாதி மக்கள் இதை ஆச்சரியமாகவே பார்த்தார்கள்* (Stark,1996).

கிறிஸ்தவர்கள் மக்களுக்கு இவ்வாறு சேவை செய்வதற்கு ஒரு காரணம், மனிதர்களுக்கு சேவை செய்வதை கடவுளுக்கு சேவை செய்வதாக அவர்கள் புரிந்து வைத்திருந்தது தான். புறஜாதி மதங்களில் தெய்வங்கள் பலிகளை எதிர்பார்த்தாலும் மனிதர்கள் மற்ற மனிதர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றோ அப்படி செய்வதை கடவுளுக்கு செய்வதாக பார்க்கின்ற எண்ணமோ இல்லை என்று Stark *என்ற அறிஞர் கூறியுள்ளார்* (Stark,1996*).*

3. *முன்பு குடும்பத்தாருடைய கட்டாயத்தினால் கிறிஸ்தவர்களாக வர முடியாமல் இருந்தவர்கள், இப்போது அனைவரும் இறந்து யாருமற்ற நிலையில் இருந்தபடியினால், சபைக் குடும்பத்தில் இலகுவாக இணைந்தார்கள்.*

இக்காலங்களிலும் சரித்திரத்தில் நடந்த அதே விஷயங்கள் மீண்டும் நடக்கிறது. இந்தியாவில், வட பீகாரில் கொரோனாவின் உச்சக்கட்ட பாதிப்பிலும் கூட, பல கிறிஸ்தவ மருத்துவர்கள் இவ்வாறு தியாக மனப்பான்மையோடு கிறிஸ்துவின் அன்பைக் காட்டி ஊழியம் செய்கிறார்கள். இதனால் கர்த்தரை அறியாத பலர், கொரோனாவால் மரிப்பவர்கள் கூட, கர்த்தரிடம் திரும்புகிறார்கள் என்பதை கேள்விப்பட்டு நான் கர்த்தரை துதிக்கிறேன்.

மற்ற நன்மைகள்

கொள்ளை நோய் வரும் போது பல தீமைகள் வருவது உண்மை தான். ஆனால் கொரோனாவும் கொள்ளை நோய்களும் பாவத்தை அடக்கி, மனந்திரும்புங்கள் என்று சத்தமிடும் கர்த்தரின் குரலின் ஒலிபெருக்கியாகவும் செயற்படுகின்றன. பல விதங்களில் பாவத்தை கட்டுப்படுத்தும் கருவிகளாக செயற்படுகின்றன. அவற்றில் சில இதோ:

1. *எயிட்ஸ் வந்தபோது அது வரையறையின்றி முறையற்ற விதத்தில் பார்ப்போரோடெல்லாம் கண்டபடி பாலுறவு கொள்வதை ஓரளவுக்காவது கட்டுப்படுத்தியது. அதன் பின்னரே கொண்டம் (ஆணுறை) பாவனை பிரசித்தமானது* (Collier,2007).

2. *எயிட்ஸ் பாலுறவை கட்டுப்படுத்தியது என்றால் கொரோனா முத்தமிடுவதையோ ஏன் மற்றவர் அருகில் செல்வதையும் கூட கட்டுப்படுத்தியது. மூச்சுக்காற்றில் வரும் திரவத்துளிகளால் கொரோனா பரவுவதால் ஓரளவுக்காவது இந்த பயம் இருக்கும்.*

*அமெரிக்க உளவியல் சங்கம் (*American Psychological Association*) **2021** மார்ச் மாதம் நடத்திய ஒரு ஆய்வில், **49** சதவீதமான அமெரிக்கர்கள் கொள்ளை நோய் முடிந்தபின்பும் நேருக்கு நேர் பழகுவதைக்குறித்து கவலை தெரிவித்தனர்.*[19]

3. *விபச்சாரம், வேசித்தனம் போன்ற பாவங்களுக்கெல்லாம் அடிமையாய் இருந்தவர்களுக்கு தனிமைப்படுத்தல் ஒரு விடுதலையை கொடுத்தது. கள்ளக்காதலியிடம் போகாவிட்டால் என்னால் வாழ முடியாது என்று கள்ளக்காதலியே கதியென்று இருந்தவர்கள் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டவுடன் இவையெல்லாம் இல்லா விட்டாலும் கூட தங்களால் வாழ முடியும் என்று உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இது போதை வஸ்து, கேளிக்கை விடுதிகள் போன்ற மற்ற அடிமைத்தனங்களுக்கும் பொருந்தும்.*

4. *தங்களைப்பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருந்தவர்கள் வேலையில்லாமல் பசியோடிருக்கும் மற்றவர்களைப் பற்றியும் சிந்திக்க ஆரம்பித்தார்கள்.*

5. *வேக வேகமாக ஓடிக்கொண்டிருந்தவர்கள் ஒரு கணம் நிறுத்தி நிதானிக்க ஆரம்பித்தார்கள். மரிப்பவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கவே வாழ்வின் நிலையாமையைப்பற்றி மனிதர்கள் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அசுர வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தவர்கள் நிறுத்தி நிதானிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். நித்தியத்தின் வெளிச்சம் உலக வீதிகளில் ஒரு ஓரத்தில் பிரகாசிக்க ஆரம்பித்திருக்கிறது.*

6. *முன்னொரு போதும் இல்லாத வகையில் உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் தொழில் நுட்பத்தின் துணையால் ஒன்றாக இணைந்துள்ளார்கள். பல புதிய ஊழிய ஊடகங்கள் திறக்கப் பட்டிருக்கின்றன. பிற நாடுகளில் குடியேறிய வேத அறிஞர்கள் சூம் (*zoom*) மூலம் நமக்கு நல்ல பல பாடங்களை கற்றுத்தருகின்றனர். ஆசியாவில் வாழும் அறிஞர்கள் மேலை நாடுகளில் கற்பிக்கவும், மேலை நாடுகளில் வாழும் அறிஞர்கள் ஆசியாவில் போதிக்கவும் பல வாய்ப்புகள் உருவாகியிருக்கின்றன. கர்த்தர் இவ்வாறு பல கதவுகளை திறந்திருக்கிறார்.*

ஆனால் இவை அனைத்தும் தற்காலிகமானவை தான். கொரோனாவால் மூடியிருந்த கேளிக்கை விடுதிகள் திறந்ததும் காய்ந்த

---

[19] https://www.apa.org/news/press/releases/stress/2021/one-year-pandemic-stress-conclusion

மாடு கம்பங்கொல்லையில் விழுந்ததைப் போல, கட்டவிழ்ந்த காளைகளாய் அனைவரும் மீண்டும் மோசமான வழிகளில் விழுவது கவலைக்குரியது.

நோவாவின் வெள்ளத்திலும் இதே பிரச்சனை இருந்தது – தீமையை அழிக்க வெள்ளம் வந்தாலும் அதன் பின்பு நோவா குடித்து வெறிப்பதும் அவனுடைய மகன் தகப்பனைக் கணம் பண்ண தவறியதற்காக தண்டிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே கழுவிய பன்றி சேற்றிற்கு திரும்பும், நாய் கக்கியதை உண்ணும் என்று சொன்னதின்படி மனித இனம் மீண்டும் மீண்டும் பாவத்திற்கு திரும்பிக்கொண்டிருக்கிறது. ஆனால் அப்படி மீண்டும் மீண்டும் மனிதர்கள் பாவம் செய்கிறார்கள் என்பதற்காக, அவர்களை திருத்தும் நடவடிக்கைகள் தேவையில்லை என்ற முடிவுக்கு நாம் வந்து விடக்கூடாது. இன்று குளித்தாலும் நாளை நமது உடல் மீண்டும் அழுக்காகிவிடும் என்பதால் நாம் குளிப்பதை நிறுத்திவிடுவதில்லை. அதுபோல மனிதர்கள் திரும்பத் திரும்ப தவறு செய்தாலும் அவர்களை தொடர்ச்சியாய் நல்வழிப்படுத்த வேண்டியிருக்கிறது.

மனிதர்கள் மனிதம் மறந்து மிருக இனமாக முற்றிலும் மாறாமல் தடுப்பதற்காக கொரோனா போன்ற கொள்ளை நோய்கள் அவசியமாகின்றன. சற்று சிந்தித்துப்பாருங்கள் - எயிட்ஸ் நோய் வரும் என்று தெரிந்தும் கூட, இச்சையின் ஈர்ப்பினால், ஆசையின் அவசரத்தினால் ஆணுறை அணியாமல் பலர் கண்டபடி – முன்பின் தெரியாதவர்களோடு கூட உடலுறவு கொள்ளுகிறார்கள். எயிட்ஸ் நோய் வந்திருக்காவிட்டால் நிலைமை எப்படியிருந்திருக்கும்? உலகை உலுக்கும் நோய்கள் நம்மை சீர்படுத்தி நமது பாவத்தை கட்டுப்படுத்துகின்றன. கர்த்தருடைய சித்தம் உலகில் நிறைவேற வழிகோலுகின்றன.

கர்த்தர் தமது சித்தத்தை நிறைவேற்றுகிறார்

கொரோனா கர்த்தரை மீறி வந்த ஒன்றல்ல. அவருடைய திட்டத்தை மீறி வந்த ஒன்றல்ல. தன்னுடைய மக்களை சுத்திகரிக்கவும், உலகத்தை தன் பக்கம் திருப்பவும், மனந்திரும்புங்கள் என்ற செய்தியை எல்லாருக்கும் கேட்கும்படி சொல்லவும் இந்த கொரோனாவையும் கர்த்தர் பயன்படுத்துகிறார். அதுமட்டுமல்ல, நமக்குத் தெரியாத, நம்மால் புரிந்து கொள்ளமுடியாத பல விஷயங்களை செய்து

முடிக்கவும் கர்த்தர் இந்த தருணத்தை பயன்படுத்துகிறார். உதாரணமாக, குறிப்பிட்ட ஒரு நாட்டிலிருந்த சபையொன்றில் பல குழப்பங்கள் இருந்தன. பிழையானவர்களின் கையில் அதிகாரம் இருந்தது. பொல்லாதவர்கள் எல்லாரும் சபைக்கூட்டத்தை கூட்டி, நல்லவர்களை, கடவுள் நியமித்தவர்களை வெளியேற்ற முயற்சித்துக் கொண்டி ருந்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்ய முயற்சித்த ஒவ்வொரு தடவையும் கொரோனா தனிமைப்படுத்தலால் அந்த கூட்டங்களை வைக்க முடியாமல் போனது. அப்படியானால் இந்த சிறு சபையில் நடக்கவிருந்த இப்படியான கூட்டங்களை தடுப்பதற்காகத்தான் கர்த்தர் உலகத்திலே கொரோனாவை அனுமதித்தாரா? இதற்காக மட்டும் அல்ல. ஆனால் உலகத்திலே கொரோனாவை அனுமதிக்கும் போது இதுவும் துணை நோக்கமாக அவர் மனதிலே இருந்திருக்கலாம். இதேபோன்று நமக்கு தெரியாத பல காரியங்களை கர்த்தர் திரை மறைவில் சாதித்திருக்கலாம். கொரோனாவையும் கர்த்தர் எப்படி தனது சித்தத்ததை நிறைவேற்ற பயன்படுத்துகிறார் என்பதற்கு இது நல்ல உதாரணம்.

உலகத் தோற்றத்திற்கு முன்பே கர்த்தர் கொரோனாவை அறிந்து வைத்திருக்கிறார் - எப்போது கொரோனா வரவேண்டும், எதை தாண்டி போகக்கூடாது என்று வரையறை போட்டிருக்கிறார். ஆகவே தைரியம் கொள்ளுங்கள்.

துன்பங்கள் நம்மை தூய்மை யாக்குகின்றன

கர்த்தர் தாவீதைத் தெரிவு செய்து நீதான் அடுத்த அரசன், அரியாசனம் உன்னுடையது என்று வாக்குக் கொடுத்த பின்பும் அவனை சவுல் துன்பப்படுத்தினான். துரத்தி துரத்தி துன்பம் கொடுத்தான். இதனால், வாக்குத்தத்தம் பெற்று பல ஆண்டுகள் ஆகியும் தாவீது அரசனாகவில்லை. ஆனால் அந்த துன்பங்களுக்கூடாக கர்த்தர் தாவீதை தயார்ப்படுத்தினார். தனக்கேற்ற பாத்திரமாக அவனை வணைந்தெடுத்தார்.

நம்முடைய வாழ்விலும் நாம் சந்திக்கும் துன்பங்களுக்கூடாக கர்த்தர் நம்மை தூய்மைப் படுத்துகிறார். நம்மோடு ஒட்டிப்பிறந்த மிருகத்தோலை உரிக்கிறார். கொரோனாவினால் ஏற்பட்ட பயம் நம்மை தூய்மைப் படுத்தவேண்டும். கர்த்தரை நோக்கி இழுக்கவேண்டும்.

மோசே ஒரு எகிப்தியனை கொலைசெய்தான். தன்னுடைய சுயபெலத்தால் இஸ்ரவேலருக்கு விடுதலையை பெற்றுக்கொடுக்கப் பார்த்தான். விளைவு? 40 ஆண்டுகள் வனாந்தரத்தில் ஆடுமேய்த்தான். கர்த்தர் அவனை ஆடுமேய்க்கச் செய்தார். சற்று சிந்தித்துப்பாருங்கள். அரண்மனையில் சகல வசதிகளோடும் சுகபோகங்களோடும் வாழ்ந்தவன் இப்போது பாலைவனத்தில் ஆடுமேய்க்கிறான். ஆடுகளை மேய்த்தவன் இலட்சக்கணக்கான மனிதர்களையும் மேய்க்கக்கற்றுக் கொண்டான். கர்த்தர் அவனையும் துன்பங்களுக்கூடாக தயார்படுத்தினார்.

கர்த்தர் வேதாகம நூல்களுக்கு விளக்கவுரை எழுதுமாறு என்னை அழைத்த போது, முதலில் மாற்கு சுவிசேஷத்திற்கான விளக்கவுரையை எழுத ஆரம்பித்தேன். ஆனால் அந்த நூல் வெளியே வருவற்கு முன் பல துன்பங்களை சந்தித்தேன். என் வாழ்விலும் என்னை நெருங்கியவர்களின் வாழ்விலும் பலத்த புயல்கள் வீச ஆரம்பித்தன. அவற்றுக்கூடாக கர்த்தர் என்னுடன் பேசி என்னை மாற்றினார், இன்னும் அதிகமாக பரிசுத்த மாக்கினார். இறுதியில் நூல் வெளி வரும்போது நான் முன்பு இருந்ததை விட மாறியிருந்தேன், கர்த்தரை இன்னுமாக நெருங்கியிருந்தேன்.

கர்த்தர் தாம் பாவிக்கின்ற யாவரையும் துன்பங்களுக்கூடாக தயார்படுத்துகிறார். அந்த நேரத்தில் நாம் கர்த்தரை விட்டு விலகி விடாமல் அவரை சார்ந்திருந்து அந்த தயார்ப்படுத்தலின் காலங்களை பொறுமையோடே கழிக்கவேண்டும். துன்பமாய் இருக்கிறதே என்று கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடக்கூடாது.

கொரோனாவைப் பற்றி எச்சரிக்கையையும் கர்த்தரைப் பற்றிய நம்பிக்கையையும் கொடுப்பதே இச்சிறு நூலின் நோக்கம். அடுத்ததாக எச்சரிக்கைகளையும் அவற்றைத்தொடர்ந்து நம்பி க்கையூட்டும் பகுதிகளையும் வேதத்திலிருந்து தந்திருக்கிறோம்.

5 *எச்சரிக்கை!*

கடந்த பகுதியில் கர்த்தர் எப்படி கொரோனாவை தன்னுடைய சத்தத்தை தெரியப்படுத்தவும், சித்தத்தை செயற்படுத்தவும் பாவிக்கிறார் என்பதை பார்த்தோம். இப்பகுதியில் வேதாகமத்தில் வந்த துன்பங்களும் தண்டனைகளும் என்னத்தை சாதித்தன; கர்த்தர் அவற்றினூடாக என்ன பாடத்தை நமக்கு வைத்திருக்கிறார் என்று பார்க்க இருக்கிறோம். உலகம் சீர்கெட்டு போன ஒவ்வொருமுறையும் கர்த்தர் அதை தன்போக்கில் விட்டுவிடவில்லை. கடிகாரத்தை செய்தவன் அடிக்கடி வந்து அது நன்றாக வேலை செய்கிறதா என்று சோதித்துப் பார்ப்பதில்லை. கடவுள் தான் படைத்த உலகத்தை அவ்வாறு விட்டுவிடவில்லை. அடிக்கடி விசாரிக்கிறார். அதன் போக்கை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

நோவாவின் வெள்ளம்

"மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கின தற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்." மனஸ்தாபப்பட்ட கர்த்தர் நீதி மானாகிய[20] *நோவாவை காப்பாற்றி மற்றவர்களை – முழு உலகையும் வெள்ளத்தினால் அழித்தார்.*

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் முதலாவது பாடம் - கர்த்தர் உலகத்தை விசாரிக்கிறார். எக்கேடும் கெட்டுப்போங்கள் என்று கர்த்தர் அவர்களை விட்டுவிடவில்லை. உலகில் பாவம் பெருகிய போதெல்லாம் கர்த்தர் அதை பார்த்துக்கொண்டு எதுவும் செய்யாது இருக்கவில்லை. பாவத்தில் வீழ்ந்தாலும் இன்னும் இது கர்த்தருடைய உலகந் தான். அவரை மீறி ஒர் அணுவும் அசைவதில்லை.

நோவாவின் வெள்ளம் கர்த்தரிடத்திலிருந்து வந்தது என்பது தெளிவு. கர்த்தர் யாரையும் அழிக்க மாட்டார் என்பது பிழையான கொள்கை. வேதத்தில் பல இடங்களில் பொல்லாதவர்களை அழித்திருக்கிறார்.

[20] *ரோ **3:10**ல் அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை என்று சொல்கிறதே அப்படியானால் இங்கே நோவா எப்படி நீதிமானாக இருக்க முடியும் என்று நீங்கள் கேட்கலாம். இங்கே நோவா அவனுடைய காலத்து மக்களோடு ஒப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறான். தேவனுடைய நீதியோடு ஒப்பிடடு பார்க்கும்போது அவனும் நீதிமான் அல்ல. ஆனால் மற்ற மக்களோடு ஒப்பிடுகையில் அவன் பன்மடங்கு தேறியவனாகவே இருந்தான்* (Walton, *2001*).

அப்படியானால், மனிதர்கள் பொல்லாதவர்கள் என்பதற்காக அவர்கள் அனைவரையும் அழிப்பது சரிதானா என்ற கேள்வி நமக்கு வரக்கூடும். இது சற்று சிக்கலான கேள்வி தான்.

முதலாவது, உலகை படைத்தவருக்கு அதை அழிக்கும் உரிமை இருக்கிறது. இன்று இருந்து நாளை மரிக்கும் மனிதர்களே இத்தனை உரிமை எடுத்துக்கொண்டால், அனைத்தையும் படைத்த ஆதி அந்தமற்ற தேவனுக்கு முழு உரிமை இருப்பது நிச்சயமல்லவா?

இரண்டாவது, கடவுள் அழித்திருக்காவிட்டாலும் கூட அவர்கள் எப்படியும் இறந்திருப்பார்கள். ஆக இந்த இடத்தில் நடந்தது அவர்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் இறந்தது தான். யார் எப்போது மரிக்கவேண்டும் என்பதை நிச்சயிப்பது கடவுள் அல்லவா? அதை இங்கே ஒரே நேரத்தில் செய்திருக்கிறார்.

மேலும், கடவுள் அழித்திருக்காவிட்டாலும் கூட அவர்கள் ஒருவரை ஒருவர் அழித்திருப்பார்கள். தீமையும் பகைமையும் அதிகரித்துக்கொண்டிருந்த காலமது. அவர்கள் அழிக்கப்படாவிட்டால் அவர்கள் ஒன்றில் நோவாவை அழித்திருப்பார்கள், இல்லாவிட்டால் நோவாவும் அவர்களைப் போலவே பொல்லாதவனாக மாறியிருப்பான். இன்றும் இது நடக்கிறது. மனிதர்கள் ஒருவரை ஒருவர் அடக்கி ஆள நினைக்கிறார்கள். கவிஞன் சொன்னதைப்போல தனது ரொட்டித் துண்டை மற்றவனின் இரத்தத்தில் தொட்டுக் கொள்கிறான் மனிதன்.

இந்த அழிவின் பின் முழு உலகையும் அழிக்க மாட்டேன் என்று கடவுள் கூறியது (ஆதியா 8:21) மனிதர்கள் நல்லவர்களாக மாறி விட்டதை காட்டவில்லை, கடவுள் கிருபையுள்ளவர் என்பதையே காட்டுகிறது.

நோவாவின் கதையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் மிக முக்கியமான பாடம் - பாவத்தின் தண்டனையாக நிச்சயம் ஒரு நாள் அழிவு வரும் என்பதே.

பாபேல் கோபுரம்

"பின்னும் அவர்கள்: நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப் போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள்."

நோவாவின் பேழைக்கு பிறகு, பெரியளவில் உலகை பாதித்த சம்பவம் பாபேல் கோபுரம். தமது பெயரை நிலைநாட்ட கோபுரங்களையும் கட்டிடடங்ளையும் கட்டுவது அக்காலத்திலேயே நடந்த ஒரு விஷயம். நீங்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள் (ஆதி **9:2)** என்ற கட்டளையை எதிர்த்து, ஒரே இடத்தில் ஒன்றாக வாழ்ந்து, தங்களுக்கு ஒரு பெயரை ஏற்படுத்தி கொள்ளுவதற்காக கோபுரத்தையும் நகரத்தையும் கட்டினார்கள்.

பெருமை அல்லது "பெயர்" என்ற கருப்பொருள் ஆதியாகமத்தில் ஆரம்பத்திலிருந்தே வருகின்ற ஒரு விஷயம். மனிதன் மனிதனாக இருக்காமல் தேவனைப்போல வரவேண்டும் என்ற ஆசையுடன் அவருக்கு கீழ்ப்படியாமல் அவர் தடை பண்ணிய கனியை புசித்தான் (ஆதி **3:5).** 'எது சரி எது பிழை என்பதை நீர் எனக்கு சொல்ல தேவையில்லை, நானே தெரிந்து கொள்கிறேன்' என்று தான் தோன்றித் தனமாக வாழ ஆரம்பித்தான்.

இதே ஆசையினால் தான் தேவதூதனாக படைக்கப்பட்ட லுசிபர் தேவனுக்கு விரோதமாக செயல்படும் சக்தியாக மாறினான் (ஏசா **14:12-14).** "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத் திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்" என்று கடவுளுக்கே சவால் விட்டான்.

காயின் தேவனுடைய சந்நிதியில் இருந்து துரத்தப்பட்ட போது, ஒரு பட்டணத்தை கட்டி அதற்கு தனது குமாரனின் பெயரை வைத்தான் (ஆதி **4:17).**[21] ஆதியாகமம் **6:4**ல் சொல்லப்பட்ட இராட்சதர்களும் "பெயர்" பெற்றவர்களாக இருந்தார்கள். ஆதியாகமம் **11:4**ல் மனிதர்கள் தங்களுக்கு பெயர் உண்டாகும் படி கோபுரத்தை கட்டுகிறார்கள். ஆனால் ஆதி **12**ல் கர்த்தர் ஆபிரகாமை அழைக்கும்போது, நான் உன் பேரை பெருமைப்படுத்துவேன் என்று வாக்குக்கொடுக்கிறார்.

ஆக பெயர் உண்டாகும்படி செய்வோம் என்ற கருப்பொருள் ஆதியாகமத்தில் மீண்டும் மீண்டும் வருகிறது.

---

[21] கடவுள் நிலையற்று அலைந்து திரிகிறவனாய் இருப்பாய் என்று சொன்னதை கேட்காமல் தேவன் அவனுக்கு கொடுத்த பாதுகாப்பின் வாக்குறுதியை நம்பாமல் தனது பாதுகாப்பிற்காக தானே தனக்கென ஒரு பட்டணததை கட்டிக்கொள்கிறான். ஒருவேளை தன்னுடைய பெயரை வைத்தால் தன்னை கொலை செய்வதற்கு யாரும் வந்து விடலாம் என்று எண்ணி தனது குமாரனனின் பெயரை வைத்திருக்கலாம்.

பாபேல் கோபுரத்தை தனக்கெதிரான ஒரு புரட்சியாகவே தேவன் பார்த்தார்.[22] *அதனால் கர்த்தர் அவர்களின் பாஷையை தாறுமாறாக்கினார். அதன் மூலம் அவர்களை சிதறடித்து, உலகம் பூராவும் தேவகட்டளைப்படி பரவி வாழச் செய்தார்.*

இன்றும் மனிதர்கள் பரலோகத்திற்கெதிராக (ஜோன் கல்வின் சொன்னதைப்போல) தங்கள் கொம்பை உயர்த்துகிறார்கள். கடவுள் நினைத்தாலும் நமது கப்பலை மூழ்கடிக்க முடியாது என்று சொல்லப்பட்ட டைட்டானிக் கப்பல் அதன் முதல் பயணத்திலேயே மூழ்கியது. நமது கட்டிடங்களும், சாதனைகளும் நமது தேவைகளுக்காக இருக்கவேண்டுமே தவிர, பரத்தில் இருக்கும் கர்த்தருக்கெதிராக, பூமியிலிருந்து தூக்கப்படும் புரட்சிக் கொடிகளாக இருக்கக்கூடாது.

சோதோம் கோமோரா

ஆதி 18:20ல் கர்த்தர் சோதோம் கொமோராவை நெருப்பு மழையினால் அழித்ததிற்கான காரணம் அவர்களுடைய பாவம் மிக மோசமாயிருந்ததே. அதற்கு அத்தாட்சியாக ஒரு சம்பவத்தையும் பரிசுத்த ஆவியானவர் பதிவு செய்திருக்கிறார். ஆண் வடிவில் உள்ள தேவ தூதர்கள் அங்கே சென்றதும் அவர்களோடு உடல் உறவு கொள்வதற்காக ஊரே புறப்பட்டு வந்தது. இது அவர்களுடைய பாவம் எவ்வளவு கொடியது என்பதையும், எல்லாரும் பொல்லாதவர்களாய் இருந்தார்கள் என்பதையும் காட்டுகிறது. கர்த்தர் பாவத்தை கண்டும் காணாமல் இருக்கின்றவர் அல்ல என்பதற்கு இது இன்னுமொரு சான்று.

இன்றும் இவ்வாறு நடக்கிறதல்லவா? ஆண் பெண் திருமண உறவில் இணைவதை விட்டு விட்டு, ஆணும் ஆணும் உடலுறவு கொள்வது மட்டுமல்ல, இருவரும் "முறைப்படி" திருமணம் செய்து கொள்வதும் (அதுவும் திருச்சபையில்!!!) குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதும் எத்தனை அசிங்கமானது! இன்று ஆணோடு ஆணும், பெண்ணோடு பெண்ணும் உறவு கொள்வதும் திருமணம் முடிப்பதும் சட்டரீதியாகி விட்டது மட்டுமல்ல, வேதத்திலும் அதற்கு இடம்

---

[22] *இன்னொரு வெள்ளம் வந்தால் வானுயர்ந்த கோபுரத்தில் ஏறி தப்பிக்க நினைத்துத்தான் அதை கட்டினார்கள் என்று கருதுபவர்களும் உண்டு (யோசப்பஸ் 2000 வருடங்களுக்கு முன் இந்த கருத்தை தெரிவித்தார். பார்க்க:* (Mascrenghe *2014*).

உண்டு என்று சில விஷமிகள் கூறுவதைக்கேட்கும் போது எனக்கு கோபம் வருகிறது. சில வேத அறிஞர்கள் கூட பெண்ணோடு பெண் உறவு வைத்துக்கொள்வதும், தாங்கள் எழுதும் புத்தகத்தை தங்கள் துணைவருக்கு அர்ப்பணிப்பதும் கர்த்தருக்கு அருவருப்பானது. ஆணுக்கும் ஆணுக்கும் ஆலயத்தில் நடந்த முதலாவது திருமணம், 1986 ஒல்லாந்து நாட்டில் Remonstrant Church ல் தான் நடந்தது என்பதை நினைக்கும் போது என் மனம் வருந்துகிறது. பதினேழாம் நூற்றாண்டில் எப்படி ஆரம்பித்தவர்கள் இப்படி போய் விட்டார்களே என மனம் அழுகிறது. ஆணுக்கு துணையாக தேவன் பெண்ணை படைத்தார் என்பதே வேதத்தின் தெளிவான போதனை.

அறுவை சிகிச்சை மூலம் பெண்ணாக மாறிய ஆணை, “அவள்” என்று அழைக்க மறுத்தவர்கள் தங்கள் வேலையை இழந்தார்கள்; பள்ளிக்கூட சிறுவன் எனக்கு தாய் இல்லை இரண்டு தகப்பன்மார் இருக்கிறார்கள் என்று சொன்னதை கண்டித்த ஆசிரியைக்கு வேலை பறிபோனது – இவை மேலை நாடுகளில் நடந்து வருகின்ற சம்பவங்கள்.

இதையெல்லாம் தேவன் கண்டும் காணாமல் இருந்தால் அது அவருக்கு பரிசுத்த கேடு. அவருக்கு அவமானமும் அபகீர்த்தியும் உருவாகும். ‘இதோ இந்த கர்த்தர் நம்மில் ஒருவர் ஆனார்’ என்று இந்த மனிதர்கள் சொல்ல ஆரம்பிப்பார்கள்.

கானான் தேசம்

யோசுவாவின் தலைமையில் கானான் தேசத்திற்காக நடந்த போர்களில் கானானியர் அழிக்கப்பட்டார்கள். அதற்கும் அவர்களுடைய பாவமே காரணமாக சொல்லப்படுகிறது (ஆதி 15:16).

கானான் தேசத்திற்கு போகின்ற வழியில் மோசேக்கு எதிராக பேசி தேவனுக்கெதிராக கலகம் பண்ணியவர்களை நிலம் இரண்டாக பிளந்து உள்வாங்கிக்கொண்டது. மற்ற 250 பேரை அக்கினி அழித்தது.

எண்ணாகமம் 21ல் இஸ்ரவேல் மக்கள் தேவனுக்கு விரோதமாக பேசி கலகம் பண்ணியதையும் தேவன் வெறுமனே விட்டு விடவில்லை. சர்ப்பங்களை அனுப்பித் தண்டித்தார்.

இஸ்ரவேல் மக்கள் கானான் நாட்டில் குடியேறிய பின்பு, அவர்கள் பாவம் செய்த போதெல்லாம் அவர்களை தேவன் அடிமைகளாக பிற நாட்டவருக்கு ஒப்புக்கொடுத்தார். இறுதியாக அந்நிய நாட்டவர்கள் யூதர்களை தங்கள் சொந்த நாட்டை விட்டே

வெளியேற்றவும் கர்த்தர் அனுமதித்தார் - சொல்லப்போனால் அவரே அதை நியமித்தார் எனலாம் (2 நாளா 36:15-23). இஸ்ரவேல் மக்களுடைய பாவங்களுக்கெல்லாம் மூல காரணம் அவர்கள் அந்நிய தெய்வங்களை வழிபடத் தொடங்கியது தான். அந்நிய தெய்வங்களை வழிபட முக்கியமான ஒரு காரணம் கலப்புத்திருமணங்கள். புறஜாதி மக்களோடு கலப்புத்திருமணம் செய்யும்போது அவர்கள் தங்கள் தெய்வங்களை சபைகளுக்குள் மெதுவாக கொண்டுவருவார்கள். கிறிஸ்து மட்டுந்தான் கடவுள் என்று பிரசங்கம் செய்வது மற்றவர்களின் மனதை புண்படுத்தும் என்று கூறி சர்வ மத சம்மேளனத்தை சபையில் உண்டுபண்ண பார்ப்பார்கள். சில இறையியல் கல்லூரிகளில் பொங்கல் கொண்டாடுவது மட்டுமல்லாமல் சூரியனுக்கும் படைக்கிறார்கள். இது மிகக் கொடூரமானது. ஏனென்றால் அங்கே இறையியல் கற்று வெளியே வருகின்றவர்கள் பல சபைகளுக்கும் சென்று அவற்றை நாசம் செய்யத்தொடங்கிவிடுவார்கள்.

நினிவேயின் நிர்மூலம்

கர்த்தர் நினிவேயை அழிக்குமுன் யோனாவை எச்சரிக்க அனுப்பினார். ஏன்? அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக. மனந்திரும்பியபடியால் அவர்கள் காக்கப்பட்டார்கள். எனினும் அந்த மனந்திரும்புதல் நீடிக்காத படியினால், கடைசியில் அவர்களும் அழிக்கப் பட்டார்கள் (செப் 2:13).

மக்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பாதபடியினால், தனக்கெதிராக கிளம்பியபடியினால், பல நாடுகளை, பல சாம்ராஜ்யங்களை கர்த்தர் அழித்திருக்கிறார். இது நமக்கு நல்ல ஒரு எச்சரிக்கை.

எலியாவால் ஏற்பட்ட பஞ்சம் (1 இராஜா 17)

இஸ்ரவேலில் வந்த மிக மோசமான ராஜா ஆகாப். அவனுடைய காலத்தில் கர்த்தர் எலியாவை கொண்டு சொன்ன வார்த்தைகளால் வானத்தை அடைக்கிறார். நான் சொன்னாலேயொழிய மழை வராது என்று முழங்குகிறான் தீர்க்கன் எலியா. கர்த்தர் மழையை நிறுத்தியதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. இஸ்ரவேல் மக்கள் மெய்த்தேவனை வணங்குவதை விட்டு பாகால் என்ற செழிப்பின், அறுவடையின் தெய்வத்தை வணங்க ஆரம்பித்திருந்தார்கள். எது வேண்டும் என்று

பாகாலை வணங்குகிறார்களோ, (அதாவது செழிப்பு), அதுவே இல்லாமல் போகிறது.

வந்த பஞ்சம் நல்லவர்கள், கெட்டவர்கள் என்ற வேறுபாடின்றி எல்லோரையும் பாதித்தது. பாகாலை வணங்காதவர்கள் கூட அவர்கள் மத்தியில் இருந்தார்கள். தம்முடைய மக்கள் தம்மை விட்டு வேற்று தெய்வங்களை வணங்கியபோது கர்த்தர் அவர்களை தண்டித்தார். சில நேரங்களில் கிறிஸ்துவை விசுவாசிக்கின்றவர்களும் மனிதர்களாக இருக்கின்றபடியினால் மனிதர்களுக்கு வரும் வியாதிகளும் துன்பங்களும் கிறிஸ்தவர்களுக்கும் வருகின்றது. மற்றவர்களுக்கு வரும் துன்பங்கள் கிறிஸ்தவர்களுக்கு வராது என்றால் அனைவரும் கிறிஸ்தவர்களாக வந்து விடுவார்கள் அல்லவா?

கலிலேயரின் இரத்தத்தை சிந்தியது யார்?

*புதிய ஏற்பாட்டிலே நமது மீட்பர் இயேசுவிடம் சிலர் வந்து பிலாத்து செய்த கொடுமையைப்பற்றி கூறுகின்றார்கள் (லூாக் **13:1-3**). பிலாத்து சில கலிலேயர்களை கொன்று அவர்களுடைய இரத்தத்துடன் அவர்கள் பலியிட்ட மிருகங்களின் இரத்தத்தையும் கலந்திருந்தான். இயேசு அதற்கு பதிலாக என்ன சொல்லுகிறார் என்பதை கவனித்துப் பாருங்கள். அவர்களுக்கு 'அது தண்டனையாக கொடுக்கப்படவில்லை – தவறுதலாக கொடுக்கப்பட்டது' என்றா இயேசு கூறுகிறார்? இல்லை. இயேசு மற்றவர்களை எச்சரிக்கிறார்: "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்."*

இயேசு பாவத்திற்கு விளைவுகள் உண்டு என்பதையோ பாவம் நியாயத்தீர்ப்பை உண்டுபண்ணும் என்பதையோ மறுக்கவில்லை. ஒரு சிலருக்கு மட்டுந்தான் இந்த தண்டனைகள் வரும் என்பதை மறுக்கிறார். நாமும் மனந்திரும்பாவிட்டால், நாம் யாராக இருந்தாலும் சரி தண்டிக்கப்படுவோம்.[23]

அனனியா சப்பிராள்

"ஆண்டவர் தண்டித்த சம்பவங்கள் எல்லாம் பழைய ஏற்பாட்டில், கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு முன் நடந்தவை. புதிய ஏற்பாட்டில் சிலுவை மரணத்திற்கு பின்பு கர்த்தர் யாரையும்

---

[23] "Jesus' reply does not deny sin its consequences, nor that sin leads to judgment." (Green, 1997)

தண்டிப்பதில்லை" என்று சிலர் தவறாக கூறுகிறார்கள். அப்படியானால் அனனியா சப்பிராளுக்கு நடந்தது என்ன (அப்போ 5)?

பாருங்கள், நடந்தது ஒன்றும் மிகப் பெரிய குற்றம் அல்ல. நிலத்தை விற்றார்கள். கிடைத்ததில் ஒரு பங்கை காணிக்கை பெட்டியில் போட்டார்கள், மற்றதை தங்கள் சொந்த கஜானாவில் போட்டார்கள். பணம் முழுவதும் அவர்களுடையது தான். என்ன, விற்ற தொகை முழுவதையும் காணிக்கையில் போட்டதாக சற்று பொய் சொல்லிவிட்டார்கள். இவ்வளவு தான். இதைப்பார்த்தும் கர்த்தர் ஒன்றும் செய்யாமல் இருக்கவில்லை. பொய் சொன்னவர்கள் இருவரும் உடனடியாக மரித்துப்போகிறார்கள். 'பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது' என்பது பழமொழி, ஆனால் பொய் சொன்னவர்களுக்கு மரண தண்டனை என்பது சற்று அதிகமல்லவா என்று நாம் சிந்திக்கலாம். ஆனால் அப்படி செய்திருக்காவிட்டால் ஆதி சபை ஆரம்பத்திலேயே களங்கப்பட்டிருக்கும். அவர்களைப் போல இன்னும் பலர் பொய் சொல்லிவிட்டு போலியாக மனந்திரும்பாமல் வாழ்ந்து கொண்டிருந்திருப்பார்கள். பொய்யில் ஆரம்பித்த அவர்கள் பாவம், கொள்ளை, கொலை என்று இன்னும் பல பாவங்கள் உருவாகக் காரனமாக இருந்திருக்கும். அவர்களுக்கு நேர்ந்த கதியை கேள்விப்பட்ட யாவருக்கும் பயம் உண்டாகியதாக வாசிக்கிறோம். அதனால் ஆதி சபை வளர்ந்தது, பல நாடுகளுக்கும் பரவியது. ஆகவே புதிய ஏற்பாட்டில், சிலுவை மரணத்திற்கு பின் கர்த்தர் தண்டிக்க மாட்டார் என்பது சரியான கருத்தல்ல.[24]

---

[24] *சிலர் கர்த்தர் அனனியா சப்பிராளை தண்டிக்கவில்லை ஆனால் பேதுரு தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாக பிழையாக சொல்லுகிறார்கள்.*

1. *முதலாவது அப்படி ஒரு முடிவுக்கு வர வேதத்தில் ஆதாரங்கள் போதாது. அப்போஸ்தலருடைய நடபடிகளில் அவ்வாறு சொல்லப்படவில்லை – அதை வாசிக்கின்ற யாருக்கும் பேதுருவுக்கூடாக கடவுள் அவர்களை தண்டித்ததாகவே தெரிகிறது.*
   - *இந்த சம்பவம் பர்னபாவும் மற்றவர்களும் உடமைகளை விற்று அப்போஸ்தலருடைய பாதத்தில் கொண்டுவந்ததாக சொல்லப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து வருகிறது. அந்த சம்பவத்தோடு அனனியா சப்பிராளுடைய சம்பவத்தையும் முரண்படுத்தி காட்டவே அதைத் தொடர்ந்து இதை பரிசுத்த ஆவியானவர் பதிவுசெய்துள்ளார். அதனால் தான் அது "இப்போது", அல்லது "ஆனால்" என்று அர்த்தப்படும் "de" என்ற கிரேக்க சொல்லுடன் ஆரம்பமாகிறது.*
   - *பர்னபாவுடன் ஒப்பிட்டு நோக்கும் போது, அனனியா சப்பிராள் செய்தது பிழை என்பது இங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.*
2. *பேதுரு "நீ செய்தது எனக்குப் பிடிக்கவில்லை. நீ நாசமாய் போ" என்று கூறி அனனியாவை சபிக்கவில்லை.*

- *பரிசுத்த ஆவிக்கெதிராக அனனியா பொய் சொன்னதாக சொல்லுகிறான்.*
- *சாத்தான் அவனை நிறைத்ததாக சொல்லுகிறான்.*
- *தேவனிடத்தில் பொய் சொன்னதாகவே சொல்லுகிறான்.*
- *கர்த்தருடைய ஆவியை சோதிப்பதாக சொல்லுகிறான்.*

ஆகவே இங்கே பேதுரு கற்பனை கதையான ராமாயணத்தில் வந்த நாரத முனிவரைப்போல மூக்கு நுனியில் கோபமும், நாக்கு நுனியில் சாபமும் கொண்டு சபிக்கவில்லை. அனனியா கடவுளுக்கெதிராக, பரிசுத்த ஆவிக்கெதிராக பிழை செய்ததினாலேயே அவ்வாறு செய்கிறான்.

3. *அனனியா சப்பிராள் அவ்வாறாக பணத்தை ஒளித்து வைத்ததை பேதுரு அறிந்திருந்தான். இந்த அறிவு சாதாரண மனிதருடைய அறிவுக்கு அப்பாற்பட்டது.*

4. *பரிசுத்த ஆவிக்கெதிராக பல குறிப்புகள் வருகின்ற படியால் இது பரிசுத்த ஆவிக்கெதிரான பாவமாகவும் அதற்கான தண்டனையாகவும் காட்டப்படுகிறது. இதை நாம் ஏற்றுக்கொள்ள மறுத்தால் "பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொன்னீர்கள்" என்று பேதுரு சொன்னதையும், "தேவனிடத்தில் பொய் சொன்னாய்" என்று எழுதப்பட்டிருப்பதைப்பற்றி நாம் என்ன சொல்லுவோம்? வேதம் பொய் சொல்லுகிறதா?*

5. *தேவனிடத்தில் பொய் சொன்னவர்களை அவரே தண்டிப்பது நியாயமானதல்லவா?*

6. *பேதுரு தனிப்பட்ட கோபத்தினால் சபித்திருந்தால், அப்போஸ்தலர்களை பல தடவைகள் சிறையிலிட்டு துன்புறுத்திய யூதத் தலைவர்களை சபித்து கொன்றிருக்க வேண்டும். ஆனால் ஒரு தடவை கூட பேதுரு அப்படி செய்யவில்லை.*

7. *மேலும் இந்த சம்பவம் பேதுரு விட்ட பிழையை சுட்டிக்காட்டுவதற்காக எழுதப்படவில்லை. அனனியா-சப்பிராள் எழுதிய பிழையை சுட்டிக்காட்டவே எழுதப்பட்டுள்ளது.*

8. *இந்த சம்பவத்தின முடிவில்* ***11****ம் வசனத்தில்* "சபையாரெல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று" *என்று வாசிக்கிறோம். பேதுரு இங்கே பிழை விட்டிருந்தால் -* ***11****ம் வசனத்தின்படி அனைவரும் பேதுருவைப்பார்த்து பயந்ததாகத்தான் நாம் வாசிக்கவேண்டும்! இது தவறானது.*

9. *பேதுரு அவர்களுக்கு மனந்திரும்ப சந்தர்ப்பம் வழங்கவில்லை என்று சிலர் கூறுகிறார்கள் - ஆனால் சப்பிராளுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது – அவளிடம் பேதுரு கேட்டதற்கு அவள் தன் மனதை கடினப்படுத்தி பொய்யையே பேசுகிறாள். அதுமட்டுமில்லாமல் இவ்வாறான கதைகளும் எச்சரிப்புகளும் வேதத்தில் ஏற்கனவே பல உள்ளன (எபிரே* ***6, 10, 2*** *சாமு* ***6:1-7****).*

10. *மரித்த அன்றே அடக்கம் பண்ணுவது அப்பிரதேச வழமை தான் ஆனாலும் அவர்கள் இருவருக்கும் இறுதிச்சடங்குள் முறைப்படி செய்யவில்லை என்பது கூட இவர்கள் மரித்ததற்கு பேதுருவின் நியாயமற்ற கோபமே காரணம் என்பதற்கு ஆதாரமாக சொல்லப்படுகிறது. ஆனால் ஒருவேனை அவர்கள் கர்த்தரால் தண்டிக்கப்பட்டு மரித்தபடியினால் சீடர்கள் அவர்களை சீக்கிரமாக புதைத்திருக்கலாம்* (Marshall,1994*).*

11. *ஏன் கணவன் மரித்ததை மனைவிக்கு அவர்கள் அறிவிக்கவில்லை என்பது நமக்குத்தெரியாது. சப்பிராள் மூன்று மணித்தியாலங்கள் கழித்தே அங்கே வருகிறாள். ஒருவேளை சீடர்கள் அவளைத் தேடியிருக்கலாம். ஆனால் பேதுரு கர்த்தர் அவனுக்கு கொடுத்த விசேஷ அறிவினால் எப்படி அனனியா பொய்சொல்லுவதை அறிந்திருந்தானோ அதேபோலவே அவர்கள் இருவரும் சேர்ந்து தான் இந்த தவறை செய்ததையும் அவன் அறிந்திருக்க வாய்ப்புண்டு – உண்மையில் சப்பிராளும் தன்னிடத்தில் பொய் சொல்லுவதை பேதுரு அறிந்தே இருந்தான். ஆகவே அவர்கள் இருவரும் தண்டிக்கப்பட வேண்டும் என்பது இங்கே காட்டப்பட்டுள்ளது.*

12. *மேலும் நீ அழிந்து போ என்று பேதுரு அனனியாவைப்பார்த்து சொல்லவில்லை (சப்பிராளைப்பார்த்து அவ்வாறு சொன்னது உண்மைதான்). பேதுரு சொன்னதைக்கேட்ட அனனியாவை கர்த்தர் தண்டிக்கிறார் - அவன் மரிக்கிறான்.*

கிறிஸ்து மக்களின் பாவங்களுக்காக மரித்தது உண்மைதான். ஆனால் அதை விசுவாசிக்காதவர்களுக்கு அந்த மரணத்தால் பயனில்லை. "என் பாவங்களுக்கான தண்டனையை கிறிஸ்து செலுத்தி விட்டார். ஆகவே நான் என்ன பாவம் வேண்டுமானாலும் செய்யலாம்" என்று சொல்லி துணிந்து பாவத்தில் வாழ்கின்றவர்களுக்கு எரிநரகம் காத்திருக்கிறது (எபிரே 6, 10).

எலிமா மீது எரிச்சல்...

இதே மாதிரியான ஒரு சம்பவம் அப்போ 13:8-11லும் சொல்லப்பட்டுள்ளது. அப்பிரதேச அதிபதி கர்த்தரண்டையில் வருவதை தடுத்த எலிமா என்ற மந்திரவாதியை பவுல் சபிக்க அவன் குருடனாய் போகிறான். எலிமா குருடனாய் போனபடியினால் தான் அதிபதி இயேசுவை அறிந்து கொள்கிறான்.

இதை எழுதும்போது பவுல் பரிசுத்த ஆவியானவரினால் நிறைந்து அவனை சபித்ததாக தெளிவாக எழுதப்பட்டுள்ளது (13:9). பவுல் கர்த்தருடைய கரம் எலிமாவை அடித்ததாக தெளிவாக கூறுகிறான் (13:11). அப்படியானால் இதைப்பற்றி என்ன சொல்லுவோம்? புதிய ஏற்பாட்டில் தேவன் தண்டிக்கிறார் என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

சிலர் நித்திரையும்...

அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைப்பார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள் அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சை பாராதிருப்போமாக (1 கொரி 10:8-9).

*1 கொரிந்தியரில் விக்கிரக ஆராதனைக்கு எதிராக பேசும்போது பவுல் இயேசு கிறிஸ்துவை கேட்பதை கொடுக்கும் கிறிஸ்மஸ் தாத்தாவாக (*Santa Claus*) சித்தரிக்கவில்லை. தன்னை பரீட்சித்துப் பார்க்கின்றவர்களை அழிக்கின்றவராகவே இயேசுவை பவுல் சித்தரித்து காட்டியுள்ளார்.*

---

13. *வேறு சிலர் அனனியா இருதய நோயால் இறந்தான் என்று தவறாக சொல்லுகிறார்கள். அப்படியானால் சப்பிராளும் அவ்வாறு இறந்திருக்க வாய்ப்பு இல்லை அல்லவா?*

கொரிந்து பட்டணத்தில் சிலர் அந்நிய தெய்வங்களின் கோயில்களுக்குச் சென்று உணவருந்தினார்கள். இது விக்கிரக ஆராதனைக்கு சமமானது என்று பவுல் சாடுகிறார். அவர்கள் செய்வது பிழை என்பதை உணர்த்த பவுல் “நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா?” (வச 22) என்று கேட்கிறார். கர்த்தர் எரிச்சல் உள்ளவர் என்பது பழைய ஏற்பாட்டில் இருந்து வரும் கருத்து (யாத்தி 34:14). பழைய தமிழில் எரிச்சல் என்பது பொறாமை என்று பொருள்படும். மற்ற சிலைகளை வணங்காமல் தன்னை மட்டுமே வணங்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புவதை இது காட்டுகிறது.

சிலர் இஸ்ரவேல் மக்களுக்கு கிடைத்த தண்டனைகள் நமக்கு கிடைக்கும் என்று பவுல் சொல்லவில்லை – ஆனால் அவர்கள் செய்த பாவங்களை நீங்கள் செய்யாதிருங்கள் என்று தவறாக கூறுகிறார்கள். ஆனால் 8ம் 9ம் வசனங்களில் இஸ்ரவேல் மக்கள் அழிந்து போனதை எச்சரிக்கையாக காட்டுகிறார். தண்டனையை காட்டி பவுல் எச்சிரித்திருக்கும்போது, நமக்கு எச்சரிப்பு இருக்கிறது ஆனால் தண்டனை இல்லை என்று நாம் கூறுவது பிழையானது. உதாரணமாக தாய் பிள்ளையைப்பார்த்து உன் அண்ணன் மிட்டாயை திருடியபோது அப்பா அடித்தார். ஆனால் உன்னை அடிக்கமாட்டார் ஆனாலும் நீ திருடாதே என்று எச்சரித்தால் அது எச்சரிப்பாக இருக்காது.

பவுல் 1 கொரிந்தியருக்கு (11ம் அதிகாரம்) எழுதிய நிருபத்தில் கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாய் பங்கு பெறுகிறவர்கள் நோய்வாய் படுவதாகவும் சிலர் இறந்தே விடுவதாகவும் கூறுகிறார். தேவனுக்கும், மனிதனுக்கும் இடையிலும், மனிதனுக்கும் சக மனிதனுக்கும் இடை யிலும் ஒற்றுமையையும், ஒப்புரவையும் ஏற்படுத்துவதற்காக இயேசு சிலுவையில் மரித்தார். ஆனால் அதை நினைவுகூறும் கர்த்தருடைய பந்தியிலேயே ஏழை பணக்காரன் என்ற பிரிவினையை ஏற்படுத்தினார்கள். தன்னுடைய சபையில் பிரிவினை ஏற்படுத்தியவர்களை கர்த்தர் தண்டித்தார்.

பட்சிக்கும் அக்கினி (எபி 12:29)

தேவனைப்பற்றி பேசும்போது புதிய ஏற்பாடு பட்சிக்கும் அக்கினி என்று அவரை வர்ணிக்கிறது. பட்சிக்கும் அக்கினி நம்மை பட்சிக்காதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

கொரோனாவைப்பற்றி வெளிப்படுத்திய விசேஷத்தில் தீர்க்கதரிசனங்கள் உள்ளனவா?

வெளிப்படுத்தலில் பல இடங்களில் தேவனுடைய கோபத்தினால் வரும் தண்டனைகளைப்பற்றி வாசிக்கிறோம்.

6ஆம் அதிகாரத்தில் ஒவ்வொரு முத்திரையையும் உடைக்கப்படுகின்ற போது பலவிதமான அழிவுகள் உலகத்திலே வருவதை கர்த்தர் யோவானுக்கு வெளிப்படுத்தினார். போரினாலும், பஞ்சத்தினாலும், துஷ்ட மிருகங்களினாலும் வரும் பல அழிவுகளைப் பற்றி அங்கே கூறப்பட்டிருக்கிறது. ஐந்தாவது முத்திரையில் யோவான் என்னத்தை பார்த்தான் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. பலிபீடத்தின் கீழே இரத்த சாட்சிகளாக மரித்தவர்களுடைய ஆத்துமாக்களை காண்கின்றான். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? "தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்" (6:10) என்று கர்த்தரிடத்தில் மன்றாடி கேட்கிறார்கள். அதற்கு என்ன பதில் கொடுக்கப்பட்டது என்பதும் முக்கியமானது. பழிவாங்க மாட்டேன் என்று கர்த்தர் சொல்லவில்லை. "இன்னும் கொஞ்ச காலம் பொறுத்திருங்கள்" என்று கூறப்படுகிறது. இயற்கை அழிவுகளுக்கும், இரத்த சாட்சிகளாக மரிக்கும் கிறஸ்தவர்களுக்கும் தொடர்பு இருப்பதை இதிலிருந்து அறிய முடிகிகிறது.

ஆறாவது முத்திரை திறக்கப்பட்டபோது மகா பூமியதிர்ச்சி ஏற்படுகிறது. மலைகளும் தீவுகளும் கூட தம்முடைய இடத்தை விட்டு அசைகின்றன. நட்சத்திரங்கள் பூமியில் விழுகின்றன. அப்போது "ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்" என்று பூமியிலுள்ள ராஜாக்கள் கூட பயந்து நடுங்குகிறார்கள் (வெளி 6:16). ஆகவே நாம் வழிபடும் கர்த்தர், அன்பானவர் மட்டுமல்ல. அவருடைய கோபமும் பூமியிலே வெளிப்படும். இவ்வாறான இயற்கை அழிவுகள் அவருடைய கோபத்தின் வெளிப்பாடாக வருபவை என்பது வேத பூர்வமான போதனை.

அதேபோலவே 8ஆம் அதிகாரத்திலும் ஊதப்படுகின்ற 7 எக்காளங்களின் முடிவிலும் ஒவ்வொரு உபாதை பூமிக்கு வருகிறது. இவற்றில் சில extinction level events அதாவது உலகில் பாரிய சேதத்தை ஏற்படுத்தக்கூடியவை. ஆறாவது எக்காளம் ஊதப்படும்போது அது உலக ஜனத்தொகையில் மூன்றில் ஒன்றை அழிக்கிறது.

வெளி 9இலும் சொல்லப்பட்டுள்ள வாதைகளால் உலக ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் இறக்கிறார்கள். தற்போதைய உலக ஜனத்தொகை 7.9 பில்லியன் (அல்லது 790 கோடி) அதில் மூன்றில் ஒரு பகுதி இறக்கவேண்டுமானால் 2.63 பில்லியன் மக்கள் (அல்லது 263 கோடி) இறக்கவேண்டும். கிட்டத்தட்ட 17 மாதங்கள் ஆகியும், கொரோனாவால் 33 லட்சம் பேர் மட்டுமே மரித்திருக்கிறார்கள். கொரோனா கோடிக்கணக்கில் மக்களை கொலை செய்யும் என்று நான் நினைக்கவில்லை. ஆகவே மேற்கூறிய இந்த வசனமும் கொரோனாவுக்கு பொருந்தாது. மேலும் அவை நோய்களை குறிக்கின்றனவா அல்லது போர் போன்ற விஷயங்களை குறிக்கின்றதா என்பதும் நிச்சயமில்லை.

15ம் அதிகாரத்திலும் பல வாதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையும் நேரடியாக கொரோனாவை குறிக்கின்றதா என்பது நிச்சயமல்ல.

வெளி 16:2ல் சொல்லப்பட்டுள்ள வாதை, “மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்கு” மட்டும் வருவது. ஆனால், கொரோனாவோ அனைவரையும் பாதித்திருக்கிறது

ஆக வெளிப்படுத்தலில் கொரோனாவைப்பற்றிய குறிப்புகள் இருக்கின்றனவா என்ற கேள்விக்குப்பதில் - நேரடியான குறிப்புகள் இல்லை, ஆனால், அங்கே சொல்லப்பட்ட வாதைகளில் ஒன்றாக கொரோனா இருக்கலாம் என்பதே.

பாவத்தின் சம்பளம் மரணம்

இவ்வாறாக, எச்சரிப்பின் வசனங்களும் சம்பவங்களும் புதிய ஏற்பாட்டிலும் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற போது, கர்த்தர் இப்போது நம்மை தண்டிக்கமாட்டார் என்று நாம் சொல்லிவிட முடியாது. சரித்திரத்தின் எந்தக் கட்டத்திலும் தேவன் பாவத்தை பார்த்து தண்டிக்காமல் இருந்ததில்லை. இந்த தண்டனை பல இடங்களில்

இயற்கை அழிவின் வடிவத்திலேயோ, நோய்களின் வடிவத்திலேயோ, போர் மூலமாகவோ கூட வந்திருக்கிறது.

உண்மைதான், தேவன் கிருபையுள்ளவர். அதனால் தான் நாம் இன்னமும் நிர்மூலமாகாமல் இருக்கிறோம். ஆனால் அதை நம்பி நாம் தொடர்ந்தும் பாவத்திலே வாழ்ந்து கொண்டிருந்தால் தேவனுடைய கைக்கு யாரும் நம்மை நீங்கலாக்கி தப்புவிக்க முடியாது. ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாயிருக்கும். எனவே கர்த்தரின் தண்டனையை எச்சரிக்கையாகக் கொண்டு மனம்திரும்புவோம்.

6 நம்பிக்கை

கர்த்தருடைய தண்டனைகள் எச்சரிப்புகளாக இருக்கும் அதே வேளை, அவருடைய அளவில்லாத கிருபைகள் நமக்கு நம்பிக்கையூட்டுகின்றன. அவருடைய அளவில்லாத கிருபையையும் அன்பையும் வைத்து நம்பிக்கையூட்டும் செய்திகளை கீழே பார்க்க இருக்கிறோம். வேதத்தில் கர்த்தருடைய அற்புதமான செயல்களையும் விடுதலையையும் பார்ப் பதினூடாக நாம் நம்பிக்கையையும் தைரியத்தையும் பெற்றுக் கொள்ளுகிறோம்.

எதிரிகளை அழித்த தூதன் (2 இராஜ 18-19)

வட சாம்ராஜ்யத்தை கைப்பற்றிய அசீரியர்கள் அதன் பின்னர், தென் சாம்ராஜ்யமாகிய யூதா நாட்டை படையெடுத்து வந்து முற்றுகை இடுகிறார்கள். அசீரியா ஆபத்தான நாடு – எதிரிகளை அடக்கி ஒழித்த ஒரு வல்லரசு. இக்கட்டான சூழ்நிலையில் யூதா மன்னன் எசேக்கியா. "2000 குதிரைகள் இலவசமாய் தருகிறோம், அதில் உட்கார வைக்க உங்களிடம் வீரர்கள் இருக்கிறார்களா" என்று கேலி செய்கிறார்கள் அசீரியர்கள். எசேக்கியா ஜெபிக்கிறான். அடுத்த வசனத்திலேயே கர்த்தர் அவனுக்கு பதில் கொடுக்கிறார். நீ ஜெபித்தாய் உன்னுடைய ஜெபத்தை கேட்டேன் என்று கர்த்தர் கூறினார். நாமும் சரியான படி ஜெபிக்கின்ற பொழுது கர்த்தர் அதை கேட்டு பதிலளிக்கிறார். இதோ அந்த ஜெபம்:

> உங்கள் கடந்த காலம் உங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க விடாதீர்கள்

"கேருபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே. நீர் ஒருவரே பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர் நீர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர். கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்துக் கேளும் கர்த்தாவே, நீர் உமது கண்களைத் திறந்துபாரும் சனகெரிப் ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படிக்குச் சொல்லியனுப்பின வார்த்தைகளைக் கேளும். கர்த்தாவே, அசீரியா ராஜாக்கள் அந்த ஜாதிகளையும் அவர்கள் தேசத்தையும் நாசமாக்கி, அவர்களுடைய தேவர்களை நெருப்பிலே போட்டுவிட்டது மெய்தான் அவைகள் தேவர்கள் அல்லவே, மனுஷர் கைவேலையான மரமும் கல்லும்தானே் ஆகையால் அவைகளை நிர்த்தூளியாக்கினார்கள். இப்போதும் எங்கள்

தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே தேவனாகிய கர்த்தர் என்று பூமியின் ராஜ்யங்கள் எல்லாம் அறியும்படிக்கு, எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும் என்று விண்ணப்பம்பண்ணினான்." இந்த ஜெபத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் மூட்டை மூட்டையாக உள்ளன.

தன்னை சுற்றிலும் எதிரியின் படைவீரர்கள் - எசேக்கியாவோ கேருபீன்களின் மத்தியில் வாசமாயிருக்கும் கர்த்தரைப்பற்றி சிந்திக்கிறான். நாமும், கொரோனாவைப் பற்றியும் நம்மைப்பற்றியும் மட்டுமே எப்போதும் சிந்தித்துக் கொண்டிப்பதை நிறுத்தவேண்டும். கர்த்தரைப்பற்றி சிந்திப்போம். படைப் பரிவாரங்களோடு வந்த அசீரியர்கள் கண் முன்னே நிற்கின்ற போது, கேருபீன்கள் மத்தியில் வாசம் செய்யும் கர்த்தரை நோக்கிப் பார்க்கிறான் எசேக்கியா. பிரச்சினைகளின் மத்தியில் நாம் யாரைப் பார்க்கிறோம் என்பது மிக முக்கியம். எந்நேரமும் பிரச்சினைகளையே பார்த்துக் கொண்டிருக்காமல் கர்த்தரை நோக்கிப் பார்க்க வேண்டும்.

கடவுளை நாம் யாராக பார்க்கிறோம் என்பதும் முக்கியம். கர்த்தரை அனைத்தையும் படைத்த காரண கர்த்தராக பார்க்கிறோமா? அல்லது கை கால் இயலாத ஒருவராக பார்க்கின்றோமா?

இப்போது உள்ள அமெரிக்காவைப்போல, அப்போது அசீரியா ஒரு சர்வாதிகார சாம்ராஜ்யமாக இருந்தது. ஆனால் எசேக்கியா என்ன சொல்லுகிறான்? "நீர் ஒருவரே பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர்" - எத்தனை ராஜாக்கள் வந்தாலும் சரி, கர்த்தரே எல்லோருக்கும் மேலான ராஜா. நாம் இவ்வுலகில் சந்திக்க கூடிய அனைத்து பிரச்சனைகளை விடவும் மேலானவர் அவர். நம்மீது அன்பும் கரிசனையும் அக்கறையும் கொண்டவர். நமக்காக அக்கரையில் ராஜ்யத்தை தரவிருக்கும் தேவன், இக்கரையில் உணவையும் சுகத்தையும் தராதிருப்பது எப்படி? (cf Watson, 1692)

கர்த்தர் வானத்தையும் பூமியையும் உருவாக்கியவர். அவருக்கு மேலான அதிகாரம் எவருக்கும் இல்லை. அவரை மீறி யாரும் நம்மை தொட முடியாது. அவருடைய அனுமதி இன்றி எந்த கிருமியும் நம்மை அணுக முடியாது.

எசேக்கியா கர்த்தரைப்பற்றி அறிந்திருந்தான். நம்முடைய ஜெபங்களும் கேட்கப்படவேண்டுமானால் நாமும் வேதத்தை வாசித்து கர்த்தரை அறிந்து கொள்ள வேண்டும்.

மேலும் தனது நாட்டிற்கு எதிராக வந்த நிந்தனையை கர்த்தருக்கு எதிராக வந்ததாகவே அவன் பார்க்கிறான். பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் இவனுடைய மூதாதையனான தாவீதும், கோலியாத்தைப் பார்த்து கிட்டத்தட்ட இவ்வாறே கூறுகிறான்: நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன் (1 சாமு 17:45). நம்முடைய பிரச்சனைகளை கர்த்தருடைய பிரச்சனைகளாக நாம் பார்க்கப்பழக வேண்டும். தம்முடைய மக்களுக்கு நேரிடும் துன்பங்களை தேவன் தன்னுடைய பிரச்சனையாகவே பார்க்கிறார்.

சரியாகப்பார்த்தால் எசேக்கியா அசீரியர்களைப் பார்த்து பயந்திருக்க வேண்டும். ஏனென்றால் அசீரிய சாம்ராஜ்யம் தன்னை எதிர்த்தவர்களை எல்லாம் அழித்து தரை மட்டமாக்கி சீறிப்பாய்ந்து கொண்டிருந்தது. எசேக்கியாவே முன்பொருமுறை அசீரியர்களிடம் தோல்வி கண்டிருந்தான் (2 இராஜ 18:10-15). மற்ற நாடுகளும் அசீரியர்களிடம் தோல்வி கண்டிருந்தன. ஆனால் எசேக்கியா மனம் தளரவில்லை. விசுவாசத்தை விட்டுவிடவில்லை. முன்பு நடந்ததை வைத்து இப்போதும் தோல்விதான் கிட்டும் என்று முடிவெடுத்து விடவில்லை. ஊக்கமாக ஜெபித்தான். அவன் இருந்த சூழ்நிலையில் ஜெபிப்பதை தவிரவேறு எதுவும் செய்திருக்கவும் முடியாது. இவ்வாறு தான் நமது வாழ்க்கையிலும் சிலநேரங்களில் ஜெபிப்பதை தவிர வேறெதுவும் செய்யமுடியாத சூழ்நிலைக்கு நாம் தள்ளப்படலாம். அப்பொதாவது நமது இயலாமையை ஏற்றுக்கொண்டு ‘கர்த்தாவே நீரே எனக்கு கதி’ என்று நாம் ஜெபிக்கவேண்டும்.

நாம் கடந்த காலத்தை நினைத்து எதிர்காலத்தை எதிர்காலத்தை அழித்துவிடக் கூடாது. சோதனையின் நேரங்களில் மனம் இல்லாதது பொல்லாதது அனைத்தையும் நம்மிடம் சொல்லும். யாரோ சொன்னதைப்போல மனதை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த வேண்டும். அதின் போக்கிலேயே அதை விட்டுவிட்டால் அதற்கு காட்டு யானையின் பலம் வந்து விடும். கடந்த காலத்து தோல்விகளை வைத்து நாம் எதிர் காலத்திற்காக கர்த்தரை நம்புவதை விட்டு விடக்கூடாது.

எங்களை நீங்கலாக்கி விடுவியும் - ஏனென்றால் அப்போது தான் நீர் ஒருவரே கர்த்தர் என்பதை முழு உலகமே அறிந்து கொள்ளும் என்று கர்த்தர் மகிமைப்படும்படியாக எசேக்கியா ஜெபிக்கிறான். அவனோடு

போரிட வந்த அசீரிய மன்னன் சனகெரிப் பல நாடுகளை தோற் கடித்திருந்தான் - ஆனால் அவர்களின் கடவுள்கள் எல்லாம் கடவுள்களே அல்ல. ஒரே மெய்த்தேவன் இயேசு கிறிஸ்து மட்டுமே – மற்ற அனைத்தும் கல்லும் மண்ணுந் தான்.

*எசேக்கியாவின் ஜெபத்தை செவிமடுத்த கர்த்தர் அற்புதமாக பதில் கொடுக்கிறார் - ஒரே இரவில் **185,000** அசீரிய வீரர்களை கொன்று குவிக்கிறான் கர்த்தரின் தூதன். சொல்லாமல் திரும்பிச்செல்கிறான் சனகெரிப். அவன் வணங்கும் கடவுள்களின் ஆலயத்திலேயே அவன் கொலை செய்யப் படுகிறான். எந்த சக்தி யிடமிருந்தும் நம்மை விடுவிக்க கர்த்தரால் முடியும். அவரை விசுவாசிப்போம், அவரை நம்பியே வாழ்ந்திடுவோம். விசுவாசிக் கின்றவர்களுக்கு அற்புதங்கள் நடக்கும்.*

ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று?

நோயை குணமாக்கினார் (2 இராஜ 20)

சில வருடங்களின் பிறகு இதே எசேக்கியா நோய்வாய்ப்பட்டு, மரணப் படுக்கையில் கிடக்கிறான். கர்ததர் தீர்க்கதரிசியை அனுப்புகிறார். நமக்குத் தெரிந்த இக்கால தீர்க்கதரிசிகள் 'நீ குணமடைவாய், வாலாகாமல் தலையாகுவாய்' என்று சொல்லுவது தான் வழமை. ஆனால் இந்த தீர்க்கனோ, "நீ எப்படியும் மரித்துவிடுவாய், ஆக வேண்டிய காரியங்களை கவனி" என்று கூற, மனங்கசந்து அழுது ஜெபிக்கிறான் எசேக்கியா.

*"ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மனஉத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான்." மூல மொழியில் **13** சொற்களே உள்ள இந்த ஜெபத்தை கர்த்தர் கேட்டார். சில அடிகளே சென்றிருந்த தீர்க்கதரிசிக்கு கர்த்தருடைய வார்த்தை வருகிறது. "உன்னுடைய ஜீவியத்திற்கு **15** வருடங்களை கூட கொடுத்தேன்" என்று கர்த்தர் எசேக்கியாவை குணப்படுத்துகிறார். அத்திப்பழ அடையை அவனுடைய புண்ணின் மீது வைக்கிறார்கள் - அவன் குணமடைகிறான்.*

*நாம் பக்கம் பக்கமாக ஜெபிக்கத் தேவையில்லை. **13** சொற்களில் அவன் ஜெபித்த ஜெபம், **15** வருடங்களை அவனுக்கு பெற்றுக்*

கொடுத்தது. ஜெபத்திற்கு வல்லமை இருக்கிறது – விசுவாசத்தோடு ஜெபியுங்கள். சில நாட்களில் உங்கள் மரண நோயை சுகமாக்கி, பல வருடங்களை உங்களுக்கு பெற்றுக் கொடுக்க கர்த்தரால் கூடும். ஆனால் ஜெபிக்கின்ற அளவுக்கு நமது வாழ்க்கை சீராக இருக்க வேண்டும் - நெகேமியாவும் தான் கர்த்தருக்காக செய்த காரியங்களை சொல்லிக்காட்டி என் குடும்பத்தை நினைத்தருளும் என்று ஜெபித்தான். நாம் கடவுளை பிரியப்படுத்தி வாழ்கிறோமா? அல்லது நம்முடைய சுய விருப்பங்களுக்காக வாழ்கிறோமா? நமது மனம் சுத்தமாக இருக்க வேண்டும். கர்த்தரிடத்திலிருந்து நமது ஜெபங்களுக்கு பதில் வர வேண்டுமானால் நமது மனம் புதுப்பிக்கப்பட, சுத்தப் படுத்தப்பட வேண்டும்.

அதுமட்டுமல்ல சுகம் தானாய் வரவில்லை. அத்திப்பழ அடையை எசேக்கியாவின் காயங்களில் வைத்தார்கள். அதனாலேயே அவன் குணமடைந்தான். நமக்கும் சுகம் தருவது கர்த்தர் தான், ஆனால் எடுக்கவேண்டிய சிகிச்சைகளை எடுக்கவேண்டும். தடுப்பூசி போட வேண்டும். நமக்கு வருமானத்தை தருவது கர்த்தர் தான், ஆனால் நாம் வேலைக்கு சென்று உழைக்க வேண்டும். "நான் கர்த்தருடைய பிள்ளை என்னை எந்த நோயும் அணுகாது" என்று நினைப்பது தவறானது. தகுந்த முன்ஆயத்தங்களை நாம் எடுக்கவேண்டும்: நோய் வரும் முன் காக்க வேண்டும். அப்படியே வந்து விட்டால் தகுந்த மருந்துவ ஆலோசனைகளையும் பின்பற்றவேண்டும்.

கர்த்தர் அற்புத சுகம் தர வல்லவர், ஆகையால் தடுப்பூசி போட்டுக்கொள்ளுங்கள்! கர்த்தர் உங்களை காக்க வல்லவர், ஆகையால் முகக்கவசம் அணிந்து கொள்ளுங்கள்! கர்த்தரே உங்களது அடைக்கலம், ஆகவே கொரோனா காலத்தில் வீட்டிலேயே இருங்கள்!

ஒரு ஆறு, ஒரு விதவை, ஒரு சிறிய அடை (1 இராஜா 17)

இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை தேடாமல் பாகாலை வணங்கியபடியால், 'இனி நான் சொன்னாலேயொழிய மழை வராது' என்று சொன்ன எலியா கர்த்தரின் வார்த்தையின் படியே கேரீத் ஆற்றங்கரைக்கு போகிறான். அங்கு காகங்கள் வந்து உணவு கொடுக்க, ஆற்றின் நீரை பருகுகிறான் எலியா. சிறிது காலத்தில் ஆறு வற்ற ஆரம்பிக்கிறது. நீருக்கு எங்கே போவேன்? தண்ணீரின்றி எப்படி

வாழ்வேன்? என்றெல்லாம் சிந்தித்திருப்பான். 'கர்த்தாவே நீர் சொல்லித்தானே இங்கே வந்தேன். இப்போது குடிக்க தண்ணீர் இல்லாமல் நதி வற்றிக்கொண்டு வருகிறதே' என்று கலங்கியிருப்பான். ஒருநாள் அவனது கெட்ட கனவு நனவானது. ஆறு முற்றாக வற்றியது. அப்போது — ஆற்றுத்தண்ணீர் முற்றாக வற்றிவிட்ட பின்னரே கர்த்தருடைய வசனம் எலியாவுக்கு வருகிறது. சாரிபாத் ஊரில் ஒரு விதவையிடம் போ என்றார். நாமாக இருந்தால் - ஆண்டவரே என்னை ஒரு பணக்காரனிடம் அனுப்புவீர் என்று பார்த்தால் ஒரு விதவையிடம் அனுப்புகிறீரே என்று கேட்டிருப்போம். ஆனால் கர்த்தர் அற்புதமாக விதவையை கொண்டு எலியாவை போஷிக்கிறார். இருந்த சிறிதளவு மாவில் முதலில் எனக்கு அடை சுட்டுத்தா என்று எலியா கேட்க, அவன் சொற்படி அந்த விதவை நடந்துகொள்கிறாள். பஞ்ச காலம் முழுவதும் அவளிடமிருந்த மாவும் எண்ணெயும் தீர்ந்து போகவேயில்லை. அவளும் எலியாவும் அற்புதவிதமாக கர்த்தரால் காக்கப்பட்டார்கள்.

நாம் அவர் மீது தங்கியிருக்கவேண்டும் என்பதற்காக தற்காலிகமாக வழிகளை அடைக்கிறார் கர்த்தர். ஒரு வழி மூடிய பின்னரே மற்ற வழிகளை திறக்கிறார். அவரை நாம் நம்ப வேண்டும். பஞ்ச காலத்திலும் அவர் நம்மை போஷிக்கிறார். உங்கள் ஆறு வற்றி விட்டதே என்று பயப்படாதீர்கள். இன்னொரு ஊற்றை கர்த்தர் கட்டாயம் காட்டுவார்.

விதவையின் மகன் (1 இராஜ 17)

எலியாவுக்கு உணவு கொடுத்து பாரமரித்த சாறிபாத் விதவையின் மகன் மரித்துப் போகிறான். "என் பாவங்களுக்கு தண்டனையாக என் மகனை தண்டிக்கவா என்னைத்தேடி வந்தீர்" என்று எலியாவை காரணமில்லாமல் சாடுகிறாள் அந்த கைம்பெண். உன் குமாரனை என்னிடத்தில் தா என்று அவனுடைய மரித்த உடலை கொண்டுபோய் மேலறையில் வைத்து ஜெபிக்கிறான் - மரித்தவனுக்குள் ஆத்துமா வரவேண்டும் என்பதற்காக.

வேத ஆர்வலர்களுக்கு ஒரு கேள்வி. இதற்கு முன், அதாவது எலியா இவ்வாறு ஜெபிப்பதற்கு முன், பழைய ஏற்பாட்டில் எத்தனை பேர் உயிரோடு எழுப்பப் பட்டிருந்தார்கள்? தேடிப்பாருங்கள் -

ஒருவருமில்லை![25] எலியா மற்ற யாரையும் பார்த்து விண்ணப்பிக்க வில்லை. முதல் தடவையாக மரித்த ஒருவர் மீண்டும் எழுப்பப்பட வேண்டும் என ஜெபிக்கிறான். எத்தனை துணிவு! இதற்கு முன் மரித்தவன் மரித்தவன் தான், அவன் எழும்பியதில்லை. ஆனால் எலியாவோ அவனை எழுப்பித்தரும்படி கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறான். எலியாவின் ஜெபத்தை கர்த்தர் கேட்டார். சிறுவனுடைய உயிர் அவனுக்குள் திரும்பி வந்தது.

ஆனால் ஒரே தடவையில் அல்ல, மூன்று தடவைகள் எலியா ஜெபிக்கிறான். ஒரு தடவை பெயருக்கு ஜெபித்துவிட்டு 'ஐயோ கடவுள் பதில் தரவில்லை' என்று அவன் இருந்துவிடவில்லை. கர்த்தர் பதில ளிக்காத போதும் நம்பிக்கையுடன் மீண்டும் மீண்டும் ஜெபிக்கிறான். நாமும் ஆண்டவரிடம் இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும். அது நாம் அவர் மீது கொண்டுள்ள விசுவாசத்தை காட்டுகிறது. அவர் நல்லவர் என்பதை நாம் நம்புகிறோம் என்பதை காட்டுகிறது. ஆகவே இடைவிடாமல் தொடர்ந்து ஜெபியுங்கள்!

நாம் எங்கே இருக்கின்றோம் என்பதை விட நம்மோடு யார் இருக்கின்றார் என்பதே முக்கியம்

இதுவரை உங்கள் வாழ்க்கையில் கர்த்தர் செய்யாத ஒரு காரியத்தை செய்யும்படி ஜெபியுங்கள். இதுவரை கர்த்தர் சரித்திரத்தில் செய்யாத ஒன்றிற்காக அவரிடத்தில் ஜெபித்து கேளுங்கள். துணிவுடன் ஜெபியுங்கள். தேவன் உங்கள் ஜெபத்திற்கு பதிலளிப்பார்.

புயலில் இயேசு[26]

அக்கரைக்கு போவோம் வாருங்கள் என்று படகில் அழைத்துப்போகிறார் இயேசு (மாற்கு 4ஆம் அதிகாரம்). போகும் போது புயல் வருகிறது. ஆகவே கடவுளுக்கு கீழ்ப்படியாமல் போனதால் மட்டுமே வாழ்வில் புயல்களும் துன்பங்களும் வருகின்றன என்று சொல்லிவிட முடியாது. சில புயல்கள் நாம் கடவுளுக்கு கீழ்ப்படிந்து நடந்தாலும், சொல்லப் போனால் அவருக்கு கீழ்ப்படிந்து

[25] இதை Bill Crowder என்ற பிரசங்கி குறிப்பிட்டு காட்டினார்.

[26] இப்பகுதியில் சில வசனங்கள் "கிறிஸ்துவை நோக்கி, மாற்கு விளக்கவுரை" எனும் எனது நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது .

நடப்பதாலேயே வருகின்றன. ஆனாலும் இயேசு நம்மோடு இருக்கிறார். நாம் எங்கே இருக்கின்றோம் என்பதை விட நம்மோடு யார் இருக்கின்றார் என்பதுதான் முக்கியம். புயலில் இருந்தாலும் கர்த்தர் நம்மோடு இருக்கிறார்.

புயலின் நடுவே அயர்ந்து தூங்குகிறார் இயேசு. புயலினால் பயந்த சீடர்கள், கஷ்டப்படும் அனைவரும் வழமையாக கேட்கும் கேள்விகளையே கேட்கின்றனர்: 'நாங்கள் மரிக்கிறோமே உமக்கு கவலையில்லையா' என்று. நாமும் நமது கஷ்டத்தில், குறிப்பாக இந்த கொரோனா காலத்தில் இப்படித்தான் கேட்கிறோம். 'கடவுளே உமக்கு கண்ணில்லையா, காதில்லையா' என்று. அதற்கு இயேசு சொன்ன பதில் குறிப்பிடத்தக்கது. புயலை அடக்கி விட்டு வந்தவர், ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று என்று கேட்கிறார். இன்றைக்கும் அதே கேள்வியை கர்த்தர் உங்களிடம் கேட்கிறார். அவர் மீது உங்களுக்கு ஏன் விசுவாசம் இல்லாமற் போயிற்று? இன்பத்திலும் துன்பத்திலும் நமக்கு நன்மை வாய்க்கப் பண்ணக்கூடியவர் அவர். ஆமாம், நாம் படும் துன்பங்களுக்கூடாகவும் நமக்கு நன்மையை வாய்க்கப் பண்ணக் கூடியவர் அவர். அவரை விசுவாசிப்போம்.

அடுத்ததாக அவர் சீடர்களைப்பார்த்து ஏன் பயப்பட்டீர்கள் என்று கேட்கிறார். இந்த கேள்வி நல்ல நகைச்சுவையாக இல்லை? நடுக்கடலில், நடுங்கும் குளிரில், கடும் புயலில் தத்தளித்துக் கொண் டிருப்பவர்களைப் பார்த்து கேட்கும் கேள்வியா இது? புயலில் யார் சிக்கினாலும் பயப்படுவார்கள் அல்லவா! ஆனாலும் சீடர்கள் அவருடைய வல்லமையை ஏற்கனவே அனுபவித்திருந்தார்கள். பல அற்புதங்களை கண்ணாரக் கண்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் புதிதாக ஒரு பிரச்சனையை கண்டதும் பயந்தார்கள். நாமும் அப்படித்தான். ஆண்டவர் பல நோய்களில் இருந்து பல தடவைகள் நம்மை காத்திருக்கிறார். சுகமாக்கியிருக்கிறார். ஆனால் புதிதாக ஒரு கொரோனாவை கண்டதும் நாம் நிலை குலைந்து செய்வதறியாது தடுமாறுகிறோம். கர்த்தர் மீது கொண்ட விசுவாசத்தை விட்டு விடுகிறோம்.

கொரோனாவினால் உங்கள் வியாபாரம் படுத்துக் கொண்டது என்று சோர்ந்து போவதை விட, அவரை விசுவாசித்து புதிய முயற்சிகளை நீங்கள் ஏன் எடுக்கக்கூடாது? விசுவாசித்து முயற்சி

எடுங்கள் அப்போது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். முயற்சி செய்யாமல் கர்த்தரை விசுவாசிக்கிறேன் என்று என்னதான் சொல்லியும் அதில் பிரயோஜனமில்லை. அதேபோல, நீங்கள் என்னதான் முயற்சி எடுத்தாலும் கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்காவிட்டால் அதுவும் பலன் தராது. ஆகவே விசுவாசத்தோடு முயற்சிகளை எடுங்கள் - அப்போது பலன் கிடைக்கும்.

புயலில் இருந்தாலும் தேவன் நம்மோடு இருக்கிறார்.

இந்த புயலினால் என்ன நன்மை உண்டானது? வேதமே அதற்கு சாட்சி பகர்கிறது. கடைசியிலே சீடர்கள் இவர் யாரோ எப்படிப்பட்டவரோ என்று வியக்கின்றனர். நமது வாழ்வில் வரும் சில புயல்களின் நோக்கம் கர்த்தர் யார் என்பதையும் அவர் நமக்காக வைத்திருக்கும் வல்லமை என்ன என்பதையும் நமக்கு காட்டுவது தான். இதுவரை இயேசுவை நோய்களை சுகப்படுத்துகிறவராக பார்த்த சீடர்கள் இந்த சம்பவத்திற்கு பிறகு, ஒரு படி மேலே போய் அவரை இயற்கையின் மீது அதிகாரமுள்ளவராக, காற்றையும் கடலையும் அடக்குகின்றவராக, இயற்கையின் மீதும் ஆண்டவராக பார்க்கிறார்கள்.

அதுமட்டுமல்ல – புயல் வரும்போது இயேசுவும் அதே புயலில் அகப்படுகிறார். அதே தண்ணீரில் நனைகிறார். உலகில் நடக்கும் தீமைகளோடு தன்னை அடையாளப்படுத்தி தானும் அதற்கு பலியானார். உலகில் நடக்கும் தீமைக்கு தன்னை விதிவிலக்காக ஆக்கிக் கொள்ளவில்லை. என்னுடைய மகன் உலகில் உள்ள தீமைக்கு பலியானான் என்று கலங்கும் எந்த தாய்க்கும் கடைசி ஆறுதல், கடவுள் தன்னுடைய குமாரனையும் மனிதனாக அனுப்பி மரிக்க இடங்கொடுத்தார் என்பதுதான். அநியாயமாய் கொல்லப்பட்ட யாருக்கும் ஆறுதல் தேவகுமாரனும் அநியாயமாய் கொல்லப்பட்டார் என்பதுதான். வீட்டை இழந்த யாருக்கும் ஆறுதல் தேவகுமாரனும் உலகில் தலைசாய்க்க இடமில்லாமல் இருந்தார் என்பதுதான்.

நாங்கள் மரித்துப்போகிறோமே உமக்கு கவலையில்லையா என்று கேட்ட சீடர்களுக்கு பதில் அவர்கள் அருகிலேயே இருந்தது. இயேசு! (Yancey, 1990). *இயேசுவே அந்த கேள்விக்குப்பதில். உலகின் மீதும் அதிலே துன்பப்படுகின்ற மக்கள் மீதும் கர்த்தர்*

அக்கறையுடையவர் என்பதற்கு ஆணித்தரமான ஆதாரம், அவர் மனிதனாக வந்து நமக்காக மரித்தது தான்.

ஆகவே கடவுள் கொடூரமானவர் என்று நினைக்கின்ற யாருக்கும் கடைசி பதில் இயேசுவிலேயே இருக்கிறது – கடவுளும் மனிதனாக வந்து, அவர் மனிதனுக்கு கொடுத்த சுதந்திரத்தினிமித்தம் வரும் தீமைகளை அவரும் அனுபவித்தார். நமது பாவங்களின் தண்டனையை தம்மேல் ஏற்றுக்கொண்டு மரித்தார். பாவத்தின் சம்பளம் மரணம் என்பது உ லகின் அடிப்படை நியதி. அதனால் தான் உலகில் இத்தனை துன்பங்களும் இருக்கின்றன. பாவமுள்ள உலகத்தில் மனிதனாகப் பிறந்த யாரும் துன்பப்படவேண்டும் என்பதும், இறக்கவேண்டும் என்பதுவும் நியதி. அந்த நியதிக்கு தேவன் தன்னையும் விதிவிலக் காக்கவில்லை. பாவமில்லாதவராகிய அவர், நம்முடைய பாவங்களை ஏற்றுக்கொண்டு, பாடனுபவித்து மரித்தார்.

அதுமட்டுமல்ல – வலியில்லாமல் அவர் மரிக்கவும் இல்லை. கொல்கொதாவில் சிலுவையில் அவருக்கு வலி தெரியாமல் இருக்க வெள்ளைப்போளம் கலந்த திராட்சை ரசத்தை குடிக்கக் கொடுத்தார்கள் (மாற்கு 15:23). அவர் அதை அப்போது பருகவில்லை. உலகில் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை அவன் தவறாக பாவித்ததினால் வந்த பாவத்தின் பாரத்தை அவர் சுயநினைவோடு சுமந்தார். ஆகவே நம்முடைய வலியையும் வேதனையையும் அவர் சுமந்திருக்கிறார். அதனால் இன்று வேதனையில் துடிக்கும் யாரும் அவரிடம் தைரியமாக செல்லமுடிகிறது. நம்முடைய வேதனைகளை புரிந்து கொள்ளக்கூடிய ஒருவரே நமக்காக இருக்கிறார். நமது சக மனிதர்கள் நமது வேதனையை புரிந்து கொள்ளாவிட்டாலும் கூட கர்த்தர் நம்மை புரிந்து கொள்ளுவார். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

சிறையிலிருந்து மீட்டார் (அப்போ 5:20)

அப்பொழுது பிரதான ஆசாரியனும் அவனுடனேகூட இருந்த சதுசேய சமயத்தாரனைவரும் எழும்பி, பொறாமையினால் நிறைந்து, அப்போஸ்தலர்களைப் பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள். கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அவர்களை வெளியே கொண்டுவந்து: நீங்கள்

போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்.

அப்போஸ்தலர்களிடம் கூட்டம் அதிகமாய் வருவதை பொறுத்துக்கொள்ளாத யூத மதத் தலைவர்கள் பொறாமையினால் அவர்களை சிறையில் அடைத்தார்கள். மறு நாள் போய் பார்த்தால் கதவுகள் மூடப்பட்டிருக்கின்றன, காவலாளிகள் வெளியே நிற்கின்றனர் - ஆனால் உள்ளேயோ ஒருவரையும் காணவில்லை. சிறையில் அடைபட்டவர்களை கர்த்தருடைய தூதன் அற்புதவிதமாக விடுவித்திருந்தான்.

இன்றும் நீங்கள் அடைபட்டு கிடக்கும் எந்த சிறையிலிருந்தும் உங்களை விடுவிக்க கர்த்தர் வல்லவர். அவரை நம்புங்கள். அவரையே நோக்கிப்பாருங்கள். மற்றவர்கள் நம்மை சிறையில் அடைக்கலாம். மகத்தான கர்த்தர் நம்மை விடுவிக்க வல்லவர்.

இந்த சம்பவங்களில் இருந்து நாம் கற்று கொள்ளும் முக்கியமான பாடம் என்னவென்றால், பிரச்சனைகள் வரும்போதெல்லாம் ஆண்டவருடைய வல்லமையும் வெளிப்பட்டிருக்கிறது என்பதே. நோயுற்றவனே ஆண்டவரிடத்தில் சுகத்தைப்பெற்றான். தன்னை விட பலம்வாய்ந்த நாட்டோடு போரிட்டவனே கர்த்தருடைய விடுவிக்கும் கரத்தை கண்டான். ஆண்டவருடைய வல்லமையை நாமும் அனுபவிக்க வேண்டுமேயானால், அவர் யார் என்பதை நமது நாளாந்த வாழ்வில் உணர்ந்து கொள்ள வேண்டுமேயானால், நமது வாழ்விலும் யுத்தங்களும், பஞ்சங்களும், புயல்களும், கொரோனாக்களும் வந்தே ஆகவேண்டும்!

சகலமும் நன்மைக்கே... (ரோ 8:28)

"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." இது நம்மெல்லாருக்கும் கர்த்தர் தரும் வாக்குத்தத்தம். இதை நாம் கட்டாயம் நம்ப வேண்டும். நம்மை அழைத்து, நமக்காக தமது சொந்த குமாரனையே பலி கொடுத்த தேவன் நமக்கு தரும் நம்பிக்கை.

ஆனால் இதில் நன்மை என்பது நாம் எதிர் பார்க்காத ஒன்றாக இருக்கலாம். ஒரு கதையிலே தினந்தோறும் காரில் வகுப்புக்கு செல்லும் மாணவனுடைய காருடைய ஏசி (AC குளிர்சாதன இயந்திரம்) உடைந்துபோகிறது. ஏசி இல்லாமல் சில மணி நேரம் கார் ஓட்டுவதால்

வகுப்புக்கு செல்லும்போது அவருடைய ஆடைகள் வியர்வையால் நனைந்து துர்மணம் வீச ஆரம்பிக்கிறது. இதனால், வழமையாக முன் வரிசையில் அமரும் அவர், தான் யாருக்கும் இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காக யாரும் இல்லாத கடைசி வரிசையில் அமர்கிறார். இதனால் அவருக்கு மிகப்பெரிய நன்மை நடக்கிறது. வகுப்பில் பின் வரிசையில் அமர்வது எப்படி நன்மையாகும் என்று சிந்திக்கிறீர்களா? அவர் வழமையாக முன்வரிசையில் இருக்கும் ஒரு மாணவிக்கு அருகிலேயே அமர்வதால் அவளுக்கும் இவருக்கும் ஒரு ஆரோக்கியமற்ற நட்பு உருவாக ஆரம்பித்திருந்தது (இருவருமே திருமணமானவர்கள்). அப்படியே போயிருந்தால் அந்த நட்பு கள்ளக் காதலாக மாறியிருக்கும். அவருடைய குடும்பத்தை வேலியடைத்து காக்க விரும்பிய நல்ல கர்த்தர், அவருடைய கார் ஏசி உடைய அனுமதித்தார். பல வாரங்களுக்கு பின் அவர் புத்தி தெளிந்த போது, அந்த நட்பை கைவிட்டபோது, அவருடைய கார் ஏசியை சரிசெய்ய பார்த்திருக்கிறார் - அதற்கு ஐந்தே ஐந்து டாலர்கள் தான் செலவாகி யிருக்கிறது! நம்முடைய சிந்தனைகள் அவருடைய சிந்தனைகள் அல்ல!

அப்போஸ்தலனாகிய பவுல் சிறையில் இருந்த போது தனக்கு மரண தண்டனை கூட வழங்கப்படலாம் என்று எதிர்ப்பார்த்தார். ஆனாலும் தனது கட்டுகள் சுவிவேஷம் பரவவும், தேவனுடைய ராஜ்யம் வளரவும் வழிகோலியது என்பதை நினைத்து மகிழ்ச்சியடைந்தார். தனக்கு தற்காலிக துன்பமும் வருத்தமும் ஏற்பட்டாலும், கடவுளுடைய நாமம் மகிமைப்பட்டதை நினைத்து சந்தோஷப்பட்டார். கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் என்று தைரியமாக பறைசாற்றினார் (பிலி 1:21).

உடைந்த கப்பலால் உயிர் தப்பினார்கள் (அப்போ 27:20)

பவுல் போன கப்பல் 14 நாட்கள் புயலில் சிக்குகிறது. ஒருவரும் மரிப்பதில்லை என்று கர்த்தர் பவுலுக்கு வாக்குக் கொடுக்கிறார். ஆனால் என்ன நடக்கிறது? பாறைகளில் மோதிய கப்பல் உடைகிறது. நாமாக இருந்தால் கதிகலங்கி கதறியிருப்போம், "ஆண்டவரே நீர் தந்த வாக்குத்தத்தம் எங்கே" என்று. ஆனால் உடைந்த கப்பல் துண்டுகளைப் பிடித்துக்கொண்டு கரைசேர்ந்து அனைவரும் உயிர் தப்பினார்கள் (Watson,1695). *சிலநேரங்களில் நமது வாழ்வில் நடக்கின்ற விஷயங்கள் கர்த்தருடைய வாக்குறுதிக்கு விரோதமாக இருக்கும். ஆனால் அதன் மூலம் கர்த்தர் நமக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார்.*

நடக்கின்ற தீமைகளுக்கூடாக நன்மைகளை நடத்துவிக்கின்ற கர்த்தர் அவர்.

கடவுள் ஏன் யோபிடம் மன்னிப்பு கேட்கவில்லை?[27]

எந்த தவறும் செய்யாத யோபு துன்பப்பட்டதும், அனைத்தையும் இழந்ததும் நாம் அறிந்ததே. இத்தனை துன்பங்களுக்கும் யோபு எந்த விதத்திலும் காரணம் அல்ல. போரில் ஈடுபடும் இரு நாடுகளுக்கிடையில் சிக்கிக்கொண்ட ஒரு சிறிய நாட்டைப்போல, கடவுளுக்கும் சாத்தானுக்கும் நடக்கும் பலப்பரீட்சையில் யோபு சிக்கிக்கொள்கிறான். யோபு கடவுள் மீது வைத்திருக்கும் அன்பும் பயபக்தியும் உண்மையானது தானா, அல்லது அவன் வெறுமனே கூலிக்கு மாரடிக்கிறானா - அதாவது கடவுள் கொடுக்கும் சுகம், ஆரோக்கியம், செல்வம், என்பவற்றிற்கு பதிலாகத்தான் அவன் கடவுள் மீது அன்பு வைத்திருக்கிறானா? அவன் கடவுள் மீது வைத்திருப்பது அன்பா அல்லது இன்னமும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அவன் போடும் பகல் வேஷமா? இதை அறிந்து கொள்வதற்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது — மக்கள் வழமையாக கடவுள் கொடுப்பதாய் நினைக்கும் ஆசீர்வாதங்கள் அனைத்தையும் அவனை விட்டு எடுத்துக்கொண்டால் அப்போது தெரியும் இந்த கேள்விக்கு பதில். அது நடப்பதற்கு கடவுள் இடமளித்தார். சிகரத்தை தொட்டிருந்த யோபின் வாழ்க்கை சின்னா பின்னமானது. செல்வந்தனாய் இருந்த யோபு பிச்சைக்காரனாய் மட்டுமல்ல நோயாளியாகவும் மாறினான். கடைசியில் யோபு கடவுள் வைத்த அனைத்து பரீட்சையிலும் சிறப்பாக தேர்ச்சி பெறுகிறான். அப்போது கடவுள் அவனுக்கு தரிசனமாகிறார். சரியாகப்பார்த்தால் தரிசனமான கடவுள் யோபிடம் மன்னிப்பு கேட்டிருக்க வேண்டும். ஆனால் கடவுள் யோபிடம் மன்னிப்பு கேட்கவில்லை. கடவுள்

உலகில் ஏன் தீமை இருக்கிறது என்று அறிந்து கொள்வதை விட அண்ட சராசரங்களையும் படைத்த கர்த்தரை அறிந்து கொள்வதே நம் வாழ்வின் நோக்கம்

---

[27] *இப்பகுதி 2008ல் நான் எழுதிய* "God Never Apologized to Job" *என்ற ஆங்கில கட்டுரையை தழுவி எழுதப்பட்டுள்ளது.*

இதுவரை யாரிடமும் மன்னிப்பு கேட்டதுமில்லை, இனியும் மன்னிப்பு கேட்கப் போவதுமில்லை. கடவுள் கடவுளாகவே இருக்கிறார்.

உலகம் ஒழுங்காக இயங்க வேண்டுமானால் மனிதன் மனிதனாகவும், கடவுள் கடவுளாகவும் இருக்கவேண்டும். எந்த காரணத்தை கொண்டும் சர்வ ராஜரீகத்துவமுள்ள (இறையாண்மையுடைய) கடவுள் மனிதனிடம் மன்னிப்பு கேட்பதில்லை. அவர் மன்னிப்பு கேட்காததற்கான காரணம் அவர் கடவுள் என்பது மட்டுமல்ல, மன்னிப்பு கேட்கின்ற அளவுக்கு தீமை எதையும் அவர் செய்து விடவில்லை என்பதுமே. அவர் முற்றிலும் நல்லவர். மனிதன் தான் விதைத்ததையே அறுக்கிறான். உலகில் தீமை வருவதற்கு காரணம் கடவுள் அல்ல. மனிதன். ஆதி மனிதன் தனக்கு கடவுள் கொடுத்த சுதந்திரத்தை பிழையாக பயன்படுத்தினான். அதன் விளைவை அவனுடைய வழித்தோன்றலாகிய நாம் அனுபவிக்கிறோம்.

இன்று நாம் கடவுளை மனிதருடைய சாயலில் படைத்து அவரை நம்மில் ஒருவராக மாற்றி வைத்திருக்கிறோம். ஆனால் கடவுள் அண்ட சராசரங்களையும் படைத்தவர். இதைத்தான் கடவுள் யோபுக்கு புரிய வைக்க முயற்சிக்கிறார். கடவுள் காட்சி கொடுக்கும் முன் கடவுளை நோக்கி துணிவாக பல கேள்விகளை கேட்டிருந்தான் யோபு. கடவுள் அவன் முன்பாக தோன்றிய பின்னரோ, வாயடைத்துப்போன யோபிடம் கடவுள் பல கேள்விகளை கேட்கிறார் – பதில் சொல்ல முடியாமல் திக்கு முக்காடி போகிறான் யோபு. கர்த்தர் அவனிடத்தில் கேட்ட கேள்விகளில் சில இதோ: "நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி. அதற்கு அளவு குறித்தவர் யார்? அதின்மேல் நூல்போட்டவர் யார்? இதை நீ அறிந்திருந்தால் சொல்லு. அதின் ஆதாரங்கள் எதின்மேல் போடப்பட்டது? அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்? அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே. கர்ப்பத்திலிருந்து உதிக்கிறதுபோல் சமுத்திரம் புரண்டுவந்தபோது, அதைக் கதவுகளால் அடைத்தவர் யார்? மேகத்தை அதற்கு வஸ்திரமாகவும், இருளை அதற்குப் புடவையாகவும் நான் உடுத்தினபோதும்,... கர்ப்பத்திலிருந்து உதிக்கிறதுபோல் சமுத்திரம் புரண்டுவந்தபோது, அதைக் கதவுகளால் அடைத்தவர் யார்? மேகத்தை அதற்கு வஸ்திரமாகவும், இருளை அதற்குப் புடவையாகவும் நான்

உடுத்தினபோதும், நான் அதற்கு எல்லையைக் குறித்து, அதற்குத் தாழ்ப்பாள்களையும் கதவுகளையும் போட்டு: இம்மட்டும் வா, மிஞ்சி வராதே உன் அலைகளின் பெருமை இங்கே அடங்கக்கடவது என்று நான் சொல்லுகிறபோதும் நீ எங்கேயிருந்தாய்?”

பொருத்தமில்லாத கேள்விகளைக் கேட்கிறார் கர்த்தர். யோபு கஷ்டப்படுவதற்கும் பூமி அஸ்திபாரப்படுவதற்கும் என்ன சம்பந்தம்? யோபின் கர்ப்பத்தின் கனிகள் மரிப்பதற்கும் சமுத்திரம் கர்ப்பத்திலிருந்து உதிப்பதற்கும் என்ன சம்பந்தம்?

யோபுவின் வாழ்க்கையை விட பன்மடங்கு பெரிய விஷயங்கள் இவை. யோபு தனி ஒரு மனிதன். ஆனால் முழு உலகையும் படைத்து – யோபு தன் கண்ணால் பார்த்த, பார்க்காத பல விஷயங்களையும் படைத்து, ஆட்சி செய்து கொண்டிருக்கும் கர்த்தரின் கரங்களில் யோபு தன்னுடைய வாழ்க்கையும் ஒப்படைக்கலாம் அல்லவா? சமுத்திரத்தின் கரங்களுக்கு கதவுகளை போட்டு இதற்கு மிஞ்சி வராதே என்று கர்த்தரால் சொல்ல முடியும் என்றால் யோபின் வாழ்வில் உள்ள பிரச்சனைகளுக்கும் வரையறை போட்டு இதற்கு மேல் வராதே என்று சொல்ல முடியும் அல்லவா? கர்த்தரால் துருவ நட்சத்திரங்களையே வழிநடத்த முடியுமென்றால் ஏன் அவரால் யோபின் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவை கொண்டுவர முடியாது? எல்லாவற்றையும் விட யோபு என்ற தனி மனிதனின் வாழ்வில் உள்ள சிக்கல்களைவிட மிகவும் சிக்கல்கள் வாய்ந்த அண்ட சராசரங்களே அவரை நம்பியிருக்கின்றன என்றால், ஏன் நம்மால் கர்த்தரை நம்ப முடியாது?

யோபின் புத்தகத்தில் உலகில் ஏன் தீமை இருக்கிறது என்ற கேள்விக்கு பதில் இருப்பதாக சிலர் கருதுகின்றனர். ஆனால் என்னைப்பொறுத்த வரையில் உலகில் ஏன் தீமை இருக்கிறது என்ற கேள்விக்கு யோபின் புத்தகத்தில் பதில் இல்லை. யோபின் புத்தகம் நமக்கு கற்றுத்தரும் மகத்தான பாடம் என்னவென்றால், உலகில் ஏன் தீமை இருக்கிறது என்ற கேள்விக்கு பதிலை தெரிந்து கொள்வதை விட, நம்மை படைத்த கடவுளை அறிந்து கொள்வது சிறந்தது என்பதே. நம்முடைய பிரச்சனைகளுக்கு பதிலை தெரிந்து கொள்வதை விட கர்த்தரை அறிந்து கொள்வதே சிறந்தது (Crab,2010). வாழ்வின் புரியாத புதிர்களுக்கு இவ்வுலகில் பதில் கிடைக்கப் போவதில்லை. நமக்கிருக்கும் ஒரே தெரிவு கடவுளை நம்பி, நம்முடைய பிரச்சனைகளுக்கு பதிலாக அவரை அறிந்து

கொள்வது தான். நமக்கு புரியாத பல விஷயங்கள் கடவுளுடைய கையில் இருக்கின்றது. அதை நாம் நம்பியிருக்கிறோம். அப்படியானால் நமக்கு வரும் துயரங்கள், ஏன் வருகின்றன என்று தெரியாவிட்டாலும் கூட அவரை நம்பலாம் அல்லவா? விண்வெளியில் தொங்கும் நட்சத்திரங்களை விழாமல் காப்பவர், நாமும் விழாமல் காப்பது அதிக நிச்சயமல்லவா? நமக்காக தன்னுடைய சொந்த குமாரனென்றும் பாராமல் அவரை தந்தவர் மற்ற விஷயங்களையும் நமக்குத் தருவது அதிக நிச்சயமல்லவா?

கர்த்தர் வருமுன்பு பல கேள்விகளை கேட்ட யோபு, கர்த்தர் பேச ஆரம்பித்த போது மௌனமாகிறான்: "சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் யார்? தேவன் பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக்கடவன் என்றார். அப்பொழுது யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: இதோ, நான் நீசன் நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லு வேன் என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன். நான் இரண்டொருதரம் பேசினேன் இனி நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன் என்றான்." யோபு கடைசியில் "என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன் இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்" என்றான். பாருங்கள் மனஸ்தாபப்படுகிறேன் என்று யோபு சொன்னபோது அவனுடைய பிரச்சனைகள் எதுவும் தீர்ந்து போயிருக்கவில்லை. மரித்த பிள்ளைகள் மரித்தவர்கள் தான். போன செல்வம் போனது தான். அப்படியானால் அவனுக்கு ஆறுதல் அளித்து அவனை தேற்றியது எது? தேவனுடன் அவனுக்கு ஏற்பட்ட அந்த தனிப்பட்ட அனுபவம். கர்த்தரை அவன் சந்தித்தான். அது அவனுடைய மனநிலையில் மாற்றத்தை

தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும் பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது.

ஏற்படுத்தியது. வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தர் தன் மீது கரிசனையுடன் தனது கேள்விகளுக்கு பதில் சொல்ல பெருங்காற்றில் வந்தாரே என்ற எண்ணம் அவனை தேற்றியது. "என் கண்கள் உம்மை கண்டது". இந்த அனுபவம் நாம் உலகில் அடையக்கூடிய அதி உன்னதமான அனுபவம் - ஆண்டவரை தனிப்பட்ட ரீதியாக அறிந்து கொள்ளும் அனுபவம். அண்ட சராசரங்களை படைத்தவர் பல கோடி மக்களில் ஒருவராகிய என்னோடு நட்புறவு கொள்ளுகிறார் என்பது எத்தனை ஆச்சரியமானது!

நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு பிரச்சனையும் கர்த்தரை விட்டு மறு திசையில் அல்ல, அவர் இருக்கும் திசையில் நம்மைத் தள்ள வேண்டும். நாம் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சனையின் முடிவிலும் நமக்கும் அவருக்கும் உள்ள உறவு பலப்படவேண்டும். அவர் யார் என்பதையும், எப்படிப்பட்டவர் என்பதையும் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

கடவுள் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். அவரை மீறி எதுவும் நடப்பதில்லை. "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால், பயப்படாதிருங்கள் அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்." ஆகையால் தைரியம் கொள்ளுங்கள்!

வியாபாரத்தை ஆசீர்வதித்த கர்த்தர்

கொரோனா காலத்தில் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவ வியாபாரியின் கதையிது. இலங்கையில் அழகுசாதன பொருட்கள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இவர் கொரோனா காலத்தில் நஷ்டமடைந்து போகவே மிகவும் கவலைப்பட்டார். இதோடு எல்லாம் முடிந்தது. எப்படி என் குடும்பத்தை காப்பாற்றுவேன். இனிமேல் வேறு எங்கேயாவது வேலைக்கு போய்விட வேண்டியது தான் என்று வியாபார த்தை மூட கிட்டத்தட்ட தீர்மானித்து விட்டார். அப்போது தான் கர்த்தர் அவருக்கு ஒரு புது யோசனையை கொடுத்தார். தான் வழமையாக விற்கும் அழகு சாதனப் பொருட்களை மட்டும் நம்பியிருக்காமல் புதிதாக சனிடைசர் (sanitizer சுத்திகரிப்பு திரவம்) வியாபரத்தை ஆரம்பித்தார். மற்ற

யாரும் செய்வதற்கு முன்னால் அவர் சனிடைசர் வியாபாரத்தை ஆரம்பித்த படியால் அதில் நல்ல லாபம் ஈட்டினார். கர்த்தருக்கு நன்றி செலுத்தினார்.

*சிறிது காலத்தின் பின் அந்த வியாபாரமும் பெரிதாக நடக்கவில்லை. மீண்டும் கவலைப்பட்டு ஜெபித்த அவர் இன்னும் பல புதிய பொருட்களை வைத்து வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். அதன் மூலம் நல்ல லாபத்தை ஈட்டி தொழிலை நல்லபடி நடத்திச்செல்கிறார். எப்படி இவ்வளவும் நடந்தது என்று கேட்டபோது, **2019**ஆம் ஆண்டு கர்த்தரின் இதயத்தை தொடும்படி நான் ஜெபித்து என்னை ஆசீர்வதிக்கும்படி கேட்டேன் என்று கூறினார். இதுபோன்ற பல கதைகள் இருக்கின்றன. **"**தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது**" (**சங்கீ **33:18-19).** எல்லாம் பறிபோய்விட்டது, கொரோனா எல்லாவற்றையும் கொள்ளையடித்து விட்டது என்று கன்னத்தில் கைவைத்துக் கொண்டிருக்காமல், கர்த்தரிடத்தில் ஜெபித்து, நல்ல யோசனைகளைப் பெற்று அதை நடைமுறைப்படுத்த வேண்டும். நாம் கர்த்தரை விசுவாசித்து செயற்படவேண்டும். செயலில்லாத விசுவாசம் செத்தது. கர்த்தரை விசுவாசியுங்கள், செயற்படுங்கள்.*

கிறிஸ்தவ நம்பிக்கை

*ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன் (ரோம **8:18).***

ஒரு நீர்த்துளி கடலோடு ஒப்பிடும்போது எவ்வளவு சிறியதோ அதேபோலவே நம்முடைய பிரச்சனைகளும் நித்தியத்தின் ஒளியிலே பார்க்கின்றபோது மிகச்சிறியவை. விமானத்திலிருந்து கீழே பார்க்கின்ற பொழுது மிக உயரமான கட்டிடங்கள் கூட மிகச்சிறியதாக தெரிவதுண்டு. அதே போலத்தான் நாம் பெரிதாக நினைக்கும் விஷயங்கள், நம்மை துன்புறுத்தும் விஷயங்கள் அத்தனை பெரியவை அல்ல. அவை கர்த்தருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இப்போது நமக்கு பெரிதாக தெரியும் விஷயங்கள் பின்பு சிறிதாக தோன்றும். 'அட இதுக்காகவா கவலைப்பட்டோம்' என்று நாமே பல தடவைகள்

நினைத்ததுண்டல்லவா?

சிலநேரங்களில் நமக்கு பெரிதாக தெரியும், நமது மனதை துளைத்துக்கொண்டிருக்கும் விஷயங்களைப் பற்றி கர்த்தர் நம்மோடு பேசாமல் வேறு விஷயங்களைப்பற்றி பேசுவதுண்டு. யோபுவுக்கு கர்த்தர் கொடுத்த பதிலைப்போல. நமது பிரச்சனைகள் நித்தியத்தின் பார்வையில் எத்தனை சிறியவை என்பதை கர்த்தர் அடிக்கடி நமக்கு காட்டுவதுண்டு.

ஒருநாள் என்னுடைய சிறு வயது மகள் அழுது கொண்டே என்னிடம் ஓடிவந்தாள். நான் என்னவோ ஏதோ என்று பதறியடித்துக்கொண்டு பார்த்தபோது "அக்கா எனக்கு சாக்கிலட் தரவில்லை" என்று அழுதுகொண்டே சொன்னாள். அவளுக்கு மிகப்பெரிதாக தெரிகின்ற விஷயம் எனக்கு மிக அற்பமானதாக தெரிகிறதல்லவா? அதேபோல த்தான் இப்போது நமக்கு மிகப்பெரிதாக தெரியும் பிரச்சனைகள் கூட நித்தியத்தின் வெளிச்சத்தில் பார்க்கும் போது ஒன்றுமில்லாதவையாக இருக்கும்.

மரணம் முடிவல்ல.
அது ஒரு ஆரம்பமே

கிறிஸ்தவ நம்பிக்கை மறு உலகைப்பற்றியது. கிறிஸ்துவின் நிமித்தம் வரும் துன்பங்களாக இருக்கட்டும், எல்லாருக்கும் வரும் துயரங்களாக இருக்கட்டும் இதற்கு கடைசி பதில் அக்கரையிலேயே உள்ளது. கிறிஸ்து மரித்து உயிர்த்தபடியினால், கடைசி நாளில் நாமும் உயிர்ப்போம், அதுவும் நமது ஆவிக்குரிய சரீரத்தில் உயிர்ப்போம் என்ற நம்பிக்கை இருக்கிறது (1 கொரி 15:44).

மரணம் முடிவல்ல. அது ஒரு ஆரம்பமே. கிறிஸ்து எனக்கு ஜீவன். சாவு எனக்கு ஆதாயம் என்று கிறிஸ்துவுக்காக வாழ்கின்ற ஒவ்வொருவரும் சொல்லிக்கொள்ளலாம். சாகா வரத்தை இயேசு வாக்களிக்கவில்லை, நோயற்ற வாழ்வை கிறிஸ்து வாக்களிக்கவில்லை, நித்திய வாழ்வை வாக்களித்திருக்கின்றார் - இது மற்ற அனைத்தையும் விட மேலானதல்லவா? அதற்காக கிறிஸ்தவர்கள் அனைவரும் இவ்வுலகில் பிச்சைக்காரர்களைப்போல் வாழவேண்டும் என்பதல்ல. நமது விசுவாசத்தின்படியே ஒரு நிறைவான வாழ்வை வாழ்வோம். நமது வாழ்வில் நாம் அடையும் நிறைவு நாம் அவர் மீது வைத்திருக்கும் விசுவாசத்திலேயே தங்கியிருக்கிறது.

கிறிஸ்துவுக்காக நாம் துன்பப்படும்போது அதன் பலன் நூறத்தனையாக கிடைக்கும் என்று கிறிஸ்து நமக்கு வாக்களித்திருக்கிறார்:

*“இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மாற்கு **10:31).***

ஒன்றை இழந்தால் அது நூறு மடங்காக கிடைப்பது நல்ல லாபம் அல்லவா என்று நாம் யோசிக்கலாம்![28] ஆனால் தேவன் நூறு மடங்கு என்று சொல்வதற்கும் நாம் நூறு மடங்கு என்று நினைப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. உதாரணமாக மிகவும் அழகான வேற்று மத பெண்ணை கிறிஸ்துவுக்காக நீங்கள் இழக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அதைவிட நூறு மடங்கு அழகான ஒரு பெண்ணை கர்த்தர் உங்களுக்கு தரலாம். ஆனால், நீங்கள் இழந்த பெண்ணை விட உங்களுக்கு நூறு மடங்கு பொருத்தமான ஒரு பெண்ணை கர்த்தர் தருவார் என்று சிந்திப்பதே சிறந்தது. கிறிஸ்துவின் நிமித்தம் நீங்கள் இழந்த வேலையை விட நூறு மடங்கு பொருத்தமான ஒரு வேலையை கர்த்தர் உங்களுக்குத் தருவார். அதுமட்டுமின்றி இந்த ஆசீர்வாதங்கள் சபைக் கூடாகவும் கிடைக்கலாம். கிறிஸ்துவின் நிமித்தம் தாயை இழந்தவன் சபைக்குள்ளே - தன்னை தாயை போல அன்பு செய்யும் - நூறு தாய்மார்களை கண்டு கொள்கிறான். வீட்டை இழந்தவன் தன்னை ஏற்றுக்கொள்ளும் நூறு கிறிஸ்தவ வீடுகளை கண்டு கொள்கிறான். இது வேதம் தரும் நம்பிக்கை.[29]

நம்பிக்கை கொள்ளுங்கள். கொரோனா சீக்கிரத்தில் நீங்கிவிடும். கர்த்தர் நம்மை பாதுகாத்து பராமரிப்பார். இருளான பாதையில் நாம் நடக்கும்போது நாம் செய்யக்கூடியது தொடர்ந்தும் பொறுமையாக நடப்பது தான். வெளிச்சம் விரைவில் வந்து விடும். நம்மோடு இவ்வுலகத்தை படைத்த கர்த்தாதி கர்த்தர் இருக்கிறார். கொரோனா முடிந்த பின் வரும் காலங்களை இப்போது நினைத்துப்பாருங்கள்.

---

[28] *இந்த பகுதியில் சில வசனங்கள்-கருத்துக்கள், எனது “கிறிஸ்துவை நோக்கி: மாற்கு விளக்கவுரை” நூலில் இருந்து எடுத்திருக்கிறோம்.*

[29] *இங்கு நான் கூறுவது சுகபோக சுவிசேஷம் அல்ல (prosperity gospel) – துன்புறுத்தலோடு கூட ஆசீர்வாதங்களும் உண்டு. இது வேதத்தின் போதனை.*

7 சில முக்கயமான கேள்விகள்.....

இந்த உலகம் இப்படியானது எப்படி? - உலகில் பாவம் வந்த கதை

ஆதியிலே தேவன் உலகத்தை சிருஷ்டித்தார். மனிதனை ஆணும் பெண்ணுமாக படைத்தார். பூமியிலே சமாதானம் இருந்தது. சாந்தி இருந்தது. அங்கு பாவமோ, அநியாயமோ இருக்கவில்லை. "கிளியும் பருந்தும் ஒரு கூட்டில்" வாழும் உலகம். அவர்களுக்கு தெரிவு செய்யும் சக்தியும் இருந்தது. கர்த்தர் அவர்களுக்கு அந்த சுதந்திரத்தை கொடுத்தி ருந்தார். தோட்டத்திலே நன்மை தீமை அறியும் கனியை வைத்து அதை புசிக்கும் நாளிலே நீ சாகவே சாவாய் என்று எச்சரிந்திருந்தார். 'வாழ்வா சாவா, நித்திய ஜீவனா, நித்திய அழிவா - தெரிவு உன்னுடையது' என்று கர்த்தர் விட்டிருந்தார்.

முட்டாள் மனிதன் தானும் தேவனைப்போல வரவேண்டும் என்ற ஆசையினால் நன்மை தீமை அறியும் கனியைப் புசிக்கிறான். அன்று வரை மனிதனுக்கு எது சரி, எது பிழை என்பதை கர்த்தர் தீர்மானித்தார். ஆனால் கனியை புசித்த அன்று முதல், எது சரி எது பிழை என்பதை மனிதன் தீர்மானிக்கிறான். அன்று வரை மனிதன் எதை செய்யவேண்டும், எதை செய்யக்கூடாது என்பதை கர்த்தர் தீர்மானித்தார். ஆனால் அன்று முதல், தான் எதை செய்யவேண்டும் எதை செய்யக்கூடாது என்பதை மனிதன் தீர்மானிக்கிறான். தான் படைத்த உலகிலே, தன்னுடைய சாயலில் படைக் கப்பட்ட மனிதர்கள் எப்படி நடக்கவேண்டும் என்பதை தீர்மானிப்பவர் அதைப் படைத்த கர்த்தர். எப்போது அதை மனிதன் செய்ய ஆரம்பிக்கிறா னோ அப்போது அவன் தனக்குத்தானே கடவுளாகி விட்டான். அதன் பின்பு நடந்த அழிவுகள் அனைத்திற்கும் இதுவே அடிப்படை காரணம். எது சரி, எது பிழை என்பதை மனிதனே தீர்மானித்து தனக்கு தோன்றியபடி யெல்லாம் வாழ்கிறான். அதன் விளைவு தான் இந்த கொடிய உலகம்.

இந்த கெட்டுப்போன உலகத்தை கிறஸ்துவின் சுவிசேஷம் மாற்றுகிறது. சுவிசேஷம் பரவும் இடங்களில் இயேசுவை கர்த்தராக மனிதன் ஏற்றுக்கொள்ளும்போது தனக்கு எது சரி, எது பிழை என்பதை அவர் தீர்மானிக்க இடம் கொடுக்கிறான். தேவ ராஜ்யம் விஸ்தரிக்கின்ற போது கர்த்தருடைய சித்தம் மற்றவர்கள் வாழ்வில் நிறைவேறுகிறது, அவர் சரி என்று நினைப்பதை மனிதன் செய்ய ஆரம்பிக்கிறான். ஒரு

ராஜாவின் கட்டளைப்படி அந்நாட்டு மக்கள் செய்வதைப்போல தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய கட்டளைப்படி அதாவது அவரது சித்தப்படி நாம் செயற்படவேண்டும்.

உலகில் தீமை வந்த கதை இதுவே. நம்முடைய அழிவுக்கு நாமே காரணம். இதிலிருந்து நம்மை விடுவிப்பவர் யார்? உலகுக்கு வந்த பாவம் உலகை விட்டு நீங்குவது எப்படி? அடுத்து பார்ப்போம்.

உலகிலிருந்து தீமை மறையும் கதை

அழிவை நோக்கி போய்க்கொண்டிருந்த உலகை கர்த்தர் தமது குமாரனை அனுப்பி மீட்பின் பாதையில் நடத்துகிறார். தம்மை மீட்க வந்த தேவகுமாரனாகிய இயேசுவை மனிதர்கள் சிலுவையில் அறைந்து கொன்று விட்டார்கள். ஆனால் கர்த்தரோ அவரை உயிரோடு எழுப்பினார். அவருடைய உயிர்த்தெழுதலுக்கும் மற்ற உயிர்ப்பு சம்பவங்களுக்கும் பாரிய வித்தியாசம் இருக்கிறது. இயேசு உயிர்ப்பித்த லாசரு மீண்டும் மரித்தான். ஆனால் இயேசுவோ இனி ஒரு போதும் மரிப்பதில்லை, அவருடைய சரீரம் வித்தியாசமானது. ஆதியாகமத்தில் மனிதனை படைத்த தேவன் மீண்டும் ஒரு புதிய சரீரத்தை கிறிஸ்துவுக்கு கொடுத்திருக்கிறார். மரணத்தின் கட்டுகள் உடைபட்டன. ஆதியாக மத்தில் எப்படி ஆதாமின் கீழ்ப்படியாமையால் பாவமும், அதனால் மரணமும் உலகில் வந்ததோ, அதேபோலவே கிறிஸ்துவின் கீழ்ப்படி தலால் நித்திய வாழ்வு மனிதனுக்கு வந்தது.

உயிர்த்த கிறிஸ்து பரத்துக்கேறி பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஒருநாள் அவர் மீண்டும் வருவார். அவர் வரும்போது மற்ற அதிகாரங்கள், துரைத்தனங்கள் யாவும் அழிக்கப்படும். மரித்தோர் உயிர்தெழுவார்கள், உயிரோடிருக்கும் விசுவாசிகளின் உடல்கள் மாற்றப்படும். உலகில் துன்பம் ஒழிக்கப்படும். உலகில் துன்பங்களும் துயரங்களும் நீக்கப்பட வேண்டுமானால் அதற்கு காரணமானவர்கள் ஒன்றில் அழிக்கப்படவேண்டும் அல்லது மாற்றப்படவேண்டும். உலகில் துயரம் வருவதற்கு மிக முக்கியமாக இருக்கும் பாவம் உலகை விட்டு அகற்றப்படவேண்டும். துன்பத்தை உருவாக்கும் மரணம் உலகை விட்டு நீக்கப்படவேண்டுமானால் அதற்கு காரணமான பாவமும் உலகை விட்டு நீக்கப்படவேண்டும் (1 கொரி 15:56). அப்போது, அப்போது மட்டுமே துன்பங்களும் துயரங்களும் உலகை விட்டு

*நீங்கும். இது அத்தனையும் கிறிஸ்துவின் **2**ஆம் வருகையில் நடக்கும்.*

கடவுள் நல்லவரா கெட்டவரா?

*கடவுள் நல்லவராகவும் சர்வவல்லவராகவும் இருந்தால் உலகில் ஏன் தீமை இருக்கிறது என்பது மிக முக்கியமான கேள்வி. ஏனென்றால் கடவுள் நல்லவராக இருந்தால் தீமையை பார்த்துக்கொண்டு அவர் ஒன்றும் செய்யாமல் இருக்கக்கூடாது. அவருக்கு அதை தடுக்க வல்லமை இருந்தால் அவர் அதை தடுத்திருக்கவேண்டும். ஒன்றிலே அவருக்கு மனமில்லை, இல்லாவிட்டால் அவருக்கு பலமில்லை (*Hume, 1779,2007, Mackie 1971*). இதை வைத்து கடவுள் என்று ஒருவர் இல்லை என்று வாதாடுகின்றவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இதிலே முக்கியமான விஷயம் கடவுள் இல்லை என்று கூறுகின்றவர்களும் அவர் நல்லவராகத்தான் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். பொல்லாத கடவுள் ஒருவரை யாருமே - கடவுள் இல்லை என்று சொல்லுகின்றவர்கள் கூட - ஏற்றுக்கொள்ளுவதில்லை.*

என்னைப்பொறுத்த வரைக்கும் கடவுள் நல்லவரா என்ற கேள்வி பிழையானது. ஏனென்றால் நாம் நல்லது என்று எதையாவது நினைத்துக்கொண்டு அதை கடவுளுடன் ஒப்பிட்டு அதற்கு அவர் ஈடானவரா என்று பார்க்கிறோம். ஆனால் நன்மை என்பதற்கு வரையறையே அவர்தான். அவர் செய்வது சகல விதத்திலும் நல்லது. எது நல்லது என்பதை நாம் அவரை வைத்துத்தான் தீர்மானிக்கவேண்டும். நல்ல மனிதர் ஒருவர் எப்படியிருக்க வேண்டும் என்பதை இயேசு கிறிஸ்துவின் நன்மையை வைத்தே தீர்மானிக்கவேண்டும்.

*உலகில் உள்ள துன்பங்களை குறித்து கடவுள் அக்கறை இல்லாதவரா என்ற கேள்விக்கு பதிலாக கர்த்தர் பல தத்துவங்களை கொடுக்கவில்லை. இயேசுவை கொடுத்தார். தன்னையே கொடுத்தார் (*Yancey, 1997*). 'நான் படும் துன்பங்களை குறித்து கர்த்தர் கவலையில்லாமல் இருக்கிறாரே' என்ற கேள்வியை கேட்கின்றவர்களுக்கு கடைசி பதிலாக இயேசுவையும் அவருடைய சிலுவையையும் கடவுள் காட்டுகிறார். வலியும் வேதனையும் உலகில் இருக்கிறதினால் நீர் நல்லவர் இல்லை என்று கூறும் யாவருக்கும் கடவுள் தன்னுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ஆணி பாய்ந்த கரங்களை காட்டுகிறார். நாம் துன்பம் அனுபவித்தது போலவே அவரும்*

பாடனுபவித்திருக்கிறார். நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். ஆனால் அவரோ தாம் செய்யாத பாவங்களுக்காக, நாம் செய்த பாவங்களின் தண்டனையை அனுபவித்தார். ஒன்றில் நாம் செய்த தப்பிதங்களால் அல்லது மற்ற மனிதர்கள் செய்த தவறினால் நாம் துன்பங்களை அனுபவிக்கிறோம். இந்த உலகம் பொல்லாத உலகமாய் மாறியது (முதல் மனிதனாகிய) ஆதாம் செய்த பாவத்தினாலும், அவனுடைய கீழ்படியாமையினாலும் தான் (1 கொரி 15:21-22). அவன் நமது மூதாதையனும் நம்மில் ஒருவனுமானவன். ஆதாம் செய்த தவறுக்காக நான் பாதிக்கப்படுவது சரிதானா என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் "இவர்களுடைய தகப்பன் மிகவும் பொல்லாதவர் அவர் செய்த கொடுமையினால் தான் பிள்ளைகள் பாடனுபவிக்கின்றனர்" என்று சிலர் சொல்லுவதுண்டல்லவா? அதேபோல நம்முடைய மூதாதையனான ஆதாம் செய்த பாவத்தின் பலனை இன்றும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நாம் துன்பப்படுவது ஏதோ ஒரு விதத்தில் நியாயமானதே. ஒன்றில் நாம் அல்லது நம்முடைய மூதாதையர் பாவம் செய்திருக்கிறோம். அமெரிக்காவில் ஏப்ரல் 21ம் திகதி 2021இல் கொலம்பஸ் என்ற நகரில், ஒரு பெண்ணை தாக்க கத்தியோடு வந்த கறுப்பின பெண்ணை ஒரு பொலிஸ் அதிகாரி சுட்டுக் கொன்று விட்டார். அதைப்பற்றி கருத்து தெரிவித்த அந்நகர மேயர், "சிலர் குற்றம் புரிந்திருக்கிறார்கள், ஆனால் நாம் எல்லாருமே (அதற்கு) பொறுப்புடையவர்களாக இருக்கிறோம்" என்று கூறினார்.[30] *தவறு செய்யாதவர்களும் நடந்த தவறுகளுக்காக பொறுப்பேற்க வேண்டும் என்று மனிதர்களாகிய நாமே கூறும்போது, ஆதாம் செய்த பாவத்தினால் நாம் அனைவரும் பாதிக்கப்பட்டோம் என்று வேதம் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ளலாம் அல்லவா?*

கடவுளோ ஆதாமை படைத்தவர். உலகில் நடந்த பாவங்களுக்கு அவர் காரணமல்ல. உலகில் எந்த வித பாவமும் செய்யாத ஒரு அப்பாவி இயேசு. அவர் உலகில் வந்து பாடனுபவித்ததை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. தாம் செய்த பிழைகளின் தண்டனையையே யாரும் ஏற்றுக் கொள்வதில்லை – கடவுளோ தனது படைப்புகள் செய்த தவறை தன்மீது ஏற்றுக்கொண்டார். படைத்தவராகிய கடவுள்,

[30] https://edition.cnn.com/2021/04/21/us/ohio-columbus-police-shooting-15-year-old/index.html

அவருடைய பார்வையில் மிகவும் அற்பமான படைப்புகளுக்காக மரிப்பது என்பது எத்தனை ஆச்சரியமானது!

நாம் எல்லோரும் பாவிகளே. ‘நான் நல்லவனாகத்தானே வாழ்கிறேன் எனக்கு ஏன் இத்தனை துன்பங்கள்’ என்று நாம் கேட்கலாம். வாகனம் ஓட்டும்போது சில நேரங்களில் நாம் சாலை விதிகளை (road rules, வீதி விதிகள்) மீறி வாகனம் ஓட்டியிருப்போம். அப்போது யாரிடமும் பிடிபடாமல் தப்பித்துக் கொண்டிருப்போம். வேறு சில தடவைகள் நாம் செய்யாத தவறுக்காக சிக்கிக் கொண்டிருப்போம். அப்படி பிடிபடும்போது முன்பு நாம் தவறு செய்தும் தப்பித்துக்கொண்டதை நாம் நினைப்பதில்லை. என்னை அநியாயமாய் பிடித்து அபராதம் விதித்து விட்டார்கள் என்று நாம் கூறுவதுண்டல்லவா? அதே போலத்தான் செய்யாத தவறுக்காக நாம் தண்டிக்கப் படுகிறோம் அல்லது துன்பப்படுகிறோம் என்று நாம் நினைத்தாலும், நாம் தவறே செய்யாதவர்கள் அல்ல – நாம் முன்பு செய்த தவறுக்காக இப்போது தண்டிக்கப்பட்டிருக்கலாம். தவறிழைத்த சந்தர்ப்பத்தில் தப்பித்தவர்கள், தவறு செய்யாத இன்னொரு சந்தர்ப்பத்தில் தண்டிக்கப்படும் போது ஏதோ ஒரு விதத்தில் நீதி நிறைவேறலாம். இந்த உதாரணத்திலிருந்து இன்னொன்றும் தெளிவாகிறது. வீதி விதிகளை வழமையாக கடைபிடித்திருந்தாலும், வீதி விதிகளை ஒருமுறை மீறினாலும் குற்றம் குற்றமே. நாம் ஒருமுறை பாவம் செய்தாலும் நாம் பாவிகள் தான்.

ஆணிவேரில் ஆட்டம் கண்டாலே ஒழிய மனிதன் ஆண்டவரை நினைப்பதில்லை

உலகில் நடந்த மிகப்பெரிய கொடுமை என்று கூட சிலுவை மரணத்தை சொல்லலாம். ஏனென்றால் மனிதர்களாகிய நாம் தண்டிக்கப்படுவது ஏதோ ஒரு விதத்தில் நியாயமானது. மனிதர்களாகிய நாம் பாடனுபவிக்கும்போது ஒன்றில் நாம் அல்லது நமது மூதாதையர்கள் செய்த தவறுக்காக தண்டிக்கப்படுகிறோம். ஆனால் நமக்காக சிலுவை சுமந்த இயேசு எந்த விதத்திலும் பாவம் செய்யவில்லை. அவர் பாடனுபவித்தது நாம் பாடனுபவிப்பதை விட வித்தியாசமானது – அவர் நமக்காக பாடனுபவிக்கிறார். உலகில் ஏன் இன்னும் தீமை இருக்கிறது என்பதற்கு கடைசி ஆறுதல் சிலுவையிலேயே இருக்கிறது.

தேவனுடைய இறையாண்மையும் அனாதி தீர்மானமும்

சிலுவையில் நமக்காக தன்னை கொடுத்த தெய்வம் மிக நல்லவர் மட்டுமல்ல, அவர் சர்வவல்லவரும் கூட. கொரோனா ஆண்டவருடைய அனுமதி இன்றி, இன்று புதிதாய் வந்த நோய் அல்ல. உலகத்தோற்றத்திற்கு முன்னே இப்படியொரு நோய் வருவது கடவுளுக்குத்தெரியும். அவருடைய அனுமதி இன்றி கொரோனா உலகில் நுழையவில்லை. அவருடைய அனுமதியின்றி நம் உடம்பிலும் கொரோனா கிருமியால் நுழைய முடியாது. அப்படி அவர் அதை அனுமதித்தால் அதன் மூலம் ஏதோ ஒரு நன்மையை நமக்கு கட்டாயம் கட்டளையிடுவார். அது என்னவென்று நம்மால் கூற முடியாவிட்டாலும் கூட நாம் அவரை விசுவாசிக்கவேண்டும். கர்த்தர் இவ்வுலகில் நம்மை நம்பிக்கையற்றவர்களாக விடவில்லை.

உலக மருத்துவர்களும், தலைவர்களும் கொரோனா வந்தவுடன் அங்கும் இங்கும் பதறியடித்துக்கொண்டு ஓடுவதைப்போல கர்த்தரும் பதறுவார் என்று நாம் நினைக்கக்கூடாது. அவர் அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றார். கொரோனா ஒரு புயல் என்றால் அது கர்த்தர் அனுமதித்த திசையில் மட்டுமே வீசும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

உலகிலுள்ள தீமைக்கு காரணம் சாத்தான்

உலகில் *பாவம் நுழையக்காரணம் சாத்தான். உலகிலுள்ள அநேக தீமைகளுக்கு அவனே பொறுப்பாக இருக்கிறான். சிலநேரங்களில் அவனது நேரடியான செயற்பாடு இருந்தாலும் அவன் மனிதர்களை தூண்டி விடுவதினூடாகவே உலகில் தீமையை கொண்டுவருகிறான்.*

உலகிலுள்ள தீமைக்கு காரணம் மனிதன்

உலகில் தீமை ஏன் நடக்கிறது? உலகில் மனிதர்கள் பொல்லாதவர்களானபடியினால் தான் தீமை இருக்கிறது. சுதந்திரம் (சுயாதீன சித்தம், Free will*) உள்ளவர்களை கடவுள் படைத்ததினால் அவர்கள் பாவம் செய்கிறார்கள். சுதந்திரம் உடையவர்களாக மனிதர்களை படைத்த பின்பு கடவுள் அவர்களை நூல் பொம்மைகளைப் போல நடத்த முடியாது. ஆகஸ்டின் சொன்னதைப்போல பாவம் செய்வார்கள்*

என்று முன்பே அறிந்தும், அவர்களை படைத்தது ஆண்டவருடைய தயாள மனப்பான்மையை காட்டுகிறது (Augustine, *1955*).

சிலர், எழுதியிருக்கிறபடிதான் எல்லாமே நடக்கிறது. மனிதர்களுக்கு உண்மையிலேயே சுதந்திரமோ, சுயாதீன சித்தமோ இல்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு சபை பிதாவான ஆகஸ்டின்[31] *நல்ல பதிலடி கொடுக்கிறார்:*

மனிதருக்கு சுயாதீன சித்தம் இல்லையென்றால் அவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனையும் வெகுமதிகளும் நீதியற்றதாகவே இருக்கும் (Augustine, 2010, 2.1.3.7). *ஏனென்றால் சுயாதீன சித்தமில்லாதவர்கள் நூல் பொம்மைகளைப் போல சொன்னபடி செயற்படும் இயந்திரமாகவே இருந்திருப்பார்கள். எய்தவன் இருக்க அம்பை நோவது பொருத்தமற்றது. எய்தவனை தண்டிக்க வேண்டுமே தவிர அம்பைத் தண்டிக்க முடியாது. மனிதர்களுக்கு சுயாதீன சித்தம் இல்லை என்றால் அவர்கள் செய்யும் தவறுகளுக்கு அவர்களை காரணம் சொல்ல முடியாது, அவர்களை தண்டிக்கவும் முடியாது.*[32]

---

[31] *உலகில் பாவமும் தீமையும் இருப்பதினால் உலகில் ஒழுங்கின்மை இருக்கின்றது என்று வாதாடுகின்றவர்களுக்கு பதிலாக ஆகஸ்டின் சொன்னது இதுதான்* (Augustine, *1955*):

ஒன்றில் பாவம் முற்றாக அழிக்கப்பட்ட பின்பு துயரம் இருந்தால் அது ஒழுங்கின்மையாக இருந்திருக்கும், அல்லது பாவம் வருவதற்கு முன்பு துயரம் இருந்திருந்தால் அது ஒழுங்கின்மையாக இருந்திருக்கும். அல்லது பாவம் செய்து அங்கே துயரம் இல்லாவிட்டாலும் அது ஒழுங்கின்மையாக இருந்திருக்கும். பாவம் செய்வதின் மூலம் துயரம் வருவதை கடவுள் தடுத்திருந்தால் அப்போது அனைவரும் விரும்பி பாவம் செய்திருப்பார்கள். துயரம் வந்திருக்காது.

ஆகஸ்டின் சொல்ல வருகின்றதின் சாரம்சம் என்னவென்றால் தீமையே இல்லாத உலகத்தை விடவும் சுயாதீன சித்தமுள்ளவர்கள் இல்லாத உலகை விடவும் சுயாதீன சித்தத்தோடுள்ளவர்கள் பாவம் செய்து தீமை அனுபவிக்கின்றவர்கள் உள்ள உலகம் சிறந்தது. ஏனென்றால் தீமையே இல்லாத உலகத்தில் மனிதர்களுக்கு சுதந்திரம் இருக்காது. அவர்களுக்கு நன்மை செய்ய சுதந்திரம் இருக்குமானால் அவர்களுக்கு தீமை செய்யவும் சுதந்திரம் இருக்கவேண்டும். சுயாதீன சித்தமில்லாதவர்கள் உள்ள உலகத்தில் அவர்கள் யாரும் பாவம் செய்ய மாட்டார்கள் - ஏனென்றால் அவர்களுக்கு தீமை செய்யும் வல்லமை இல்லை. ஒரு கல்லால் அசைய முடியாதது போல அவர்களால் தீமை செய்ய முடியாது. அவர்களுக்கு சுதந்திரம் என்று இருந்தால் அவர்களால் நன்மையையும் தெரிவு செய்ய முடியும், தீமையையும் தெரிவு செய்ய முடியும். நன்மை மட்டுமே செய்யக்கூடியவர்கள் என்று மனிதர்களை படைத்திருந்தால் அவர்களுக்கும் சுயாதீன சித்தம் (free will) *இல்லை.*

[32] *சீர்திருத்த இறையியலை* (reformed theology) *நம்புகின்ற ஜோன் கல்வின்* (John Calvin), *லுயிஸ் பர்க்கோப்* (Louis Berhkof), *வெயினி குருடம்* (Wayne Grudem) *போன்றவர்கள் கூட மனிதனுக்கு ஏதோ ஒரு விதத்தில் சுயாதீன சித்தம் இருக்கிறது என்று ஒத்துக்கொள்ளுகிறார்கள்* (Grudem, 1994). *குருடம் மனிதன் விரும்பியே தீர்மானம் எடுப்பதாக கூறியிருக்கிறார்* (Grudem, 1994). *கல்வின் மனிதனுக்கு தீமையையும் நன்மையையும் தெரிவு செய்யும் சக்தி இல்லை என்றும், ஆனால் தீமை செய்யும்போது அவன் அதை விரும்பியே செய்கிறான் என்றும் கூறுகிறார்* (Grudem, 1994). *ஆனால் தீமை செய்ய மட்டுமே மனிதனுக்கு சுதந்திரம் இருக்குமானால் அதை சுதந்திரம் என்று சொல்ல முடியாது. (கல்வின் சுயாதீன சித்தம் என்ற சொல்லை பாவிப்பதை அவ்வளவாக விரும்பவில்லை.) கல்வின் சில இடங்களில் சொல்லும் கருத்து சற்று முரண்பாடாகக்கூட சிலருக்கு தென்படலாம்: ஒரு இடத்தில் அவர் "மனிதன் நிர்ப்பந்தத்தினால் பாவம் செய்தாலும் அவன் சுதந்திரமாகவே பாவம் செய்கிறான்"* "man, while he sins of necessity, yet sins no less voluntarily" (Inst 1:309 [2.4.1], cited in (Grudem, 1994) *என்று சொல்லியிருக்கிறார். நிர்ப்பந்தத்தினால் பாவம் செய்கிறவன் சுதந்திரமாக எப்படி பாவம் செய்ய முடியும்? இரண்டும் உண்மையாயிருக்க முடியாது.*

கர்த்தர் மனிதனுக்கு சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறார். அதை அவன் பிழையாக பயன்படுத்தும் போது உலகில் தீமைகள் நடக்கின்றன. உலகில் தீமை மனிதனாலேயே வருகிறது, அவனுக்கு சுயசித்தம் (free will) இருப்பதினால், அவன் நன்மையை விட்டு தீமையை தெரிவு செய்ததினால் வருகிறது. மனிதனே தனக்கேற்பட்ட தீமைக்கு பொறுப்பேற்க வேண்டும். அவன் அன்று ஏதேன் தோட்டத்தில் தீமையை தெரிவு செய் திருக்காவிட்டால், இன்றும் நன்மையை விட்டு தீமையை தெரிவு செய்யாவிட்டால் உலகிலே துன்பம் இருக்காது. உலகில் நடக்கும் அனைத்தையும் கர்த்தர் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். ஆனால் தீமைக்கு அவர் காரணர் அல்ல.

உலகிலுள்ள தீமைக்கு காரணம் இயற்கை

உலகில் சில இயற்கை விதிகளும் செயற்கை விதிகளும் இருக்கின்றன. அவை மீறப்படும்போது தீமைகள் நடக்கின்றன. உதாரணமாக புவியீர்ப்பு சக்தி என்பது தேவன் படைத்த இயற்கை நியதி. நீருக்கு வழுக்கும் தன்மை இருப்பதும் இயற்கை நியதி. இது இரண்டும் இருப்பதினால் தான், வயதானவர்கள் குளியலறையில் வழுக்கி விழுகி றார்கள். அதனால் தான் உணவு தொண்டையில் அடைத்துக் கொள்ளும் போது நாம் தண்ணீரை குடிக்கிறோம். அதேநேரம் தரையில் உள்ள தண்ணீரில் சிறுபிள்ளைகள் வழுக்கி விழுந்து மண்டையை உடைத்துக் கொள்ளுகிறார்கள். தண்ணீர் குடிக்கும்போது வழுக்க வேண்டும் ஆனால் தரையில் இருக்கும்போது வழுக்கக்கூடாது என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது.[33]

செயற்கை விதிகளும் இருக்கின்றன. இடது புறத்தில் வாகனம் செலுத்த வேண்டும் என்பது அரசாங்கங்கள் ஏற்படுத்திய செயற்கை நியதி. அது மீறப்படும்போதும் நாம் பாதிக்கப்படுகிறோம். வலது புறத்தில் நாம் வாகனம் ஓட்டினால் விபத்துகள் ஏற்படுகின்றன.

நாம் அனுபவிக்கின்ற பாடுகளில் பலவற்றிற்கு தனி மனிதனுடைய நேரடியான செயற்பாடுகளே காரணம். ஆனால் இயற்கை அழிவுகளுக்கு யார் காரணம் என்று நாம் கேட்கலாம்.

[33] ஆனால் வேதத்தில் நடக்கும் அற்புதங்களில், சில நேரங்களில், இயற்கை விதிகளை கடவுள் மீறி நடக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சில இயற்கை அழிவுகள், சில மனிதருடைய மறைமுகமான செயற்பாடுகளால் நடக்கின்றன. காடுகளை கண்டபடி அழிக்கிறான் மனிதன் - தன்னுடைய இருப்பிடத்தை இழந்த யானை ஊருக்குள் வந்து மனிதர்களை வதம் செய்கிறது. நதிகளின் போக்கை மாற்றி அருவிகளை திசைதிருப்புகிறான் மனிதன். (யாரோ எழுதிய கவிதையை போல) மழை நீர் மனிதர்கள் அழித்த தனது நீரோடைகளை, குளங்களை தேடித்தேடி அலைகிறது. இதைத்தான் வெள்ளம் என்கின்றோம். சூழல் மாசடைவதாலும் உலகளாவிய ரீதியில் வெப்பம் அதிகரிப்பதினாலும் பல இயற்கை அழிவுகள் வருகின்றன. இது மனிதருடைய நீண்ட கால செயற்பாடுகளால் வருபவை.

சில இயற்கை அழிவுகள் மனிதனுடைய நேரடி செயற்பாட்டினால் நடக்கிறது. உதாரணமாக யாரோ காட்டிலே பற்றவைத்த தீ காட்டுத்தீயாக மாறிய கதைகள் பல உண்டு.[34]

ஆனாலும் மனிதருடைய செயற்பாடுகளின்றி நடக்கும் அழிவுகளும் உண்டு. விண்வெளியில் இருந்து கற்கள் விழுந்து உருவாகும் சுனாமி அதற்கு நல்ல உதாரணம். ஆனால் கடவுள் படைத்த உலகம் இப்படியானது அல்ல. அது நல்லதாகவே இருந்தது. கடவுள் படைத்த முதல் மிருகங்கள் மனிதனை தாக்குவதற்காக படைக்கப்படவில்லை. ஆதி மனிதன் செய்த பாவத்தினால் மனிதன் மட்டும் பாதிக்கப்படவில்லை. படைப்பும் சேர்ந்து பாதிக்கப்பட்டது (ரோம 8:19-21). அனைத்துமே பாவத்தின் விளைவாகவே நடக்கிறது. இயேசு மீண்டும் வந்து தமக்குள் மரித்தோரை உயிர்ப்பிக்கும்பொழுது படைப்பும் விடுதலைபெறும் (ரோம 8:21).

கொரோனா கர்த்தருடைய தண்டனையா?

நடக்கின்ற அனைத்து அழிவுகளும் பாவத்திற்கு தண்டனையாக கடவுள் கொடுத்தது என்று சொல்லிவிட முடியாது. ஆனால் வேதத்திலே பல இடங்களிலும் சீனாய் உடன்படிக்கைக்கு முன்பும் பின்பும் கடவுள் இயற்கை அழிவுகளினூடாக உலகை தண்டித்திருக்கிறார். சிலுவைக்கு முன்பும் பின்பும் கடவுள் உலகை தண்டித்திருக்கிறார். ஆகவே பாரிய அளவில் உலகையே உலுக்கும் அளவுக்கு வரும் அழிவுகள் கடவுள் உலகத்தின் கவனத்தை தன் பக்கமாக திருப்ப பாவிக்கும் ஒரு ஒலிபெருக்கி.

---

[34]https://www.nationalgeographic.com/environment/article/partner-content-a-world-on-fire.

உலகம் மிக வேகமாக சுற்றுகிறது, அதைவிட வேகமாக மனிதன் ஓடிக்கொண்டிருக்கிறான். அத்திவாரமே அசைந்தால் ஒழிய அவன் மனந்திரும்புவதில்லை. ஆணிவேரில் ஆட்டம் கண்டாலே ஒழிய அவன் ஆண்டவரை, தன்னைப் படைத்தவரை நினைத்துப் பார்ப்பதில்லை.

கொரோனா கர்த்தருடைய தண்டனையா என்று நிச்சயமாக நம்மால் சொல்ல முடியாது. ஆனால் வேதாகம படிப்பினைகளை கருத்திற்கொண்டு நாம் சிந்தித்தால் கோரோனா மனந்திரும்புவதற்கான ஒரு அறைகூவலாக இருக்க அதிக வாய்ப்புகள் உண்டு.

கர்த்தர் நேரடியாக அவருடைய தண்டனையாக கொரோனாவை உலகத்திற்கு அனுப்பியிருக்காவிட்டாலும் கூட கொரோனா அவருடைய அனுமதியின்றி உலகில் வரவில்லை. அவர் வேறுபக்கம் பார்த்துக் கொண்டிருக்கும் போது, கொரோனா கிருமி உலகில் ஓடி நுழைந்து விடவில்லை. ஆக உலகில் அவர் அனுமதித்ததிற்கு ஒரு காரணம் இருந்தே ஆகவேண்டும்.

இது மனிதர் மனந்திரும்புவதற்காக கர்த்தர் அனுமதித்தது ஆகவே மனந்திரும்புங்கள் என்று சொல்லும் போது பலர் திரும்பிப் பார்க்கலாம். கடவுளை விட்டு போனவர்களும், கடவுளை நம்பாதவர்களும், கடவுளோடு உறவு இல்லாதவர்களும் அவரைத் தேடி வரலாம். “அது தண்டனை அல்ல – நீங்கள் என்ன செய்தாலும் கடவுள் கண்டுகொள்ள மாட்டார்” என்று நாம் சப்பை கட்டு கட்டி விடும்போது, மற்றவர்கள் மனந்திரும்புவதற்கான நல்ல ஒரு வாய்ப்பை நாம் இல்லாமல் செய்கிறோம். கடவுள் ஒரு ஒலிபெருக்கியை வைத்து மனந்திரும்புங்கள் என்று அறைகூவிக் கொண்டிருக்கும்போது, நாம் “கடவுள் பொய் வதந்தியை பரப்புகிறார் யாரும் மனந்திரும்பத் தேவையில்லை” என்று நம்மால் முடிந்தவரை கத்திக் கொண்டிருக்கிறோம். ஒருவேளை நம்மில் அநேகர் மனந்திரும்பினால் நம்மீது இரக்கம் வைத்து கர்த்தர் கொரோனாவை சீக்கிரமே முடித்துவிட வாய்ப்புண்டு.

ஆகவே இதனால் சகலமானவர்களுக்கும் நாம் சொல்லிக்கொள்ள வேண்டியது என்னவென்றால் நாம் மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்பு வதைப்பற்றி பிரசங்கிக்க வேண்டும்.

கர்த்தருடைய வசனம் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தைப் போன்றது. அதை உரசி உரசி மொட்டையாக்கி விடக்கூடாது. கசக்கின்ற மருந்துகளுக்கு இனிப்பு முலாம் பூசுவதைப்போல, கூரான கர்த்தருடைய

வசனங்களின் வல்லமையை நாம் தவறாக பிரசங்கிப்பதன் மூலம் இல்லாமல் செய்து விடக்கூடாது.

கர்த்தருடைய சிட்சை

'கிறிஸ்தவர்களை கடவுள் தண்டிக்க மாட்டார். அவர்களை சிட்சிப்பார்' சிலர் என்று சொல்லுகிறார்கள். என்ன பெயர் வேண்டு மானாலும் சொல்லிக்கொள்ளுங்கள். இதனூடாக கர்த்தர் மனந்திரும்ப அழைக்கிறார் என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள்.

1 கொரி 11:32, எபிரே 12:5-12 போன்ற பகுதிகளை வைத்து பின்வரும் முடிவுகளை நாம் எடுக்கலாம்:

1. *கிறிஸ்தவர்களுக்கும் இவ்வுலகில் தண்டனை உண்டு. விசேஷமாக கிறிஸ்தவர்களுக்கு உலகில் தண்டனை உண்டு. அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதின் முக்கியமான பாகம் இந்த சிட்சை. நாம் நமது பிள்ளைகளை கண்டித்து திருத்துவதைப்போல கர்த்தரும் நம்மை கண்டிக்கிறார்.*
2. *விசுவாசிகள் மறு உலகில் நியாத்தீர்ப்பில் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படாதபடிக்கு இப்போதே கர்த்தரால் சிட்சிக்கப்பட்டு தண்டிக்கப்படுகிறார்கள். இதனை தண்டனை என்று நீங்கள் அழைத்தாலும் சரி சிட்ஷை என்று அழைத்தாலும் சரி, ஆனால் நிச்சயமாக இது விசுவாசிகளுக்கு உண்டு.*
3. *இந்த தண்டனைகளில் மரணமும் ஒன்று (1 கொரி 11:30). சில நேரங்களில் சிலர் மரித்திருக்காவிட்டால் முழு சபையுமே பாவத்தில் பாழாய்போய் விடக்கூடும்.*
4. *இந்த சிட்சையின் நோக்கம் நம்மை திருத்துவதும் பரிசுத்தப் படுத்துவதும் தான். நம்மை மட்டுமல்ல சபையையும் பரிசுத்தப் படுத்துவதும் கூட.*

மனம்திரும்பவேண்டும் என்று தண்டிப்பவரா கர்த்தர்?

வெளிப்படுத்திய விசேஷத்தில் பல இடங்களில் கர்த்தருடைய தண்டனை வருகிறது. ஆறாவது எக்காளம் ஊதப்படும்போது உலக ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் மரிக்கிறார்கள். அதில் அழியாமல் தப்பியவர்களைப்பற்றி பரிசுத்த ஆவியானவர் எழுதியிருக்கின்ற குறிப்பு நம்மை எச்சரிக்கிறது. "அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும்,

பொன் வெள்ளி செம்பு கல் மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளாயும் காணவும் கேட்கவும் நடக்கவுமாட்டாதவைகளாயுமிருக்கிற விக்கிரகங்களையும் வணங்காதபடிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளைவிட்டு மனந்திரும்பவுமில்லை தங்கள் கொலை பாதகங்களையும், தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை" (வெளி **9:20-21**). இவ்வளவு நடந்தும் மனிதர்கள் மனந்திரும்பவில்லை. ஏன்? அவர்களுடைய கல்மனம். அதுமட்டுமல்ல – கர்த்தர் தண்டிக்கமாட்டார் என்று பிரசங்கிக்கின்ற போதகர்களும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இதேபோலவே வெளி **15:8-9**இலும் கடும் உஷ்ணத்தை தாங்கிக்கொள்ள முடியாமலும் மக்கள் மனந்திரும்பாமல் தேவனுடைய நாமத்தை தூஷிக்கிறார்கள். **16:11**இலும் வருத்தங்களும் காயங்களும் வந்த போதும் அவர்கள் மனந்திரும்பாமல் பரலோகத்தின் கடவுளை தூஷிக்கிறார்கள். "தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்ப வில்லை." **16:20-21**இலும் கல்மழை பெய்தும் மக்கள் மனந்திரும்பாதது மட்டுமல்ல கடவுளுடைய நாமத்தையும் மீண்டும் தூஷிக்கிறார்கள்.

கடைசியாக 7 கலசங்கள் தேவதூதர்கள் கையில் இருக்க அவர்கள் அதை ஒவ்வொன்றாக பூமியின் மீது கொட்டுகிறார்கள். அந்த கலசங்களுக்கு யோவான் கொடுத்த அறிமுகம் இவ்வாறு இருக்கிறது: "அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது" (**15:1**). முடிகிறது என்பதை விட நிறைவேறுகிறது என்பது சரியான மொழிபெயர்ப்பு (BDAG). தேவன் தன்னுடைய கோபத்தை நிறைவேற்ற உலகத்தை தண்டிக்கிறார்.

அப்படியானால், மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக கர்த்தர் தண்டிப்பாரா? ஆம், நிச்சயமாக. அதிலிருந்து தப்பிக்க வேண்டுமானால், நாம் மனந்திரும்பவேண்டியது மட்டுமில்லாமல் மற்றவர்களையும் மனந்திரும்பச்சொல்லி போதிக்க வேண்டும்.

வெளிப்படுத்திய விசேஷத்தில் சொல்லியிருப்பது போலவே இக்காலத்திலும் மனிதர்கள் மனந்திரும்பியதாக தெரியவில்லை. மேலைத்தேய நாடுகளில் கொரோனாவின் தாக்கம் குறைந்து வருவதாலும், தடுப்பூசிகள் இருக்கின்ற தைரியத்திலும், **2021**ன் கோடை காலம்,

பாலுறவு மிகுந்த ஒரு காலமாக (summer of sex) மாறிவிடுமோ என்ற அச்சம் நிலவுகிறது. 2021 ஏப்ரல் மாதத்தில் ஆணுறை பாவனை முந்திய ஆண்டுகளை விட அதிகரித்துள்ளது.[35] *கிட்டத்தட்ட ஒரு வருடம் கொரோனாவால் தனியாக அடைபட்டு கிடந்தவர்களின் ஆசைகளை தூண்டி அதன் மூலம் அதிக லாபம் சம்பாதிக்கும் விதத்தில் சர்வதேச வியாபார நிறுவனங்கள் விளம்பரங்களை காட்ட ஆரம்பித்து ள்ளார்கள்.*[36] *இவர்களுடைய துர்நடத்தையினால் மீண்டும் இவ்வாறான அழிவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. "தங்கள் வேசித் தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை."*

வெளிப்படுத்தல் 15ம் 16ம் அதிகாரங்களில் வரும் சம்பவங்கள் சபை உலகை விட்டு எடுத்துக்கொள்ளப்பட்ட பின் நடப்பவை என்பதினால் இவ்வதிகாரங்கள் கொரோனா காலங்களுக்கு பொருந்தாது என சிலர் தவறாக கூறுகின்றனர். இவர்கள் வெளி 4ம் 5ம் அதிகாரங்களை வைத்தே சபை எடுத்துக்கொள்ளப்படுவதாக கூறுகிறார்கள். ஆனால் இவ்வதிகாரங்களில் சபை எடுத்துக்கொள்ளப்படுவதைப்பற்றிய நேரடி யான குறிப்புகள் எதுவும் இல்லை. அப்படியே சபை எடுத்துக் கொள்ளப் பட்டது என்று வைத்துக்கொண்டாலும் கூட, அதற்கு பின்னரும் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் உலகில் இருப்பதை வெளிப்படுத்தல் உறுதி செய்கிறது உ-ம்: 6:11. அப்படியானால் உலகில் விசுவாசிகளின் கூட்டமொன்று இருக்கின்ற போதும் கர்த்தருடைய கோபம் உலகில் வெளிப்படுகிறது என்பது தெளிவாகிறதல்லவா? இந்த அடிப்படையில் பார்க்கும்போது இது கொரோனா காலத்திற்கும் பொருத்தமானது தானே?

சாப்பிடாமல் அடம்பிடிக்கும் குழந்தைகளை தாய்மார் பயமுறுத்துவது போல கடவுள் தண்டிப்பார் என்று கூறி அவைரையும் பயமுறுத்துகிறீர்களா என்று சிலர் கேட்பதுண்டு. தண்டிக்கும் கடவுளைப்பார்த்து நீங்கள் பயப்படுகிறீர்களென்றால் தண்டிக்காத கடவுளைப்பார்த்து நான் பயப்படுகிறேன்! அப்படி ஒரு கடவுள் இருப்பதினால் என்ன பயன் இருக்கிறது? கடவுள் தண்டிக்காவிட்டால் உலகில் நீதி ஒழுங்கு எதுவுமே இருக்காது. போலீசார் இல்லாத

---

35 https://www.bbc.com/worklife/article/20210525-are-we-heading-towards-a-summer-of-sex
36 https://www.businessinsider.com/

பட்டணத்தை போல திருடர்கள் நிறைந்த இடமாய் வாழமுடியாத இடமாய் உலகம் மாறிவிடும்.

பயம் நல்லது – அநேகர் தேவனை தேடுவதும் பாரிய பாவங்கள் செய்யாமல் வாழ்வதும் இந்த பயத்தினால் தான். அதனால் தான் வேதமும் அவரை பட்சிக்கிற அக்கினியாக காட்டுகிறது. அடிக்கடி எச்சரிக்கிறது. அன்பு நிறைந்த ஆண்டவர் தண்டிக்கவும் செய்வார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

துயரங்கள் அனைத்தும் தண்டனைகளா?

பாவத்திற்கு தண்டனையாக கர்த்தர் இயற்கை அழிவுகள் கொள்ளை நோய்கள் போன்றவற்றை அனுப்புவது வேதாகம ரீதியானது தான் என்றாலும், நாம் அனுபவிக்கும் எல்லா துன்பங்களும் தேவனிடத்திலிருந்து தண்டனையாக வந்தவை என்று கூறிவிட முடியாது.

யோபின் கதை கூட நமது வாழ்வில் வரும் துயரங்கள் அனைத்தும் கடவுள் தண்டனையாக அனுப்பியது அல்ல என்பதை நமக்கு தெளிவாக காட்டுகிறது.

அவர் அனுப்பிய தண்டனை எது, அவர் அனுமதித்த சிட்சை எது என்பதும் நமக்குத் தெரியாது. நமக்கு ஏதாவது துயரம் வந்தால் நாம் செய்யவேண்டியதெல்லாம் நமது வாழ்வில் நாம் ஏதாவது பாவம் செய்திருக்கிறோமா என்று பார்த்துவிட்டு அவரில் இன்னும் அதிக விசுவாசத்தோடு வாழ்வதுதான்.

சிலுவையில் பாவம் தண்டிக்கப்பட்டதால் இனி மனிதருக்கு தண்டனை இல்லையா?

சிலர், இயேசு கிறிஸ்து மனிதருடைய பாவத்திற்கான தண்டனையை சிலுவையில் நம்முடைய ஸ்தானத்தில் அனுபவித்த படியானால், இனிமேல் யாரும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்று தவறாகக் கூறுகிறார்கள்.

சிலுவையில் இயேசு மனிதருக்காக மரித்தது உண்மைதான். ஆனால் அதை விசுவாசிக்காதவர்களுக்கு அதனால் எவ்விதமான பலனும் இல்லை. அதனால் தான் நரகம் என்றும் ஒன்று இருக்கிறது. இயேசு பாவங்களுக்கான தண்டனையை சிலுவையில் செலுத்தி தீர்த்துவிட்டார், ஆகவே நரகம் என்பது கூட தேவையில்லையே என்றும் நாம் பிழையாக வாதாடலாமே? சிலர் கிறிஸ்து சிலுவையில் மரித்தபடியினால் இப்போது தண்டனை இல்லை, கடைசி நாளிலேயே தண்டனை உண்டு என்று பிழையாக

வாதாடுகிறார்கள். கிறிஸ்து பாவங்களுக்கான தண்டனையை செலுத்தயிருந்தால் கடைசி நாளிலும் தண்டனை இருக்கக்கூடாது அல்லவா?

அதுமட்டுமல்ல. பாவத்தின் சம்பளம் மரணமே – சரீர மரணம் மட்டுமல்ல, ஆவிக்குரிய மரணமும் கூட. பாவத்தின் தண்டனையாக மரணம் இந்த உலகில் வந்தது. சிலுவையில் பாவம் தண்டிக்கப் பட்டபடியினால் இனி தண்டனை இல்லை என்று சொல்லுகின்றவர்கள் மனிதன் மரிக்கவும் கூடாது என்று சொல்ல வேண்டும்! ஆனால் இயேசு சிலுவையில் மரித்திருந்தாலும் கூட நாம் அனைவரும் மரித்தே ஆக வேண்டி இருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசிக்கின்றவர்களுக்கு சாவு ஒரு ஆதாயம். அதேவேளை இயேசு மீண்டும் வரும்போது, அவர்கள் உயிர்தெழுவதும் நிச்சயம்.

ரோமர் 2:6

சிலர் "உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளுகிறாயே" (ரோ 2:5) என்ற வசனத்தை வைத்துக்கொண்டு நியாயத்தீர்ப்பும் தண்டனையும் இப்போதில்லை – அது கடைசி நாளுக்காக சேர்த்து வைக்கப்படுகிறது என்று தவறாக வாதாடுகிறார்கள். கோபாக்கினை குவித்துக் கொள்ளப் படுகிறது என்பதினால் இப்போது யார் என்ன அநியாயம் செய்தாலும் அதை கடவுள் பொறுத்துக்கொள்ளுவார் என்று அர்த்தமில்லை. கர்த்தரு டைய கடைசி தண்டனை என்பது ஏற்கனவே அவர் ஆரம்பித்த ஒரு செயலின் முடிவேயாகும்.[37] அதுமட்டுமில்லாமல் ரோமர் 1:18இல் "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்தி லிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" என்று தெளிவாக கூறப்பட்டுள்ளதே! தேவனுடைய கோபம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று தெளிவாக சொல்லப் பட்டிருக்கிறதே? வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது என்பது கடந்த காலத்தில் ஏற்கனவே நடந்து முடிந்த சம்பவத்தை மட்டும் அல்ல தற்போதும் நடந்து கொண்டிருக்கின்ற ஒன்றை

[37] "God's final judgment is simply the end of a process already in train" (Dunn,1988), "…there is an anticipatory working of God's wrath in the events of history…For the present experience of wrath is merely a forestaste of what will come on that day of judgement" (Moo, 2018).

குறிக்கிறது (present tense). நாம் பார்த்தபடி, தேவன் தண்டித்த சம்பவங்கள் பல புதிய ஏற்பாட்டிலேயே இருக்கிறதே?

எதிர்காலத்தில் கோபாக்கினை நாளிலே கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளுகிறாயே என்ற வசனம் இப்போது கோபாக்கினை வெளிப்படாது என்ற எந்த வாக்குத்தத்தையும் தரவில்லை. ஆனால் தேவகோபம் வானத்தி லிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது தேவனுடைய கோபம் இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை தெளிவாக நமக்கு காட்டுகிறது. இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிற படியால் எதிர்காலத்தில் தேவகோபம் வெளிப்படாது என்றும் அர்த்தப்படாது. இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்படாத வசனங்கள் - அதை நாம் வீணாக பிரச்சனையாக ஆக்கிக்கொள்ளக்கூடாது.

உதாரணமாக ஒரு தகப்பன் தனது பிள்ளையைப் பார்த்து, உனக்கு 18 வயதாகியதும் நான் உனக்கு பணம் தருவேன் என்று கூறுகிறார். அதனால் இப்போது அவர் அந்த பிள்ளைக்கு பணம் கொடுக்க மாட்டார் என்று அர்த்தமா? அதேபோல இப்போது நான் உனக்கு பணம் தருகிறேன் என்று சொல்லுவதும் இனிமேல் உனக்கு பணம் தர மாட்டேன் என்று அர்த்தப்படாது அல்லவா?

மேலும் பவுல் 1ம் அதிகாரத்தில் புறஜாதியினரைப்பற்றியும் 2ம் அதிகாரத்தில் யூதர்களைப்பற்றியும் பேசுகிறார். 1:25ல் சொல்லப்பட்டுள்ள மக்கள் கூட்டம் படைப்பை வணங்குகிறது - யூதர்கள் பவுலின் காலத்தில் படைப்பை வணங்கவில்லை. யூதர்கள் புறஜாதியினரை நியாயந்தீர்த்தார்கள் (2:1), 2:10ல் யூதர்களை பட்டியலில் முதலாவதாக குறிப்பிடுகிறார்.

மேலும் பவுல் 1ம் அதிகாரத்தில்ஏற்கனவே இப்போது வெளிப்படுத்தப்படும் தேவகோபத்தைப்பற்றி கூறிவிட்டார். 2ம் அதிகாரத்தில் எதிர்காலத்தில் வெளிப்படுத்தப்படும் தேவகோபத்தைப்பற்றி பேசுகிறார்.

2ம் அதிகாரத்தில் கூறப்படுகின்ற நபர் இன்னமும் தேவனுடைய கோபத்தை அனுபவிக்கவில்லை. அவர் மற்றவர்கள் தண்டிக்கப்பட்டும் தான் தப்பிக்கொண்டேன் என்று நினைத்து தேவனுடைய பொறுமையை அசட்டை பண்ணுகிறார் (வச 4). அவரைப்பார்த்து தான் பவுல் எதிர்காலத்தில் தேவகோபம் வெளிப்படப்போவதாக கூறுகிறார்.

கிறிஸ்தவர்கள் தப்புவிக்கப்படாதது ஏன்?

கொரோனா காலத்தில் பல கிறிஸ்தவர்கள் அற்புத விதமாக காக்கப்பட்டுள்ள அதே வேளை, பல கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவ தலைவர்களும் இறந்திருக்கிறார்கள்.

மரித்தவர்கள் ஏன் மரித்தார்கள் என்ற காரணம் நமக்குத் தெரியாது. ஆனால் அதனுாடாகவும் கர்த்தர் ஏதாவது ஒரு நன்மையை வாய்க்கப்பண்ணுவார்.

சரித்திரத்தில் வந்த கொள்ளை நோய்களின்போதும் கர்த்தர் எல்லா கிறிஸ்தவர்களையும் அற்புதவிதமாக விடுவிக்கவில்லை. கிறிஸ்தவர்கள் மரணத்தின் வாசல் வரை சென்று பல நோயாளர்களை மீட்டு வந்ததை பார்த்து, அவர்களுக்கு இந்த துணிச்சல் எங்கிருந்து வந்தது என்று கேட்டவர்கள் பின்னர் இயேசுவை கர்த்தரென்று ஏற்றுக்கொண்டார்கள்.

கிறிஸ்தவர்களாக வாருங்கள் அப்பொழுது உலகில் நடக்கும் தீமை எதுவும் உங்களுக்கு நடக்காது என்று இயேசு வாக்குத்தத்தம் எதையும் கொடுக்கவில்லை. அப்படிகொடுத்திருந்தால் அனைவருமே கிறிஸ்தவர்களாக மாறியிருப்பார்கள். உலகிலேயே இலாபகரமான வியாபாரம் கிறிஸ்தவமாகத்தான் இருந்திருக்கும். ஆனால் இயேசுவோ இடுக்கமான வாசல் வழியாக வர நம்மை அழைக்கிறார்.

சிலுவை சுமந்த இயேசு நம்மையும் சிலுவை சுமக்க அழைப்பது ஆச்சரியமில்லை:

தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான் என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான் (மத் 10:39). ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் (மத் 16:25).

இயேசுவிடம் வாருங்கள் அப்போது துன்பம், துயரம், நோய்கள் யாவும் ஓடிப்போய்விடும் என்று நம்பிக்கை காட்டி யாரையாவது கிறிஸ்தவர்களாக அழைத்தால், அவர்கள் லேசான தடுமல் வந்தவுடன் கிறிஸ்துவை தூக்கி வீசிவிட்டு மீண்டும் பழைய வழிகளுக்கு போய் விடுவார்கள்.

இயேசு உலகில் வாழ்ந்த போது நோய்களை சுகமாக்கியது உண்மை. அப்படி சுகமடைந்தவர்களில் பலர் மனம்மாறி அவரை பின்பற்றி அவருடைய சீடர்களானதும் உண்மை. ஆனால் இயேசு எங்கேயாவது "என்னைப் பின்பற்றி வாருங்கள் அப்போது உங்கள் நோய்கள் எல்லாம் குணமாகும்" என்று கூறியிருந்தால் கட்டாயம் அதை எனக்குக் காட்டுங்கள். அவருடைய அறை கூவல், மனந்திரும்புங்கள் தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்பதே (மத் 4:17).

இயேசுவிடம் சுகத்தை பெற்றவர்களில் மனந்திரும்பாமல் போனவர்களும் உண்டு என்பதும் உண்மை. இயேசு குணப்படுத்திய 10 தொழு நோயாளர்களில் ஒருவனே திரும்பி வந்து தேவனை மகிமைப் படுத்தினான் (லூக்கா 17:11-19). சுகத்தை பெற்றுக்கொண்ட பின்பு மனந்திரும்பாமல் போனவர்களில் பழைய ஏற்பாட்டு பார்வோனும் ஒருவன்.

சக்கேயுவின் கதையில் எந்த நோயும் குணப்படுத்தப்படவில்லை. ஆனால் அவன் மனம்மாறினான். இரட்சிக்கப்பட்டான். இயேசுவின் பிரசன்னம் அவனுடைய ஆத்துமாவிற்கு மருந்தாக இருந்தது.

இன்றும் இயேசு கிறிஸ்து மக்களை குணப்படுத்துவதும் மரித்தோரை உயிரோடு எழுப்புவதும் உண்மை. அதை விசுவாசிப்போம். சுகத்தை பெற்றுக் கொள்ளுவோம். ஆனால் சுகம் கிடைக்காதபோதும் கூட அவரை விசுவாசிப்போம். கிறிஸ்து தரும் மகத்தான வாக்குத்தத்தம் மனந்திரும்பினால் நோய்கள் குணமாகும் என்பதல்ல – மனந்திரும்பினால் அவரோடு என்றும் நித்திய வாழ்வு கிடைக்கும் என்பதே (யோவான் 10:27-28). தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16, 36). அதுமட்டுமல்ல சமாதானத்தை தருவதாக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்: வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்தேயு 11:29). சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சாமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக (யோவான் 14:27).

ஒன்றை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் - இன்றும் தேவன் அற்புத விதமாக சரீர சுகமளிகிறார். ஆனால் எல்லோரும், எல்லா நேரங்களிலும் சுகப்படுவது கர்த்தருடைய சித்தமல்ல — அப்படியானால் உலகில் யாரும் இறக்கமாட்டார்கள். ஆகவே விசுவாசத்தோடு ஜெபிக்கும் போது சுகம் கிடைக்கின்ற அதேவேளை, சுகம் கிடைக்காத எல்லா சந்தர்ப்பங்களிலும் விசுவாசம் இல்லை என்ற முடிவுக்கு வந்து விட முடியாது. அப்படியானால் இரண்டுக்கும் வித்தியாசத்தை எப்படி கண்டுபிடிப்பது: விசுவாசம் இல்லாததினால் சுகம் கிடைக்கவில்லையா? அல்லது கடவுளுக்கு சித்தமில்லாததினால் சுகம் கிடைக்கவில்லையா? கண்டுபிடிக்க ஒரே ஒரு வழி தான் இருக்கிறது — தேவன் மீது கண் மூடித்தனமான விசுவாசத்தோடு ஜெபியுங்கள்! சுகம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் கர்த்தரை நம்புங்கள். விசுவாசத்தோடு ஜெபியுங்கள் - கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்பார்.

எந்த வியாதியில் இருந்து என்ன சுகம் கிடைத்தாலும், கடைசியில் நாம் எல்லோரும் நோய்வாய்ப்பட்டோ வேறு விதத்திலோ மரிக்கப் போவது உறுதி. ஆனால் நாம் நம்பிக்கையற்றவர்களாக மரிக்காமல், நோய்களை குணமாக்க மட்டுமல்ல, நமக்கு நித்திய ஜீவனை தருவதற்கும், கடைசி நாளில் நம்மை உயிரோடெழுப்பி, நமக்கு அழிவில்லாத ஒரு புதிய சரீரத்தை தருவதற்கும் வல்லமையுள்ள கர்த்தரை நம்பியவர்களாக மரிப்போம். நாம் மரிக்கவே மாட்டோம் என்பதல்ல நமது விசுவாசம். மரித்தாலும் கர்த்தருடன் உயிர்ப்போம் என்பதே நமது விசுவாசம். இந்த நம்பிக்கையே கிறிஸ்தவத்தின் அடிப்படை. மரித்தாலும், நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் மரிப்போம்.

91ம் சங்கீதம்

"ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது" என்று தேவ வசனம் சொல்லியிருக்க பல நல்ல கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவ தலைவர்களும் மரித்தது ஏன் என்று நாங்கள் கேட்கலாம்.

*அப்படியானால் **91**ஆம் சங்கீதம் நோயற்ற ஒரு வாழ்வையும் சாகா வரத்தையும் தருவதாக வாக்குக்கொடுக்கிறதா? நிச்சயமாக இல்லை. "நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி" என்று வருகிறதே தவிர சாகா வரம் என்று வரவில்லை. அதாவது கடவுள் நமக்கு நீடித்த நாட்களை*

கொடுப்பார். அதற்காக நாம் மரிக்காமல் சதா வாழுவோம் என்று அர்த்த மல்ல. நீடித்த நாட்கள் என்பதும் ஒப்பீட்டு ரீதியானதே. கர்த்தர் உலகில் உங்களுக்காக வைத்திருக்கும் நன்மைகளை அனுபவிக்காமல், அவருடைய அழைப்பை நிறைவேற்றாமல் நீங்கள் நிச்சயம் மரிக்கமாட்டீர்கள். நம்மு டைய வாழ்விலும் கர்த்தர் நம்மோடு இருந்து நம்மை பாதுகாப்பார். ஆனால் கடைசியில் நாம் எப்படியோ மரிக்க வேண்டும் என்பதை மறக்கக்கூடாது.

91ஆம் சங்கீதத்தில் "உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்" (வ. 12) என்ற வசனத்தை சாத்தான் இயேசுவிடம் கூறி அவரை தேவாலயத்து உப்பரிகையில் இருந்து கீழே குதிக்கத் தூண்டினான். அப்படி குதிக்க மறுத்த இயேசு, அதற்கு பதிலாக என்ன செய்தார் என்பது முக்கியமானது. அவர் வேதத்தின் மற்ற பகுதிகளை சாத்தானுக்கு சுட்டிக் காட்டினார். நாமும் சங்கீதம் 91 இருக்கிறதே என்று கண்டபடி குட்டிக்கரணம் அடிக்கக் கூடாது. அப்படி செய்தால் நமக்கும் சாத்தானுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்! நாம் சங்கீதங் களையும் சரி, வேதப் புத்தகங்களையும் சரி முழுவதுமாக வாசிக்க வேண்டும். கிறிஸ்தவர்களும் துன்பப்படுவார்கள் என்பதற்கு வேதத்தின் மற்ற பகுதிகளில் போதுமானளவு ஆதாரங்கள் இருக்கின்றன. 91ஆம் சங்கீதம் இருக்கின்ற அதே பைபளில் தான் எபிரேயர் 11ஆம் அதிகாரமும் இருக்கிறது. அதிலே விசுவாசத்தினாலே சிங்கங்களின் வாய்களை அடைத்தவர்களைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது, விசுவாசத்தோடு வாளால் வெட்டப்பட்டு இறந்தவர்களைப்பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. வாளால் வெட்டப்பட்டு இறந்தவர்கள், மேலான ஒரு உயிர்த்தெழுதலை, கடைசி நாளில் இயேசு கிறிஸ்துவில் விசுவாசிக்கின்ற உங்களுக்கும் எனக்கும் இருக்கின்ற உயிர்த்தெழுதலை நம்பினார்கள். இருவருக்குமே விசுவாசம் இருக்கிறது. இருவருமே கிறிஸ்தவர்கள் தான். இரண்டுமே கிறிஸ்தவ அனுபவம் தான்.

விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்ட யக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள் யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்

தார்கள். ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந் திருக்கப் பெற்றார்கள் வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள் வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள் கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித் தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத் தையும் அநுபவித்தார்கள்.

நாம் வணங்கும் தெய்வம்
கொரோனாவை விட
பலம் வாய்ந்தவர். நம்மை
விடுவித்து காக்கும்
வல்லமை உடையவர்

8 நடைமுறை ஆலோசனை

வருமுன் காப்போம்

கொரோனா வருவதை தடுக்க நம்மால் ஆன முன்தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இயன்றவரை வீட்டிலேயே இருங்கள். மற்றவர்களுடன் பழக வேண்டி வந்தாலும் சிறிதளவு நேரமே அவர்களுடன் செலவழியுங்கள். மற்றவர்களை திறந்த வெளி இடங்களில் சந்தியுங்கள். வெயிலோட்டமும் காற்றோட்டமும் அதிகமாக இருக்கின்ற இடங்களில் நோய் தொற்றம் வாய்ப்புகள் குறைவு.

சோப்(சவர்க்காரம்) போட்டு கைகழுவுதல், முகக்கவசம் அணிதல், 2 மீட்டர் இடைவெளியைப்பேணுதல், ஜன நெரிசல்களை தவிர்த்தல் போன்ற அடிப்படை விஷயங்களை கடைபிடியுங்கள்.

வருமுன் காக்கும் நடவடிக்கைகளை எடுங்கள். கர்த்தர் நமது உடல்களை நோய் எதிாப்பு சக்தியோடு படைத்திருக்கிறார். அவைதான் நம் உடலுக்குள் வரும் கிருமிகளை தாக்கி அழிக்கின்றன. சில விதமான கிருமிகளை அழிக்க உடலில் இருக்கும் நோயெதிர்ப்பு சக்திக்கு வீரியம் போதாது. எனவே, அந்த நோய் எதிர்ப்பு சக்தியை பெருக்கிக்கொள்ள நல்ல உணவுகளை உட்கொள்ளுங்கள். மருத்துவ ஆலோசனைப்படி விட்டமின்களை எடுங்கள். தேநீர் (black tea or plain tea) மற்றும் மூலிகை மருந்துகள் குடிப்பது உடலுக்கு நன்மை பயக்குமெனில் அதையும் மருத்துவ ஆலோசனை பெற்று அளவோடு, சக்கரை குறைவாக குடியுங்கள்.

தடுப்பூசிகளை தவறாது நமது பிள்ளைகளுக்கு தகுந்த மருத்துவ ஆலோசனையின்படியே நாம் வழங்க வேண்டும் - இது நமது தலையாய கடமை. தடுப்பூசிகளைப்பற்றி பயம் இருந்தால் முதலில் மருத்துவரிடம் சென்று பரிசோதனைகளை செய்து (medical check up) அதன் பின்பு தடுப்பூசி போட்டுக்கொள்ளுங்கள்.

உடற்பயிற்சி செய்யுங்கள். மனைவியுடன் சேர்ந்து வேகமாக நடங்கள் (jogging). நடக்கும் போது கைகளை கோர்த்து, மனங்களை திறந்து, வாய்களை மூடிக்கொண்டு (!) நடப்பது நல்லது. வீட்டில் இருக்கும்போது ஓவியந்தீட்டல், கவிதை, கட்டுரை எழுதுதல், நல்ல கிறிஸ்தவ புத்தகங்களை வாசித்தல், நல்ல கிறிஸ்தவ படங்களைப்பார்த்தல், பாடல்களைக்கேட்டல் என்று மனதை ஆரோக்கியமாக வைத்திருங்கள்.

கொரோனா வந்தால் - பயப்படாதிருங்கள்!

வேதத்தில் அதிகமாக சொல்லப்பட்ட கட்டளையை மீண்டும் சொல்வது அவசியமாகிறது. பயப்படாதிருங்கள்! கொரோனா வந்தவர்களில் 2 சதவீதமானவர்களே மரித்திருக்கிறார்கள். அதுவும் அவர்களுக்கு மற்ற நோய்களும் இருந்திருக்கின்றன. மற்றபடி கொரோனா வந்தவிட்டதே என்று பயந்து விடாதீர்கள். நோய்களை விட பயம் நம்மை கொல்லும் வல்லமை கொண்டது. நோயினால் மரித்தவர்களை விட பயத்தினால் மரித்தவர்களும் உண்டு. எது நடந்தாலும், கர்த்தரை விசுவாசித்து அதை நிதானத்தோடு கையாளப் பழகிக்கொள்ளவேண்டும்.

நாம் வணங்கும் தெய்வம் கொரோனாவை விட பலம் வாய்ந்தவர். நம்மை விடுவித்து காக்கும் வல்லமை உடையவர். அவரை விசுவாசிப்போம். அவரே நமக்கு கதி, அவரே நமக்கு ஜீவன். நாம் இருந்தாலும், இறந்தாலும் இவ்வுலகிலும் மறு உலகிலும் அவரே நமக்கு ஆறுதலும் நம்பிக்கையுமானவர். கொரோனா கிறிஸ்துவிடம் உங்களை நடத்தட்டும். கொரோனாவின் கொடுமை கிறிஸ்துவின் கிருபையை நோக்கி உங்களை தள்ளட்டும். எதுவும் அவருடைய அன்பைவிட்டு விலக்க இடம்கொடுக்காதிருங்கள்.

உலகெங்கிலும் கிட்டத்தட்ட 176 மில்லியன் அல்லது 17.6 கோடி மக்களுக்கு கொரோனா நோய் வந்திருக்கிறது.[38] அதில் 16 கோடி மக்கள் குணமாகி விட்டார்கள். மரித்தவர்கள் போக மற்றவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஆகவே நம்பிக்கைக் கொள்ளுங்கள். நோய் வந்தவர்களில் 0.6 சதவீதமானவர்களையே கொரோனா மோசமாக பாதித்திருக்கிறது. மற்றவர்களை அத்தனை மோசமாகப் பாதிக்கவில்லை. ஆகவே கொரோனவைப் பார்த்து பயப்படாதிருங்கள்.

காய்ச்சல் போன்ற அறிகுறிகள் வந்த உடனேயே மருத்துவ உதவியை நாடுங்கள். வீட்டில் கொரோனா நோயாளியை வைத்திருப்பது ஆபத்தானது – ஆனால் வேறு வழியின்றி வைத்திருக்க நேரிட்டால் அவரை காற்றோட்டமுள்ள தனியறையில் வைத்து ஏற்ற மருத்துவ ஆலோசனையைப்பெற்று பராமரியுங்கள். சில பொதுவான ஆலோசனைகளை உலக சுகாதார ஸ்தாபனத்திடம் பெற்றுக்கொண்டு பின்பற்றுங்கள்.[39]

---

[38] ஜீன் 14ஆம் திகதி 2021 வரையான தரவுகள் https://www.worldometers.info/coronavirus/

[39] https://www.who.int/emergencies/diseases/novel-coronavirus-2019/advice-for-public

நீங்கள் கர்ப்பமாக இருந்தாலும் கவலைப்படாதிருங்கள். கர்த்தருடைய பாதுகாப்பு நமக்கிருக்கிறது. தகுந்த மருத்துவ ஆலோசனைகளை முன்கூட்டியே பெற்று கவனமாக இருங்கள். கைக்குழந்தைகள் நோய்வாய்ப்பட்டால் அவர்களை பராமரிப்பது எப்படி என்பதையும் முன்பே அறிந்து வைத்திருங்கள். கொரோனா வராது என்ற நம்பிக்கையுடன் தைரியமாக இருங்கள் - ஆனால் அப்படி வந்துவிட்டால் என்ன செய்யவேண்டும் என்பதை கேட்டறிந்து வைத்திருங்கள்.

சபை கூடுதலை யார் விட்டது?

கொரோனா காலத்திலும் அரசாங்க உத்தரவை மீறி சிலர் ஆராதனைகளையும் சபைக் கூட்டங்களையும் நடத்துகிறார்கள். சபைக் கூட்டங்கள் மூலமும் கொரோனா சில இடங்களில் பரவியது நாம் அறிந்ததே.

ஒன்றை நாம் நினைவில் கொள்ளவேண்டும் - இங்கே அரசாங்கம் கிறிஸ்தவத்திற்கெதிராக செயற்படவில்லை. கொரோனா வேகமாக பரவுவதைத் தடுக்க தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்கிறது. சபைக் கூட்டங்களை மட்டும் அரசாங்கம் தடைசெய்யவில்லை. அனைத்து கூட்டங்களையும் தடை செய்துள்ளது. கர்த்தரை ஆராதிப்பது பிழை என்பதற்காக அல்ல. கொரோனா கொடூரமானது என்பதற்காகத் தான். இவ்வாறான சந்தர்ப் பங்களில் நாம் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும். கிறிஸ்தவர்களால் தான் கொரோனா பரவியது என்ற கெட்ட பெயர் நமக்கு வரக்கூடாது. கிறிஸ்தவர்களை குறைசொல்ல உலகம் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கிறது. அதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. இந்த சந்தர்ப்பத்தை பாவித்து கிறிஸ்தவர்களைப் பற்றியும் கிறிஸ்தவத்தைப் பற்றியும் நற்பெயரை நாம் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். நம்முடைய நற்சாட்சியை புறஜாதிகள் கண்டு தேவனை மகிமைப்படுத்தும்படி நாம் நடந்து கொள்ளவேண்டும்.

நோயினால் மரித்தவர்களை விட பயத்தினால் மரித்தவர்களும் உண்டு.

சபையை மூடிவிட்டேன் பார்த்தீர்களா என்று சாத்தான் கேட்பதாகவும், ஒரு சபை இருந்த இடத்தில் நூறு (வீட்டு) சபைகளை

திறந்தேன் என்று கர்த்தர் பதில் சொல்லுவதாகவும் வந்த கார்ட்டூனை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இணையத்தில் (internet) சபை இணைந்தது. ஒன்லைனாக ஆராதனை நடந்தது. இருக்கின்ற வசதிகளை நாம் கடவுளுக்காக பாவிக்கவேண்டும். ஒரு பெரிய ஆராதனையை ஒன்லைனில் நடத்துவது மட்டுமில்லாமல், சிறு சிறு குழுக்களாக நாம் ஒன்று சேர வேண்டும்.

அரசாங்கம் கொரோனாவை கருத்திற்கொண்டு சபைகளை மூட சொன்னால் அதற்கு கீழப்படியாமல் நாம் ஆராதனை நடத்தினால், நாம் கடவுளுக்கெதிராக பாவம் செய்கிறோம். ஏனென்றால் அதிகாரங்களை ஏற்படுத்தியவரும் அவற்றிற்கு கீழ்ப்படிய சொன்னவரும் கர்த்தரே. கொரோனா பரவுவதற்கும் காரணமாகிறோம். அதன் மூலம் யாரும் மரித்தால் அதற்கும் நாம் கணக்குச் சொல்லவேண்டும்.

அதுவும் ஒன்லைனில் நாம் ஆராதிக்க போதுமானளவு சந்தர்ப்பம் இருக்கின்றபடியால் நாம் வீணாக அடம்பிடிக்கக்கூடாது. காலங்கள் பொல்லாதவைகளாக இருக்கின்றன – ஞானமாக நடந்து காலங்களை பிரயோஜனப்படுத்தி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தை குறை கூறிக்கொண்டிருக்காமல் ஒருவருக்கு ஒருவர் புத்தி கூற வேண்டும். ஒருவரை ஒருவர் உற்சாகமூட்டுங்கள். காலத்தின் தேவை இது. புதுப்புது வழிகளில் ஊழியம் செய்ய முயற்சி எடுங்கள். இன்டர்நெட்டில் (இணையத்தில்) பல ஊழியங்களை ஆரம்பியுங்கள். தொடர் ஜெபக்கூட்டங்களை ஆரம்பியுங்கள்.

வீட்டுக்கு வீடு – குடும்பத்தில் குழப்பம்!

கொரோனா காலத்தில் வீட்டிலேயே அடைபட்டு கிடக்கும்போது இல்லறத்தில் இடறல்களும், வீட்டில் விரிசல்களும் ஏற்பட வாய்ப்புண்டு. சில குடும்பங்களில் சண்டைகள் அதிகரித்து விவாகரத்து வரை போனதாகவும் அறிகிறோம்.[40] *ஒருநாளில் சில மணித்தியாலங்கள் ஒன்றாக வீட்டில் இருக்கும்போதே பல சண்டைகள், இப்போது 24 மணிநேரமும் வீட்டில் ஒன்றாக இருக்கும்போது இன்னும் பல பிரச்சனைகள் வருகின்றன. ஏற்கனவே இருந்த பல*

[40] https://www.bbc.com/worklife/article/20201203-why-the-pandemic-is-causing-spikes-in-break-ups-and-divorces

பிரச்சனைகளை - தீர்க்கப்படாத பல முடிச்சுகளை – கொரோனா வெளிக்கொண்டு வந்திருக்கிறது.

பேதுரு குடும்பங்களுக்கு கொடுத்த (1 பேதுரு 3:1-7) ஆலோசனை மிகவும் பயனுள்ளது:[41]

“அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடுகூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப் படுத்திக்கொள்ளப் படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள் நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள். அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயி ருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களான படியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.”

எதற்கெடுத்தாலும் சண்டை பிடிக்கக்கூடாது

பெண்கள் ஆண்களுக்கு சமமானவர்கள் - ஆண்களுக்கு சமமாக நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளப் போகிறவர்கள் (1 பேதுரு 3.7). ஆனாலும் தேவன் குடும்பங்களில் கணவர்களை தலைவர்களாக நியமித்திருக்கிற படியால் மனைவிகளை கீழ்ப்படியுமாறு கூறுகிறார்.

[41] இப்பகுதியில் சில வசனங்கள் ஆசிரியரின் “அழைப்பை நோக்கி: 1 பேதுரு விளக்கவுரை” என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது.

எல்லா இடங்களிலும் தலைமைத்துவம் என்று இருப்பது சகஜம் தானே? அலுவலகங்களிலும் சரி, சபையிலும் சரி, தலைவர் என்று ஒருவர் இருக்கத்தானே வேண்டும்? அனைவருடைய கருத்துக்களையும் கேட்டாலும், கடைசியில் ஒருவர் தீர்மானிப்பது இங்கெல்லாம் நடக்கின்ற ஒன்றல்லவா? குடும்பம் என்று வருகின்றபோது மட்டும் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பது சரியல்ல. இன்று குடும்பங்களில் உள்ள அநேக பிரச்சனைகளுக்கு காரணம் தலைமை தாங்காத கணவர்களும், தலைமைக்கு கீழ்ப்படியாத மனைவிகளுமே. அநேக தாய்மார் தங்கள் பிள்ளைகள் தங்களுக்கு கீழ்ப்படிவதில்லை என்று முறையிடுகிறார்கள். இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? ஒரு மனைவி தனது கணவனுக்கு கீழ்ப்படியாமல் சதா சண்டை பிடிப்பதை பார்க்கும் பிள்ளைகள், தாங்களும் அதிகாரத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்ய ஆரம்பிக்கிறார்கள். தாய்மாருக்கு கீழ்ப்படியாமல் போகிறார்கள். கணவனுக்கு கீழ்ப்படிந்து (சண்டை பிடிக்காமல்) நடந்து பாருங்கள். அப்போது உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு கீழ்ப்படியும்.

மனைவிகளின் நடத்தையை வர்ணிக்க பேதுரு இரு சொற்களை பாவிக்கிறார்-"பயபக்தியோடுகூடிய உங்கள் கற்புள்ள நடக்கை". கணவனைப்பார்த்து பயந்து நடுங்குங்கள் என்று பேதுரு சொல்லவில்லை! அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுங்கள் என்றே கூறுகிறார். இரண்டும் இருக்க வேண்டும் - கணவனுக்கு மரியாதையும் இருக்கவேண்டும் அவனுக்கு விசுவாசமாயும் நடக்க வேண்டும்.

சில நேரங்களில் ஊழியம் செய்யும் பெண்கள் வீட்டில் பெற்றாருக்கோ கணவனுக்கோ கீழ்ப்படிவதில்லை. வெளியில் ஊழியக்காரி களாகவும், வீட்டில் புரட்சித் தலைவிகளாகவும் இருக்கிறார்கள். ஒரு கதையில் தனது ஊழியத்தில் நல்ல பலனை கண்ட மனைவி தன் கணவனிடம் சொல்லுகிறாள்: "பாருங்கள் நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கடவுள் என்னை ஏற்றுக்கொண்டு எனது ஊழியத்தை ஆசீர்வதித்திருக்கிறார்." இந்த வசனம் பல உண்மைகளை நமக்கு கற்றுத்தருகிறது. அநேகர் ஊழியம் செய்வதற்கு ஒரு காரணம் தங்கள் கணவரிடத்திலும் குடும்பத்திலும் கிடைக்காத அங்கீகாரத்தை ஊழியத்திலாவது பெற்றுக்கொள்ளத்தான். காலப்போக்கில் ஊழியத்தில் அவர்கள் சந்திக்கும் ஒரு ஆணுடன் தகாத உறவு வருவதற்கும் இதுவே காரணமாகிறது. கணவனிடத்தில் கிடைக்காத

அங்கீகாரத்தை மற்றவர்களிடத்தில் தேடுகிறார்கள். இந்த நிலை ஊழியத்தில் இருக்கும் ஆண்களுக்கும் ஏற்படலாம்.

சாந்தமும் அமைதலுமான ஆவி உங்களிடத்தில் இருப்பதை கர்த்தர் விரும்புகிறார். அது தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. சிலநேரங்களில் நாம் மனிதரைப் பிரியப்படுத்துவதை குறிக்கோளாக வைத்து செயற்பட்டால் மனிதரையும் பிரியப்படுத்த முடியாது – தேவனையும் பிரியப்படுத்த முடியாது. ஆனால் நாம் தேவனைப் பிரியப்படுத்த முயற்சிக்கும்போது தேவனையும் பிரியப் படுத்துவோம், மனிதரையும் பிரியப்படுத்துவோம். ஏனென்றால் அமைதியும் சாந்தமும் உள்ள ஆவி தேவனுடைய பார்வையில் மட்டுமல்ல – கணவன்மாருடைய பார்வையிலும் விலையேறப்பெற்றது! ஒரு மனைவி அழகான ஆடைகளும், விலையேறப்பெற்ற நகைகளும் அணிந்திருப் பதைவிட சாந்தமாக இருப்பதே குடும்பத்திற்கு பயனுள்ளது. தொட்டதிற் கெல்லாம் சண்டை என்று பெண்கள் இருக்கக்கூடாது. ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது சண்டை பிடித்தால் தான் சந்தோஷமான வாழ்க்கை அமையும் என்று சில மனைவிகள் தவறாக நினைக்கிறார்கள்! அநேக குடும்பங்களில் அமைதியில்லாமல் இருப்பதற்கான காரணம் எதற் கெடுத்தாலும் சண்டை பிடிக்கும் குணம் தான். நம்முடைய பிள்ளைகளுக்கு நாம் கொடுக்கக்கூடிய ஒரு பெரிய கொடை சண்டையில்லாத ஒரு நாள் தான்! அந்த நாளை ஒவ்வொருநாளும் நாம் நமது பிள்ளைகளுக்கு கொடுப்போம்!

கணவன்மாரும் வீட்டில் அடைபட்டு கிடக்கும்போது நாம் எதைப்பேசுகிறோம் என்பதைக்குறித்து கவனமாய் இருக்கவேண்டும். நம்முடைய எரிச்சலையும் கோபத்தையும் மனைவி பிள்ளைகள் மீது காட்டக்கூடாது.

மனைவிகளை அன்பு செய்யவேண்டும் - இது உணர்ச்சிகளோடு சம்பந்தப்பட்டது. மனைவிகளோடு விவேகத்தோடு வாழ வேண்டும் - இது அறிவோடு சம்பந்தப்பட்டது. மனைவிகளோடு பழகும்போது, உணர்ச்சி வசப்பட்டு கோபப்படாமல், அவர்கள் பலவீனமானவர்கள் என்பதை நினைவில் வைத்து அறிவுபூர்வமாக நடந்து கொள்வது இல்லற வாழ்வில் அமைதியை பேண உதவும். பதிலுக்கு பதில் செயயாமல் இருக்க உதவும். அறிவு ஆண்களை ஆளட்டும் என்று பேதுரு அறிவுரை கூறுறார்.

“உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து” என்று மனைவிகளுடன் பழகுவதைப்பற்றி பேசிய பேதுரு சம்பந்தமே இல்லாமல் ஜெபத்தைப்பற்றி பேசுகிறாரே என்று நாம் யோசிக்கலாம். ஜெபத்திற்கு மிகவும் தடையாக இருக்கின்ற விஷயம் - கசப்பு. மனதிலிருக்கும் கசப்பி னிமித்தம் நாம் தேவனுடன் ஒப்புரவாக முடியாமல் போகலாம். மற்றவர்களை மன்னிக்க முடியாமல் தேவனிடத்தில் மன்னிப்பை கேட்பது பொறுத்தமற்றது. இது நம்மெல்லாருக்கும் இருக்கும் மிகப் பெரிய போராட்டம். தொலை தூரத்தில் தள்ளி இருப்பவர்களை விட, தினந்தோறும் நம்முடனே கூட இருந்து – நம்முடைய மனைவியையோ ,கணவனையோ போல – தினமும் நம்மை வெறுப்பேற்றுகின்றவர்களை மன்னிப்பது கஷ்டமாய் இருக்கிறது. இந்நிலையில் நம்மை கர்த்தர் மன்னிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். எந்தவொரு மனிதனும் தன் வாழ்நாள் முழுதும் நமக்கெதிராக செய்யமுடியாத தவறுகளை நாம் ஒரே நாளில் கடவுளுக்கெதிராக செய்கிறோம் (Watson, 1692, 1965). இதை நாம் உணர்ந்து கொள்வது மற்றவர்களை மன்னிக்க உதவும்.

ஆண்களுக்கும் கணவன்மாருக்கும் ஒரு பலத்த எச்சரிக்கையை தேவன் கொடுக்கிறார். மனைவியை கனம் பண்ணாதவனுடைய ஜெபத்தை தேவன் கனம் பண்ண மாட்டார்.

ஒன்றாக சேர்ந்து ஜெபிக்கும் குடும்பங்கள் ஒற்றுமையாக வாழும் என்று ஒரு வாய்மொழி இருந்தாலும், அநேக குடும்பங்களில் குடும்ப ஜெபம் இல்லாமல் இருப்பதற்கான ஒரு காரணம் ஜெபத்தினூடாக ஒருவரை ஒருவர் பழிவாங்கப் பார்ப்பதே. ‘ஆண்டவரே இவர் கோபமாக கதைக்கிறார். இவருடைய கோபத்தை கட்டுப்படுத்த இவருக்கு உதவி செய்யும்’ என்று ஜெபிப்பது போல் துணைவருக்கு ஆலோசனை சொல்வதை நாம் நிறுத்த வேண்டும்! இல்லாவிட்டால் ‘குடும்ப ஜெபம்’ குடும்பத்தை கட்டியெழுப்புகின்ற இடமாக இல்லாமல், உறவுகளை உடைக்கின்ற ஒரு இடமாக மாறிவிடும்.

பேதுரு குடும்பத்தை ஒரு குட்டி சபையாகவே பார்க்கிறார். சபைகளில் அமைதி இருக்கவேண்டுமானால் குடும்பங்களில் அமைதி இருக்கவேண்டும். குடும்பங்களிலே ஒழுங்கு இல்லாத போது

சபையிலும் ஒழுங்கு இல்லாமல் போகிறது. ஒரு குடும்பம் உடைகின்ற போது பல சபைகள் உடைவதற்கு அது வழிகோலுகிறது. ஒரு கதையிலே கணவனை விட்டுப்பிரிந்த மனைவி பல சபைகளைச் சேர்ந்த பல ஊழியக்காரர்களுடன் கள்ளத்தொடர்பில் ஈடுபடுகிறாள். பல ஊழியங்கள் உடைவதற்கும் பலனற்று போவதற்கும் அவள் காரணமாகிறாள். ஆகவே, ஒரு குடும்பத்தின் அழிவு பல சபைகள் அழிவதற்கு காரணமாகிறது.

சிலருக்கு எப்படிச் சொன்னாலும் சில விஷயங்கள் புரியாது. அவர்களுக்கு புரியும்படி சொல்ல முயற்சியுங்கள். அல்லது அவர்களை நன்றாக புரிந்து கொண்ட ஒருவரை வைத்துப் பேசுங்கள். எதையும் அவர்களுடைய பக்கத்தில் இருந்து பாருங்கள். எதையும் செய்யும்போது அவர்களுக்கு என்ன நன்மை இருக்கிறது என்று அவர்களுடைய கோணத்திலிருந்து அவர்களுக்கு புரியும் வகையில் வழிகாட்டுங்கள்.

மற்றவர்கள் பசியோடு வாடும்போது நீங்கள் ஐ போன் வாங்குவது அநியாயம்.

கைகளின் பலன் – தொழிலும் வியாபாரமும்

கொரோனா காலத்தில் பலருடைய வருமானம் வெகுவாக பாதிக்கப்பட்டது. இக்காலங்களில் நம்முடைய தொழிலை தக்கவைப்பது எப்படி? வருமானத்தை காத்துக்கொள்வது எப்படி? என்று பலரும் சிந்திக்கத்தொடங்கியுள்ளனர்.

கர்த்தர் நல்லவர் நம்மை கைவிடமாட்டார். பஞ்ச காலத்திலும் நம்மைப் போஷிக்க வல்லவர். ஈசாக்கு பஞ்ச காலத்திலே அறுவடை செய்ததை கர்த்தர் ஆசீர்வதித்தார். அநேகருடைய வாழ்விலே கொரோனா காலத்திலும் கர்த்தர் அற்புதவிதமாக ஆசீர்வதித்திருக்கிறார். ஆகவே அவரை நம்புங்கள், உங்கள் வருமானத்திற்காக விசுவாசத்தோடு ஜெபியுங்கள்.

விசுவாசம் என்பது செயலில் வெளிப்படவேண்டும். இழந்து போனதையும், உடைந்து போனதையுமே சதா நினைத்துக் கொண்டிருக்காமல் புதிய முயற்சிகளை ஆரம்பியுங்கள். ஒன்லைன் (online) வியாபாரங்களை ஆரம்பியுங்கள். கொரோனா காலத்தில் அனைவரும் எதை வாங்குவார்கள் என்று சிந்தியுங்கள். அதை ஒரு

வியாபாரமாக மாற்றுங்கள். அது நீங்கள் மக்களுக்கு செய்யக்கூடிய ஒரு மிகப்பெரிய சேவையாகக்கூட இருக்கலாம்.

ஸ்தாபனங்களுக்கு கொடுக்கவேண்டிய கடன்களை அவர்களுடன் கலந்து பேசி தாமதித்துக்கொடுங்கள். ஒரு வருடத்தில் கொடுக்கவேண்டியதை இரண்டு வருடங்களில் தருகிறேன் என்று, ஒரு மாதத்திற்கான தவணைப்பணத்தை குறைத்துக்கொள்ளுங்கள்.

வருமானம் அதிகமாக வந்தால் இல்லாதவர்களை யோசியுங்கள். உங்கள் பணத்தை பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் கஷ்டத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். பணம் தேவைப்பட்டால் மற்றவர்களிடம் கேளுங்கள். தனியாக கஷ்டப்படாதீர்கள். சபையாக சேர்ந்து வருமானம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யுங்கள். அதற்கென ஒரு தனி வங்கிக்கணக்கை ஆரம்பித்து செயற்படுங்கள். வெளிநாடுகளில் இருக்கக்கூடிய உதவி செய்யும் ஸ்தாபனங்களை தேடி அவர்களிடம் உதவி கேளுங்கள்.

கொரோனா காலத்தில் அரசாங்கங்களும் வங்கிகளும் பல சலுகைகளை வழங்கியுள்ளது. அதை பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள். இலங்கையில் கஷ்டப்படும் குடும்பங்களுக்காக அரசாங்கம் மாதம் 5000 ரூபாயை உதவித்தொகையாக வழங்கியது. உங்களுக்கு இந்தப்பணம் தேவையில்லாவிட்டாலும் அதைப்பெற்று மற்றவர்களுக்கு கொடுங்கள். வங்கிகள் கடன்களை சில மாதங்கள் தள்ளிப்போட்டன. இவையனைத்தும் போய் கேட்டவர்களுக்கே கொடுக்கப்பட்டது.

நீங்கள் ஒரு வியாபாரத்தின் உரிமையாளராக இருந்தால் முடிந்தளவு உங்கள் வேலையாட்களுக்கு உதவி செய்யுங்கள். முடிந்தளவு சம்பளத்தை குறைக்காமல் அவர்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுங்கள். வங்கிகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கவேண்டியதை தாமதித்தாலும் தனிப்பட்டபவர்களுக்கு கொடுக்க வேண்டியதை தாமதிக்காமல் கட்டாயம் கொடுங்கள். உங்கள் தொழிலாளி பசியோடு வாடும்போது நீங்கள் உங்கள் மகளுக்கு 'ஐ போன்' (Iphone) வாங்கிக்கொடுப்பது அநியாயம். தேவையில்லாத செலவுகளை குறைத்துக் கொள்ளுங்கள். முடிந்தளவு பணத்தை சேமியுங்கள். முடிந்தளவு மற்றவர்களுக்கு கொடுங்கள்.

மனைவிகள் வேலைக்கு செல்லாத சூழ்நிலையில் அவர்கள் புதுப்புது சமையல்களை செய்து பழகலாம். புதிய கலைகளை கற்கலாம். இதை வுபர் ஈட்ஸ் (Uber eats) மூலம் நீங்கள் மற்றவர்களுக்கு விற்பது ஒரு வருமானத்தையும் ஈட்டித்தரும்.

இலங்கையில் ஒரு நிறுவனம் தனிமைப்படுத்தல் (லாக் டவுன்) காலத்தில் பொருட்களை விநியோகிப்பதன் மூலம் நல்ல லாபம் ஈட்டியது. நீங்களும் வழியிலே சிங்கம் இருக்கும் என்று வீட்டிலேயே இருக்காமல் துணிந்து புதிய முயற்சிகளை எடுக்கவேண்டும். புதிய ஆலோசனைகளை கர்த்தரிடமிருந்து கேளுங்கள். அதை செயல் படுத்துங்கள். இதுவரை கடையில் விற்ற பொருட்களை இன்டர் நெட்டில் (இணையத்தில்) விற்கப்பாருங்கள். இதுவரை தனியாக விற்ற பொருளை இன்னொரு பொருளுடன் சேர்த்து சந்தைப் படுத்துங்கள். மற்றவர்கள் கொடுக்காத ஒன்றை – தேவையான ஒன்றை நீங்கள் கொடுக்கும்போது மக்கள் உங்களிடம் கொள்வனவு செய்வார்கள்.

இந்த இக்கட்டான கால கட்டங்களில் கொள்ளை லாபம் சம்பாதிக்க எத்தனிக்காமல் வியாபாரத்தை நடத்துமளவுக்கும் மற்றவர்களும் பொருட்களை வாங்கி பயன் பெறும் படியாக விலைகளை தீர்மானியுங்கள்.

வீட்டுத்தேவைக்காக பொருட்களை வாங்கும்போது பெரிய சூப்பர்மார்க்கட்டில் (பல்பொருள் அங்காடி) மட்டும் வாங்காமல் தெருவோரம் கடைநடத்தும் சில்லறை வியாபாரிகளிடமும் வாங்குங்கள். வியாபாரமில்லாத கோடை காலத்தை பெரிய சூப்பர்மார்க்கட்டுகளால் தாக்குபிடிக்க முடியும். சிறிய சில்லறை வியாபாரிகளால், வியாபாரமின்றி சிறிது காலம் கூட தாக்குப்பிடிக்கமுடியாது.

கனவிலும் ***தற்கொலையைப்பற்றி*** சிந்திக்காதீர்கள். கர்த்தர் உங்கள் பக்கம் இருக்கிறார். நீங்கள் போய்விட்டால் உங்களையே நம்பியிருக்கும் உங்கள் பிள்ளைகளின் கதி என்ன? அவ்வாறான எண்ணங்கள் தோன்றினால், நிச்சயம் ஒரு முதிர்ச்சியான கிறிஸ்தவருடன் அதைப்பற்றி பேசுங்கள். யாராவது அவ்வாறான எண்ணங்கள் அவர்களுக்கு தோன்றுகிறது என்று உங்களிடம் வந்து கூறினால், அதை புறக்கணிக்காமல் தகுந்த ஆலோசனை வழங்குங்கள், அல்லது வழங்கக்கூடிய யாரையாவது அவருக்கு அறிமுகம் செய்யுங்கள்.

வீட்டிலிருந்து வேலை

அநேகர் வீட்டிலிருந்து வேலை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம். இதனால் சில நன்மைகளும், சில குழப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன. வீட்டில் உள்ள குழந்தைகள் சதா தொந்தரவு செய்வதும் வேலை செய்யும் பெரியவர்கள் எரிச்சலடைவதும் யாவரும் அறிந்ததே. இச்சூழ்நிலையில் நாம் கையாளக்கூடிய சில நடைமுறை ஆலோசனைகள் இதோ:

1. வேலைக்கென்று ஒரு இடத்தை ஒதுக்குங்கள். முடிந்தால் சிறிது பணம் செலவழித்து ஒரு அறையை கட்டுங்கள் அல்லது இருக்கின்ற அறைக்கு கதவுகளை மாட்டுங்கள். பணம் சற்று செலவழிந்தாலும், இதற்கு பயன் மிக அதிகம்.
2. வேலைக்கென்று குறிப்பிட்ட ஒரு நேரத்தை ஒதுக்குங்கள். அந்த நேரத்தில் அலுவலக வேலை அனைத்தையும் செய்து முடித்து விடுங்கள்.
3. பிள்ளைகளுக்கென்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள். அவர்களுடன் விளையாடுங்கள். இது உங்கள் உடல் ஆரோக்கியத்திற்கும் நல்லது.
4. பிள்ளைகளை தொந்தரவாக நினைக்காதீர்கள்! பிள்ளைகள் அன்போடு வரும்போது நாம் எரிச்சலோடு அவர்களை நடத்தக் கூடாது. அவர்களுடைய அன்பை தொந்தரவாக நாம் பார்க்கக் கூடாது. மனைவியையும் குழந்தைகளையும் உங்கள் முன்னேற்ற த்திற்கு இடைஞ்சலானவர்களாகப் பார்க்காதீர்கள். அப்படி நீங்கள் நினைத்தால் உங்கள் மனதிலுள்ள வெறுப்பு உங்கள் செயலில் வெளிப்படும். அதை கட்டாயம் அவர்கள் உணர்ந்து கொள்ளு வார்கள்.
5. வீட்டிலிருந்து கொண்டே வெற்றிகரமாக பல பாரிய வேலைகளை செய்யமுடியும் என்பதை நம்புங்கள். வீட்டில் இருந்து கொண்டே மேற்படிப்புகளை படித்து முடித்தவர்களும் இருக்கிறார்கள்.
6. நேர எல்லையை மாற்றுங்கள். அனைவரும் தூங்கியபின் வேலைசெய்து, மற்றவர்கள் விழித்திருக்கும்போது தூங்குங்கள்.
7. ஆண்கள் வேலைசெய்யும் போது பெண்கள் பிள்ளைகளை பார்த்துக் கொள்ளவேண்டும். வேலைசெய்யும் தகப்பனை தொந்தரவு செய்யும் பிள்ளைகளை தடுக்கவேண்டும். வேலைக்கு

போகாத பெண்களுக்கு, வீட்டில் இருப்பதும் குழந்தைகளை பராமரிப்பதும் பழகிப் போன ஒன்று. ஆகவே அவர்களால் எதையும் சமாளித்துக்கொண்டு போக முடியும். ஆனால் வேலைக்கு போய் பழகிய ஆண்களுக்கு வீட்டில் முடங்கிக்கிடந்தால் பைத்தியமே பிடித்துவிடும். அவர்கள் நோய்வாய்ப்பட வாய்ப்புகள் அதிகம். மனைவிகள் வீட்டிலிருந்து வேலை செய்ய வேண்டி வந்தால் ஆண்கள் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். இருப்பதை வைத்து சாப்பிட பழகிக்கொள்ளவேண்டும். இரண்டு நிமிட நூடுல்சை ரசிக்கப் பழகிக்கொள்ளுங்கள்!

ஏடும் எழுத்தும் - கல்வி

படிக்கின்ற நமது பிள்ளைகள் ஒன்லைனில் (online) படிக்கட்டும். இப்படி ஒரு தொழில்நுட்பம் இருப்பது எத்தனை சிறந்தது – வீட்டிலிருந்தே பிள்ளைகள் படிக்கிறார்கள். அடுத்த வகுப்பிற்கு முன்னேறி போகிறார்கள். படிப்பதை நிறுத்தக்கூடாது. லாப்டாப் (laptop) வாங்க வசதியில்லாத இடத்தில் உங்கள் கைத்தொலைப் பேசியையாவது பாவித்து பிள்ளைகள் படிக்க உதவி செய்யுங்கள். முடிந்தால் தவணை முறையில் லாப்டாப் வாங்கிக்கொடுங்கள். ஆடைகளுக்கு செலவு செய்யும் பணத்தை சேர்த்து பிள்ளைகளின் படிப்புக்கு செலவழியுங்கள். எப்படியாவது பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டும். ஒரே வீட்டில் பல லாப்டாப் (laptop) இருந்தால் அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். பரிசாக இல்லாவிட்டாலும் பாவித்துவிட்டு தாருங்கள் என்ற அடிப்படையில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

அதேநேரம் போனையோ அல்லது லாப்டாப்பையோ பிள்ளைகள் கையில் கொடுத்து அவர்கள் எதுவும் செய்யட்டும் என்று விட்டுவிடாதீர்கள். என்ன செய்கிறார்கள், எங்கே செல்லுகிறார்கள் என்று கவனமாக பாருங்கள். இந்த இன்டர்நெட் தோட்டத்தில் பாம்புகளும், விலக்கப்பட்ட கனிகளும் அதிகமாகவே இருக்கின்றன. Parental control என்று பல மென்பொருள் (Software சாப்ட்வேயர்) இருக்கிறது. லாப்டாப்பை பிள்ளைகள் கையில் கொடுக்குமுன் அந்த மென்பொருளை செயற்படுத்தி கொடுங்கள் - அவர்களுக்கென்று தனியான ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு யூசர் நேமை (பயனர் பெயரை username with limited rights) உருவாக்கிக்கொடுங்கள்.

நீங்கள் ஆசிரியராக இருந்தால் இலவசமாக உங்களுக்கு தெரிந்ததை பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுங்கள். யூடியூபில் வீடியோக்களை உருவாக்குங்கள் - பலர் பிரயோஜனப்படுவார்கள்.

கொண்டாட்டங்களை துறப்பதா?

கொரோனாவால் வந்த இன்னொரு பாதிப்பு திருமண கொண்டாட்டங்கள், பிறந்த நாள் வைபவங்கள் என அனைத்து கொண்டாட்டங்களையும் முன்னெடுக்க முடியாமல் போனது தான். சிலர் இதைக்குறித்தும் மிகுந்த கவலைப்படுகின்றனர்.

என்னைக்கேட்டால் செலவில்லாமல் திருமணம் முடிக்க இதுவே நல்லதருணம்! சிலர் கடன் வாங்கிக் கூட திருமணத்திற்காக செலவழிப்பதுண்டு. பாரிய கடனோடு புது வாழ்க்கையை ஏன் ஆரம்பிக்கவேண்டும்? 50, 60 லட்ச ரூபாய் செலவில் திருமணம் நடக்கிறது. ஆனால் திருமணம் ஆன சில மாதங்களிலேயே விவாகரத்தும் நடக்கிறது. என்னதான் உணவு சுவையாக இருந்தாலும், திருமண விருந்தில் வயிராற சாப்பிட்டு விட்டு, வாயார குறைசொல்லிவிட்டு போகின்றவர்களை நான் பார்த்திருக்கின்றேன்.

கொரோனா வந்ததினால் எதையும் தள்ளிப் போடாமல் செய்யவேண்டிய காரியங்களை குறைந்த கூட்டத்தை கூட்டி, குறைந்த செலவில் செய்யுங்கள். மற்றவர்களை திருப்திப்படுத்துவதற்காக பணத்தை வீணாக்காதீர்கள். மனதை கல்லாக்குங்கள். இருவரும் சேர்ந்து போதகரையும் பெற்றாரையும் மட்டுமே வைத்து ஆலயத்தில் திருமணம் முடியுங்கள். கொண்டாட்டங்கள் கொள்ளை நோய்களை பரப்பும் ஒரு இடமாக மாறிவிடக்கூடாது. விருந்து செலவுக்காக வைத்திருந்த பணத்தை கொரோனாவால் தகப்பனை இழந்த குழந்தைகளுக்கு கொடுங்கள்.

அநேகமான திருமணங்கள் ஆரம்பத்திலும் சரி பின்பும் சரி மற்றவர்களுக்காகவே நடக்கின்றன. தமக்கு பணம் இருப்பதைக் காட்ட 5 நட்சத்திர ஓட்டலில் திருமணம் நடக்கிறது. பின்பு 'பிள்ளைகள் இல்லையா' என்று கேட்பவர்களுக்காக பிள்ளைகளை பெறுகிறார்கள். பிள்ளையின் பிறந்த நாளில் தமது பணப்பலத்தை காட்ட மீண்டும் அட்டகாசமாக கொண்டாடுகிறார்கள். பள்ளிக்கூடங்களில் போடும்போதும் அதிகமாக பணத்தை அறவிடும் பாடசாலைகளை

தெரிவுசெய்கிறார்கள். நமது ஆடை, நகைகள், நமது கார், நமது வீடு, வீட்டிலுள்ள பொருட்கள் என்று அனைத்துமே மற்றவர்களுக்கு நாம் யார் என்பதை காட்டுவதற்காக நாம் செய்யும் ஏற்பாடுகளே! மற்றவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்று பயந்து நாம் நமது வாழ்க்கையை நடத்தக்கூடாது. மற்றவர்களை திருப்திப் படுத்துவதற்காக வாழ்வதை நிறுத்துங்கள். (யாரோ சொன்னதைப்போல) கடைசியில் நாம் இறந்தால் நமது இறுதிச்சடங்கிற்கு வருகின்றவர்களின் எண்ணிக்கை அன்றைக்கு மழை விழுகிறதா இல்லையா என்பதிலேயே தங்கியிருக்கிறது.

இறுதிச்சடங்கில் இறந்தவர்களின் துக்கத்தை தொலைபேசியில் விசாரியுங்கள். சூழ்நிலையைப்பார்த்து, கூட்டம் அதிகம் இல்லாத பிரிதொரு நாள் அவர்களை சென்று ஆறுதல்படுத்துங்கள்.

திட்டமிட்டு வாழுங்கள்!

திட்டமிட தவறும்போது நாம் தவறுவதற்காக திட்டமிடுகிறோம் என்று சொல்லுவார்கள் (when you fail to plan, you are planning to fail*). நம்மை போஷித்து பராமரிப்பவர் கர்த்தரே. அதற்காக நாம் கண்டபடி வாழ முடியாது. வாழ்க்கையை திட்டமிடவேண்டும். பிள்ளைகளின் பிற்கால படிப்பிற்காக பணத்தை சேமிக்கவேண்டும். நமது பிற்காலத்திற்காக, முதிர்வயதிலே வருமானம் அற்றிருக்கும்போது நமது செலவுகளுக்காக பணத்தை ஆரம்பத்திலேயே சேமிக்கவேண்டும். இல்லாவிட்டால் நமது பிள்ளைகளுக்கு நாம் அநாவசிய பாரமாக வந்து விடுவோம். நான் சொல்லுவதை தவறாக புரிந்து கொள்ளாதீர்கள் - பெற்றோரை கவனிக்கவேண்டிய பொறுப்பு பிள்ளைகளுக்கு இருக்கிறது. ஆனால் பெற்றோர் கொஞ்சமாவது பணத்தை சேமித்து வைத்தால் அது அவர்களுக்கும் நல்லது, பிள்ளைகளுக்கும் நல்லது. ஓய்வூதிய திட்டங்களை ஆரம்பியுங்கள்* (retirement plans*). வீண் செலவுகளை தவிர்த்து, பணத்தை சேமியுங்கள்.*

நாம் திடீரென இறந்துவிட்டால் நமது குடும்பத்திற்கு என்ன நடக்கும்? அவர்கள் நடுத்தெருவில் நிற்க வேண்டுமா? சற்று சிந்தியுங்கள். நாம் மரித்தால் நமது குடும்பத்திற்கு போதியளவு பணம் கிடைக்கும்படி நாம் திட்டமிட வேண்டும். ஏதாவது ஒரு காப்புறுதியோ (insurance*)*

வேறு வழிகளிலோ நமது குடும்பத்தின் செலவுகளுக்கு பணத்தை சேமித்து வைக்கவேண்டும்.

வாழ்வின் அனைத்து பாகங்களையும் திட்டமிடுங்கள். மருத்துவ செலவுகள், படிப்புக்கான செலவுகள் - தற்கால செலவுகள், எதிர்கால செலவுகள் என அனைத்தையும் திட்டமிடுங்கள். மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காகவும் ஓரளவு பணத்தை ஒதுக்குங்கள். நீங்கள் திட்டமிடாமல் வாழ்ந்தால் திட்டமிட்டு வாழுகின்றவர்களுக்கு பாரமாயிருப்பீர்கள்.

ஆனால் எது எப்படியானாலும் நம்மை போஷித்து பராமரிப்பவர் நமது கர்த்தரே. நான் போய்விட்டால் என் பிள்ளைகளை யார் பார்ப்பார்கள் என்று யோசிக்காதீர்கள் - உங்கள் பிள்ளைகளுக்கு கர்த்தரே பரம தகப்பன்.

நமது கடமை

1. *மனந்திரும்புங்கள் - ஜெபம்பண்ணுங்கள். தொடர்ந்தும் ஒரே பாவத்தில் வாழ்ந்து கொண்டிருந்தால் அதை விட்டு மனந்திரும்புங்கள்.*
2. *வீட்டில் அடைபட்டு கிடக்கும் நேரங்களில் வேதத்தையும் மற்ற நல்ல புத்தகங்களையும் வாசியுங்கள்.*
3. *புதிய விஷயங்களை கற்றுக்கொள்ளுங்கள். ஒன்லைன் (online) பாடங்களை படியுங்கள். யூடியூபில் (Youtube) பல நல்ல பாடங்களை இலவசமாகவே கற்றுக்கொள்ளமுடியும்.*
4. *உங்களுக்கு தெரிந்ததை மற்றவர்களுக்கும் இன்டர்நெட்டில் கற்றுக்கொடுங்கள்.*
5. *முடிந்தளவு மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள் - உங்கள் பொருள், பணம், நேரம், ஆலோசனை மற்றவர்களுக்கு தேவை. சிந்தித்து பாருங்கள், வங்கிக்கணக்கில் கோடிக்கணக்கில் பணம் இருந்தும் நீங்கள் மரித்துப்போனால் உங்கள் பணம் உங்களோடு வராது. ஆனால் அதை நீங்கள் செல்லும் இடத்திற்கு அனுப்பி வைக்கமுடியும்! அனுப்பி வைக்க ஒரே வழி அதை தேவனுடைய ராஜ்யத்திற்காகவும் மற்றவர்களின் நலனுக்காகவும் செலவழிப்பதுதான். அப்போது அதன் பலனை கர்த்தர் உங்கள் பரலோகக்கணக்கில்*

வைப்புச் செய்வார்! நீங்கள் செய்ததிற்கான பலனை பரலோகத்தில் நிச்சயம் உங்களுக்கு தருவார்.

6. *உதவி செய்யும்போது அதை கிறிஸ்துவின் நாமத்தினால் செய்யுங்கள். நீங்கள் கிறிஸ்தவர்கள் என்பதும் கிறிஸ்துவன் நிமித்தமே மற்றவர்களுக்கு உதவி செய்கிறீர்கள் என்பதும் எல்லாருக்கும் தெரியட்டும். கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படட்டும். கிறிஸ்துவின் அன்பை உலகம் கண்டுகொள்ளட்டும்.*
7. *அடிக்கடி மற்றவர்களோடு பேசி அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.*
8. *உடற்பயிற்சி செய்யுங்கள்.*
9. *ஊழியங்களை செய்ய புதிய வழிமுறைகளை தேடுங்கள். யூடியூபில் (*Youtube*) வீடியோக்களை உருவாக்கிப் பகிருங்கள்.*
10. *தடுப்பூசியை தகுந்த மருத்துவ ஆலோசனையோடு போட்டுக் கொள்ளுங்கள்.*
11. *அரசாங்கத்தோடு கிறிஸ்துவுக்குள் ஒத்துழையுங்கள். பெரிய கட்டிடங்கள் உங்கள் வசம் இருப்பின் அவற்றை தற்காலிக மருத்துவமனையாக மாற்ற அனுமதியுங்கள்.*
12. *ஒன்லைன் சபை ஆராதனை, வேதப்படிப்பு போன்றவற்றில் முடிந்தளவு பங்குபெறுங்கள்.*
13. *குடும்பத் தகராறுகளை முடிந்தளவு குறைத்துக் கொள்ளுங்கள். வீட்டில் இருக்கும்போது கணவருடன் அல்லது மனைவியுடன் சண்டைகள் வரவாய்ப்புண்டு. யாகாவாராயினும் நா காக்க!*
14. *வாட்ஸ்அப்பில் (*Whatsapp*) வரும் எல்லா வீடியோக்களையும் (காணொளிகளையும்) பார்த்து நம்பிவிடாதீர்கள்.*
15. *புதிய வியாபாரங்களை ஆரம்பியுங்கள்.*

9 கடைசியாக...

கொரோனா கர்த்தருடைய தண்டனையா என்று நமக்கு நிச்சயமாக தெரியாது. ஆனால் வேதாகம வசனங்களை வைத்து பார்க்கின்றபோது, அது தண்டனையாக, அல்லது மனந்திரும்ப கர்த்தர் செய்யும் அறைகூவலாக இருக்க கூடும் என்பதே என்னுடைய தாழ்மையான கருத்து. உலகில் ஏன் கொரோனா வந்தது என்பதற்கு பதிலை ஊகிக்கலாமே தவிர ஆணித்தரமாக என்னால் எதையும் சொல்ல முடியாமல் இருக்கிறது. ஆனால் முக்கியமான விஷயம் ஒன்றை உங்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உலகில் ஏன் தீமைகள் இருக்கின்றன என்ற கேள்விக்கு பதில் தேடுவதற்காக நாம் படைக்கப் படவில்லை. கர்த்தரை தனிப்பட்ட ரீதியில் அறிந்து கொள்வதற்காகவே நாம் படைக்கப்பட்டோம். ஆதலால் கொரோனா நம்மை கர்த்தரிடம் இன்னும் அதிகமாய் கிட்டிச்சேர்க்கவேண்டும். ஏற்கனவே நான் சுட்டிக்காட்டிய பல கருத்துக்களை இங்கே தொகுத்துக் கூறுகிறேன்:

1. உலகம் முன்னொரு போதும் இல்லாத வேகத்தில் தேவனுக்கு விரோதமாக போய்க்கொண்டிருக்கிறது. பால் மாற்று (sex change, transgender operations) செயற்பாடுகளை தேவனுக் எதிரான கிளர்ச்சியாகவும் கலகமுமாகவே நான் பார்க்கிறேன். இவற்றை நிறுத்த வேண்டிய நேரமும் இதுதான்.
2. பழைய ஏற்பாட்டு காலத்தில் முழு உலகையும் பாதிக்கின்ற அளவில் வந்த பல அழிவுகளைப் போல கொரோனா வந்திருக்கிறது.
3. பல பாவ பழக்க வழக்கங்கள் பரவுவதை தற்காலிகமாவது தடுத்திருக்கிறது.
4. மக்கள் மனந்திரும்ப நல்ல ஒரு சந்தர்ப்பத்தை கொரோனா கொடுத்திருக்கிறது. இது கர்த்தருடைய தண்டனை அல்ல என்று கூறி அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தாமல் விடக்கூடாது. தண்டனையாக இதைப் பார்த்தால் மக்கள் மனந்திரும்புவார்கள். இல்லா விட்டால் அவர்கள் கர்த்தரை திரும்பிக்கூட பார்க்க மாட்டார்கள்.

உலகில் உள்ள துன்பங்கள் ஏன் என்ற கேள்விக்கு கடைசிப்பதில் சிலுவையிலேயே உள்ளது. கடவுள் நல்லவராக இருந்தும் ஏன் என்னுடைய மகன் கொடூரமாக கொல்லப்பட்டான் என்று கேட்கும்

ஒவ்வொரு தாயையும், சிலுவையிலே தேவன் தன்னுடைய மகனையும் பலியாக ஒப்புக்கொடுத்தார் என்பது தேற்ற வேண்டும். உலகத்தில் உள்ள வேதனைகளில் இருந்தெல்லாம் என்னை கடவுள் தப்புவிக்கவில்லையே என்று கேட்கின்ற யாவருக்கும் கடவுள் சொல்லும் பதில், உலகில் மனிதனாக வந்த தன்னுடைய மகனையும் தேவன் தப்புவிக்கவில்லை என்பது தான். உலகில் பிறக்கும் யாவரும் அதிலுள்ள மனிதர்கள் விட்ட பிழையினால் வந்த வேதனைகளில் பங்கேற்க வேண்டும் என்பது நியதி. கடவுள் மனிதனாக வந்த போதும் கூட அவர் அந்த நியதிக்கு தன்னை விதிவிலக்காக வைக்கவில்லை. பாடு படுகின்ற யாவரோடும் சேர்ந்து பாடுபட்ட கடவுள் நம்மோடிருக்கிறார்.

ஆனால் நாம் வணங்கும் கடவுள் ஒரு நொண்டிக்குதிரை அல்ல ("God is not a tame lion" C.S. Lewis). உலகத்தின் வல்லமைகளால் அவரை கல்லறைக்குள் பூட்டி வைக்க முடியவில்லை. கல்லறையை வென்று அவர் உயிரோடெழுந்தார். இந்த நம்பிக்கை நமக்கும் இருக்கிறது. கர்த்தர் நம்மையும் ஒருநாள் உயிரோடெழுப்புவார்.

அதுமட்டுமல்ல அவருடைய அனுமதியின்றி, அவர் அறியாமல் நம்முடைய தலையில் இருந்து ஒரு முடிகூட விழ முடியாது. ஆகவே நம்மை நோக்கி வருகின்ற எதுவுமே அவரைத்தாண்டித்தான் வரவேண்டும்.

ஏன் துன்பங்களை கர்த்தர் அனுமதிக்கின்றார் என்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. துன்பங்கள் நம்மை தூய்மைப் படுத்துகின்றன, அவர் நம்மை பயன்படுத்த நம்மை தயார்படுத்துகின்றன. உலகில் உள்ள சில இன்னல்கள் கடவுளுடைய தண்டனையாக வந்திருக்கின்றன, அவை மக்கள் மனந்திரும்ப அறைகூவலாக இருக்கின்றன. வருகின்ற அனைத்து துன்பங்களும் நாமோ நம்முடைய மூதாதையரோ அல்லது நம்மில் ஒருவனான சக மனிதர்களோ செய்த தவறினால் தான் வருகின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இறுதியாக நாம் சந்திக்கக்கூடிய எல்லா துன்பங்களையும் விட கர்த்தர் பெரியவர். எந்த துன்பத்திலும் நோயிலும் இருந்து நம்மை விடுவிக்க வல்லவர். சில நேரங்களில் அவர் நம்மை விடுவிக்கிறார். சிலநேரங்களில் அவர் நம்மை விடுவிப்பதில்லை. மலைகளை பெயர்க்கக் கூடிய நம்முடைய விசுவாசம் அற்புத சுகத்தை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுத்தரக்கூடியது. ஆனால் சுகம் கிடைக்காத போதும் அவரை

விட்டு விலகிவிடாமல் அவர் நல்லவர் என்ற விசுவாசத்தோடு இருப்பதும் விசுவாசந்தான். விடுவித்தாலும் விடுவிக்காமற் போனாலும் அவரே நமது நல்ல கர்த்தர்.

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வது மில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக் கடவது என்றார்கள்.

பிற்சேர்க்கை 1– சுயசித்தம் (Freewill*)*

சுய சித்தம் இருக்க வேண்டுமானால் இரண்டு காரியங்கள் நடந்தேற வேண்டியிருக்கிறது. முதலாவது தான் செய்த எதையும் விட வித்தியாசமான ஒன்றை செய்ய மனிதனுக்கு உரிமை (principle of alternate possibilities) *இருக்க வேண்டும். அதாவது மனிதன் கட்டாயத்தின் கீழ் செயற்படக் கூடாது. அவன் செய்ததை, விரும்பியிருந்தால் செய்யாமல் இருந்திருக்கலாம். அவன் செய்ததை அவன் விரும்பிய படியினாலேயே செய்கிறான். "கடவுள் நான் கொலை செய்யவேண்டும் என்று முன்குறித்திருக்கிறார். அதனால் நான் வேறு வழியின்றி செய்து விட்டேன், நான் விரும்பியிருந்தாலும் கூட வேறு விதத்தில் செயல் பட்டிருக்க முடியாது" என்று யாரும் சாக்கு போக்கு சொல்ல முடியாது.*

சுயசித்தம் மனிதனுக்கு இருக்க வேண்டுமானால் அவனுக்கு இருக்கவேண்டிய அடுத்த விஷயம் ***பொறுப்பு*** (moral responsibility)*. அதாவது அவன் செய்கின்ற அனைத்தையும் அவன் தானாக தெரிவு செய்து செயல்படுவதினால் அவனுடைய செயல்களுக்கு அவனே பொறுப்பு.*

இன்னொரு கண்ணோட்டத்தில் பார்க்கப்போனால் சுயசித்தத்திற்கு இரண்டு பரிமாணங்கள் இருக்கின்றன. ஒன்று ***சித்தத்தின் சுதந்திரம்*** (freedom of the will) *மற்றது* ***செயலின் சுதந்திரம்*** (freedom of actions)*. அதாவது மனிதனுக்கு தான்* ***விரும்பியதை செய்யும்*** *சுதந்திரமும் இருக்கவேண்டும், தான்* ***விரும்பியதை விரும்பும்*** *சுதந்திரமும் இருக்கவேண்டும். அதாவது அவனுடைய மனதில் எழும் எண்ணங்களும் விருப்பங்களும் அவனுடையதாகவே இருக்கவேண்டும்.*

செயலின் சுதந்திரம் (freedom of actions) - *தான் விரும்பிய எதையும் செய்ய பொதுவாக மனிதனுக்கு சுதந்திரம் இருக்கிறது. சில நேரங்களில் இயற்கை, செயற்கை காரணிகளினால் அந்த சுதந்திரம் பாதிக்கப்படலாம். உதாரணமாக சிறையில் அடைக்கப்பட்ட ஒருவருக்கு வெளியில் நடமாடும் சுதந்திரம் இல்லை. வானளவுக்கு குதிக்கும் சுதந்திரமோ, பலமோ மனிதனுக்கு இல்லை. இயற்கை விதிகளை மீறும் சுதந்திரம் மனிதனுக்கு இல்லை. ஆகவே, தான் விரும்பும் எதையும் செய்யும் சுதந்திரம் மனிதனுக்கு இருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. நாம் வாழும் உலகில் பல கட்டுப்பாடுகள் இருக்கின்றன. கோரோனா*

காலத்தில் வெளியே உலாவும் சுதந்திரம் நம்மிடம் இருந்து பறிக்கப்பட்டது – அதையும் மீறி நாம் உலாவினால் நாம் தண்டிக்கபடுகிறோம். ஆனாலும் பொதுவாக பார்க்கும் போது மனிதனுக்கு தான் விரும்பியதை செய்யும் சுதந்திரம் இருக்கிறது.

சித்தத்தின் சுதந்திரம் *(- மனிதனுடைய மனதில் எழும் எண்ணங்களும் ஆசைகளும் அவனுடையது தானா? "மனிதனுக்கு தான் விரும்பியதை செய்ய சுதந்திரம் இருக்கிறது. ஆனால் அவன் மனதில் எழும் விருப்பங்கள் அவனுடையதல்ல"* என்று Arthur Schopenhauer *கூறியதில் நியாயம் இருக்கிறது. வேதத்திலும் இதே போன்ற பல வசனங்கள் இருக்கின்றன. "ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப் போலிருக்கிறது் அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார் (நிதி 21:2). ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்கு கிறவராயிருக்கிறார்" (பிலிப் 2:14). அப்படியானால் நம் மனதில் எழும் பாவ ஆசைகளுக்கும் கடவுளா காரணம் என்று நாம் கேட்கலாம்?*

கடவுள் மனிதனுடைய உள்ளத்தில் விருப்பங்களை உண்டாக்குகிறவராய் இருக்கிறார். ஆனாலும் மனிதனுடைய மனதில் தோன்றும் அனைத்து விருப்பங்களுக்கும் கடவுள் பொறுப்பல்ல. வேதத்தில் எங்கேயும் அப்படி சொல்லப்படவில்லை. அப்படியானால் கர்த்தர் பாவத்திற்கும் காரணராய் இருப்பார் அல்லவா? அதுமட்டுமல்ல மனதில் தோன்றும் விருப்பங்களுக்கு செயல் வடிவம் கொடுப்பது நமது சித்தமே. ஆகவே அங்கே நமக்கு பொறுப்பு இருக்கிறது. நமக்குள் கடவுள் விதைக்கும் நல்ல விருப்பங்களை தட்டிக்கழிக்கவும் மனிதனுக்கு உரிமை இருக்கிறது.

நம்முடைய உள்ளங்களில் விருப்பங்களை உண்டு பண்ண கடவுளுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று நாம் கேட்கலாம். ஆனால் சற்று சிந்தித்துப்பாருங்கள். டிவியில் போகும் சோப் விளம்பரத்தை பார்த்தவுடன் சோப் வாங்கவேண்டும் என்ற ஆசை நமக்கு வருகிறது. சோப் போடவேண்டும் என்ற ஆசையை ஒருவரின் மனதில் விதைத்தது டிவி விளம்பரம். மருத்துவராக வர வேண்டும் என்ற எண்ணத்தை பிள்ளையின் மனதில் விதைத்தது அந்த பிள்ளையின் தாய். ஆக என்னுடைய மனதில் ஆசையை விதைக்க டிவி விளம்பரத்திற்கு

உரிமை இருக்கிறது, என்னைப்பெற்ற தாய்க்கு உரிமை இருக்கிறது. ஆனால் என்னைப்படைத்த கடவுளுக்கு மட்டுந்தான் உரிமை இல்லையா?

அதுமட்டுமல்ல. கர்த்தர் நம்முடைய மனதிலே ஆசைகளை கம்பியூட்டரில் போடுவது போல போடுவதில்லை. திடீரென்று ஒரு நாள் காலையில் இப்படி ஆசைகள் தோன்றுவதில்லை. தேவனுடைய வசனங்களை கேட்பதினூடாகவே கடவுளுடைய விருப்பத்தின் விதைகள் நம் மனதில் தூவப்படுகினறன. இதுவும் கர்த்தருடைய கிருபையே. இதை எதிர்ப்பதற்கு மனிதனுக்கு எல்லா சுதந்திரமும் இருக்கிறது. அதனால் தான் "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" என்று எபிரே 3:15 கூறுகிறது. அவருடைய சத்தத்தை கேட்டும் மனதை கடினப்படுத்தும் சுதந்திரத்தை கர்த்தர் மனிதனுக்கு கொடுத்திருக்கிறார். நாம் இன்று அவருக்கெதிராக நம்முடைய மனதை கடினப்படுத்தக் கூடாது. அப்படி கடினப்படுத்தினால் அவர் வேறு வழிகளில் நம்மோடு பேச முயற்சிப்பார். இன்று நாம் சந்திக்கும் கொரோனாவும் அவ்வழிகளில் ஒன்று. டாக்டர் புஷ்பராஜ் சொன்னது போல கர்த்தர் வலையை போடும்போதே நாம் கர்த்தரிடம் வந்து விடவேண்டும். இல்லாவிட்டால் அவர் நமக்காக தூண்டில் போடுவார். தூண்டிலில் அகப்பட்ட மீன் வாய் கிழிந்து அகோரமாக இருக்கும்.

கடவுள் எல்லாருக்கும் ஒரே விதமான விருப்பங்களை கொடுப்பதில்லை. ஒருவருக்கு பாடும் திறமையும் ஆசையும் இயற்கையாகவே இருக்கலாம். அவருக்கு கர்த்தர் ஈஸ்டர் தினத்தன்று ஒரு பாடலை பாடும் விருப்பத்தை கொடுக்கலாம். பேசும் திறமையுள்ள இன்னொருவருக்கு அதே ஈஸ்டரன்று பிரசங்கம் பண்ணும் ஆசையை கொடுக்கலாம்.

நமது மனதில் எழும் பாவ ஆசைகளுக்கும், செயல்களுக்கும் கடவுள் காரணராய் இருப்பது போன்ற வசனங்கள் வேதத்தில் இருக்கின்றன என்று சிலர் கேட்பதுண்டு. அவற்றில் இரண்டு பகுதிகளை அடுத்த பகுதிகளில் பார்க்கிறோம்.

பிற்சேர்க்கை 2: பார்வோனின் இதயத்தை கடினப் படுத்தியது யார்?

பார்வோனின் இதயத்தை கர்த்தரே கடினப்படுத்தி அதனால் அவன் இஸ்ரவேல் மக்களை போகவிடாமல் தடுத்ததாக வாசிக்கிறோம் (யாத்தி 4:21). அப்படியானால் அவன் சுயசித்தம் இன்றி செயற்பட்டானா? அவனுடைய செயலுக்கு கர்த்தர் தானா காரணம்?

கர்த்தர் கடினப்படுத்தியதாக சொல்லப்பட்டிருப்பது உண்மைதான் - ஆனால் முதல் 5 முறைகளும் பார்வோனே தன்னுடைய இதயத்தை கடினப்படுத்துகிறான். 10 வாதைகளில் 4 தடவைகளே கர்த்தர் கடினப்படுத்தியதாக வாசிக்கிறோம்:

கொப்புளம் (9:12) - கர்த்தர் பார்வோனின் இதயத்தை கடினப் படுத்தினார், வெட்டுக்கிளி (10:1,10:20) - கர்த்தர் கடினப்படுத்தினார், இருள் - கர்த்தர் கடினப்படுத்தினார் (10:27), தலைச்சன் பிள்ளையின் மரணம் (10:28,11:10) - கர்த்தர் கடினப்படுத்தினார்.

அக்காலததிலே எகிப்து மிக பலம் வாய்ந்த சாம்ராஜ்யமாக இருந்தது. எப்படி ரோம அரசர்களை ராயன் அல்லது சீசர் என்று அழைப்பார்களோ அதேபோலவே எகிப்திய அரசர்களை பார்வோன் என்று அழைப்பது வழமை. இந்த பார்வோன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் யார் என்பதை அறிந்திருக்கவில்லை (5:3). ஆரம்பத்தில் மோசே பார்வோனிடம் வந்து கேட்டபோது, அவன் கர்த்தர் யார் என்று துணிகரமாக கேட்டதோடு மட்டுமல்லாமல் அவருக்கு நான் ஏன் செவிகொடுக்கவேண்டும் என்றும் கேட்கிறான். நமது பாஷையில் சொல்லப்போனால் “கர்த்தர் என்ன பெரியவரா? அவருக்கு நான் செவிகொடுக்க வேண்டுமா” என்று கேட்கிறான். அவனை பொறுத்தவரைக்கும் இஸ்ரவேலின் கர்த்தர், தனது அடிமை ஜனங்களின் கடவுள். அவ்வளவுதான். அதற்கு பின்பு நடந்த சம்பவங்கள் யாவும் கர்த்தர் யார் என்பதை பார்வோனுக்கு காட்டும் ஏற்பாடுகளே. அவருடைய வல்லமையை பார்வோன் படிப்படியாக கண்டுகொண்டான். முதலில் கர்த்தர் செய்த அற்புதங்களை பார்வோனுடைய மந்திரவாதிகளும் அதாவது அவன் வழிபட்ட தெய்வங்களும் செய்கின்றன. ஆனால் ஒரு கட்டத்திற்கு மேல் மோசே செய்வதை அவர்களால் செய்ய முடியாமல் போயிற்று. பேன்களை அவர்களால் கொண்டு வரமுடியாமல் போனவுடன் அவர்கள் என்ன சொல்லுகின்றார்கள் என்பது

முக்கியமானது - "இது தேவனுடைய விரல்" என்கிறார்கள் - அதாவது உண்மையான கடவுள் மோசேயோடு சேர்ந்து தமக்கெதிராக செயற்படுவதாக அவர்கள் உணர்ந்து கொள்ள ஆரம்பிக்கிறார்கள். அடுத்த கட்டமாக கர்த்தரின் வாதைகள் அவர்கள் மீதும் வர ஆரம்பிக்கின்றன (யாத்தி 9.32). அதனால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் பிரதிநிதியான மோசேயின் முன்னால் எகிப்தின் மந்திரவாதி களால் நிற்கக் கூட முடியாமல் போகிறது. அவர்களைப்பற்றி நாம் வாசிப்பது இதுவே கடைசி தடவை.

அதைத்தொடர்ந்தே 9:14ல் "என்னைப்போல் வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு" வாதைகளை அனுப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே இங்கே ஒரு போட்டி நடக்கிறது: பார்வோனும் எகிப்தின் கடவுள்களும் உண்மையான கடவுளா அல்லது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உண்மையான கடவுளா? இந்த போட்டியில் கர்த்தரே ஜெயிக்கிறார். அவருடைய பெரிதான வல்லமையை எகிப்தியரும் பார்வோனும் அறிந்துகொள் கிறார்கள். இறுதியாக செங்கடலிலே அவர்கள் அழிந்த போது கர்த்தரே உண்மையான தேவன் என்பதை அவர்கள் அறிந்து கொள்கிறார்கள் (யாத்தி 14:4).

முதல் 5 தடவைகளும் பார்வோன் இதயத்தை தானாகவே கடினப்படுத்திய படியினால் அவன் அதைத்தான் விரும்பினான் என்று அறிகிறோம். அதுமட்டுமல்ல அவன் ஏற்கனவே இஸ்ரவேல் மக்களை பல விதங்களிலும் கொடுமைப்படுத்தியவன். பாருங்கள் ஒரு இனம் இன்னொரு இனத்தை ஒடுக்குவதும் ஒழிக்க முற்படுவதும் இன்று நேற்றல்ல, என்றோ ஆரம்பித்த ஒன்று. அதிலும் யூதர்கள் மீதிருந்த பயத்தினால், எங்கே அவர்கள் தங்களை விடவும் பலமுள்ளவர்களாக ஆகி விடுவார்களோ என்ற பயத்தினால் தான் இந்த 'இன ஒடுக்கம்' ஆரம்பித்ததும் குறிப்பிடத்தக்கது. ஆகவே இஸ்ரவேலரை எகிப்தில் வைத்திருக்கவேண்டும் என்ற ஆசை பார்வோனுடையது – அதை கர்த்தர் உண்டுபண்ணவில்லை.

கடினப்படுத்துவதற்கான வார்த்தை பலப் படுத்துவதை குறித்தது (உபா 1:38, 1 சாமு 23:16, எஸ்ரா 1:6, 2 நாளா 29:34) (Forster and Marsten, 1973). *கர்த்தர் செய்ததெல்லாம் அவனுடைய ஆசையை சற்று பலப்படுத்தி அவனுடைய ஆசைக்கு அவனை ஒப்புக்கொடுத்தது தான். இது ரோமர்*

1:24ல் பவுல் சொன்ன கருத்துகளுக்கும் ஒத்திருக்கிறது. தேவனைப்பற்றி அறியக்கூடிய விஷயங்கள் வெளிப்படையாக இருந்தும் அவர்கள் கடவுளை கடவுள் என்று கனம் பண்ணவில்லை. இதே பிழையைத்தான் பார்வோனும் விடுகிறான். எப்போது மந்திரவாதிகளால் செய்ய முடியாததை மோசே செய்கிறானோ, அப்போதே அவனோடிருக்கிற கடவுள் உண்மையான கடவுள் என்று பார்வோன் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவன் கர்த்தரை கனப்படுத்தவுமில்லை அவருக்கு செவிகொடுக்கவுமில்லை. அதனால் அவனுடைய பொல்லாத ஆசைகளுக்கு கர்த்தர் அவனை ஒப்புக்கொடுத்து அவனுடைய முடிவை அவனே தேடிக்கொள்ளும்படி விடுகிறார்.

இந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சிலர், பார்வோன் தன்னுடைய இதயத்தை கடினப்படுத்தும் முன்பே, கர்த்தர் அவனுடைய இதயத்தை கடினப்படுத்தப்போவதாக ஏற்கனவே முன்னுரைத்துள்ளதை காரணம் காட்டுகின்றனர். கர்த்தர் முன்னுரைத்தது உண்மைதான் ஆனால் அது 6வது வாதையின் பின் வருகின்ற கடினப்படுத்தலை குறித்திருக்கலாம் அல்லவா?

மேலும் ரோமர் 9:14ல் இதைப்பற்றி பவுல் கூறும் போது பார்வோன் அழிந்து போவதற்காக அவனை தேவன் முன்குறித்ததாக கூறவில்லை. "என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும் படியாகவும், உன்னை நிலைநிறுத்தினேன்" — அதாவது தேவனைப்பற்றி முழு உலகமும் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே கர்த்தர் பார்வோனுடைய இதயத்தை கடினப்படுத்தினார்.

பிற்சேர்க்கை 3: யூதாசை காட்டிக் கொடுத்தது யார்?

“அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர் கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்” (லூாக் 22:3). யூதாசுக்குள் சாத்தான் புகுந்ததினால் தான் அவன் காட்டிக்கொடுத்தான் என்றால் அவன் அதற்கு எப்படி பொறுப்பு கூற முடியும்?

சில நேரங்களில் சாத்தான் மனிதர்கள் மீது வலுக்கட்டாயமாக புகுந்து கொள்கிறான். இதைத்தான் பிசாசு பிடித்தல் என்று அழைக்கிறோம். கடவுளும் சாத்தானைப்போல செயற்படுவதில்லை. அவரும் தன்னுடைய சித்தத்தை மனிதருக்குள் திணித்தால் அவருக்கும் சாத்தானுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்!

ஆனால் இந்த இடத்தில் பிசாசு அவனை பிடித்ததா அல்லது காட்டிக்கொடுக்கும் எண்ணத்தை அவனுக்குள் போட்டதா என்று சற்று சந்தேகமாகவேயுள்ளது. யோவான் சுவிசேஷத்தில் பிசாசு அவனை தூண்டிவிட்டதாகவே கூறப்பட்டுள்ளது: “சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு” (யோவ 13:3). சாத்தான் அவனுக்குள் இருந்த பண ஆசையை பயன்படுத்திக் கொண்டான். ஏற்கனவே அவனுக்குள் இருந்த பாவ விதைக்கு தண்ணீர ஊற்றி செடியாக வளர விட்டான். பார்வோனுடைய கதையிலும் அப்படியே நடந்தது. அவனுக்குள் இருந்த கர்வம் தன்னுடைய அடிமை ஜனங்களின் கடவுளாகிய கர்த்தரை மெய்தெய்வமாக ஏற்றுக்கொள்ள மறுத்தது.

சில விஷயங்கள் தேவனுடைய அனாதி தீர்மானத்தின்படியே நடக்கின்றன. ஆனால் அதை செய்கின்றவர்கள் எல்லா விதத்திலும் அதற்கு பொறுப்பாக இருக்கிறார்கள். இதைத்தான் இயேசுவும் கூறுகிறார் :“மனுஷ குமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார் ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப் படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ! அந்த மனுஷன் பிறவாதிருந் தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்” (மாற்கு 14:21).

இயேசுவின் மரணம் ஆண்டவருடைய அநாதி திட்டத்தின்படியே நடக்கிறது. அதை ஆண்டவர் ஏற்கனவே நியமித்திருந்தார். ஆனால் யூதாஸ் நினைத்திருந்தால் இயேசுவை காட்டிக்கொடுக்காமல் இருந்திருக்கலாம். தேவனுடைய அநாதி திட்டங்களையும் மனிதனுடைய பொறுப்பையும் பற்றி இயேசு இங்கே கூறுகிறார்.

உதவி நூல்கள்

பண்டைய இலக்கியங்கள்

Thucydides, History of the Peloponnesian War, Thomas Hobbes, Ed.

Cyprian, De Mortalitate [Mary Louise Hannon, trans.]

பிற நூல்கள்

Augustine, Aurelius. 1978. *The Problem of Free Choice*. New York: Newman Press.

Collier, Aine. 2007. *The Humble Little Condom: A History*. 1st American paperback ed. Amherst, New York: Prometheus Books.

Crabb, Larry. 1994. *Finding God*. New York: Walker and Co.

Dallavilla T., Bertelli M., Morresi A., Bushati V., Stuppia L., Beccari T., Chiurazzi P., Marceddu G. 2020. *Bioinformatic analysis indicates that SARS-CoV-2 is unrelated to known artificial coronaviruses*, European Review Medical Pharmacological Sciences, 24 - N. 8, 4558-4564

Dunn, James D. G. 1988. *Romans 1 - 8*. WBC; Vol. 38,A, Texas: Word Books.

Elliott, John H. 2008. *1 Peter: A New Translation with Introduction and Commentary*. AB 37B. New Haven: Yale Univ. Press.

Froissart, Jean, and Geoffrey Brereton. 1983. *Chronicles*. Harmondsworth: Penguin Books.

Green, Joel B. 1997. *The Gospel of Luke*. NICNT. Grand Rapids, Mich: W.B. Eerdmans Pub. Co.

Hays, J. N. 2005. *Epidemics and Pandemics: Their Impacts on Human History*. Santa Barbara, Calif: ABC-CLIO.

Hume, David, and Richard H. Popkin. 1998. *Dialogues Concerning Natural Religion, the Posthumous Essays, Of the Immortality of the Soul, and Of Suicide, from An Enquiry Concerning Human Understanding of Miracles*. 2nd ed. Indianapolis: Hackett Pub.

Mackie, J. L. 1982. *The Miracle of Theism: Arguments for and against the Existence of God*. Oxford [Oxfordshire] : Oxford University Press.

McNeill, William Hardy. 1989. *Plagues and Peoples*. New York: Anchor Books.

Moo, Douglas J. 2018. *The Letter to the Romans*. Second Edition. NICNT, Grand Rapids: William B. Eerdmans Publishing Company.

Piper, John. 2020. Corona Virus and Christ. Illinois: Crossway

Stark, Rodney. 1996 The rise of Christianity, Princeton:Princeton University Press

Yancey, Philip. 1990. *Where Is God When It Hurts*. Grand Rapids: Zondervan.

இந்நூல்கள் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, சுவிட்சலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் விற்பனைக்கு உள்ளன. விபரங்களுக்கு markalroy@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியை தொடர்பு கொள்ளுங்கள்.

Mark Alroy

கொரோனாவின் கொடூரமும் கிறிஸ்து தரும் நம்பிக்கையும்

உலகையே உலுக்கிய கொரோனா ஏன் வந்தது? அது கர்த்தரின் தண்டனையா? உலகில் அதிகரித்து வரும் பாவங்களின் விளைவா? கிறிஸ்தவர்களும் மரிப்பது ஏன்? வாதை உன் கூடாரத்தை அணுகாது போன்ற வசனங்கள் எங்கே? கொரோனாவைப்பற்றி வேதாகமத்தில் தீர்க்கதரிசனங்கள் உள்ளனவா? வருமானம் இழந்தவர்களின் கதி என்ன? சபை கூடி வராமல் இருப்பது சரியா? மாதக்கணக்காக வீட்டில் அடைபட்ட குடும்பங்களில் அதிகரிக்கும் சண்டைகள் விவாகரத்தில் போய் முடியுமா? உலக சரித்திரத்தில் வந்த மற்ற கொள்ளை நோய்களின் தாக்கம் என்ன? கொள்ளை நோய்கள் சபை சரித்திரத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன? இது சீனாவின் சதியா? கொள்ளை நோய்கள் ஒரு உயிரியல் ஆயுதமா? உலக முடிவின் ஆரம்பமா? இப்படி நம்மத்தியில் எழுந்துள்ள பல கேள்விகளுக்கு வேதாகம ரீதியான பதில்களை தேடுகிறது இச்சிறுநூல்.

இறைபணியாளர் மார்க் அல்ரோய் இப்புத்தகத்தில் கொள்ளை நோய்களின் சரித்திரத்தை கோடிட்டுக்காட்டி...பல நடைமுறை ஆலோசனைகளைக் குறிப்பிட்டிருக்கின்றார். மனந்திரும்புதலும், கர்த்தர் மீது எக்காலத்திலும் நம்பிக்கையாயிருப்பதற்குமான பல விளக்கங்களினூடாக விசுவாச வாழ்க்கையை ஊக்குவிக்கின்றார். நிச்சயமாக இந்த நூல் எமக்கு நடைமுறை ரீதியிலான பல விவரணங்களைக் கற்றுத் தந்து உதவிடும் என்பதால் அனைத்து தேவபிள்ளைகளும் இதனைப் படித்துப்பயன்பெற வேண்டும்.

Pastor Anton Jospeh, TCF International Ministries, Zurich, Swziterland



எம் மார்க் அல்ரோய், MIT, MBA, MA, PhD (M. Alroy Mascrenghe) ஆசியாவில் பல நாடுகளில் இறையியல் கற்பிக்கிறார். பன்னிரண்டு வயதில் இயேசுவை ஏற்றுக்கொண்ட இவர், தற்போது இலங்கை மெதடிஸ்த சபையின் உள்ளூர் பிரசங்கியாகவும் இருக்கிறார். இவர் தமிழில் எழுதிய வேதாகம விளக்கவுரைகள் பதினைந்து நாடுகளில் உபயோகத்தில் உள்ளன. இவர் ஆங்கிலத்தில் எழுதிய நூல்களும் கட்டுரைகளும் அமெரிக்காவில் பல புகழ் பெற்ற பதிப்பகங்களால் வெளியிடப்பட்டிருக்கின்றன.

TCF international

ISBN 978-624-97869-0-5
9 786249 786905
Rs.130/-